

# குர்ஆனின் குரல்

رَجب - شعبان - ١٤٤٥

பிப்ரவரி - 2024

₹25/-

999®
BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# தீனிற்காக துன்யாவை துறந்தவர்

وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ
مَرْضَاتِ اللّٰهِ ؕ وَاللّٰهُ رَءُوْفٌ بِالْعِبَادِ

“இன்னும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைத்தேடி தம் உயிரை விற்று (அதாவது தம்மையே தியாகஞ் செய்து) விடுகிறவரும் மனிதர்களில் இருக்கின்றார்; அல்லாஹ் தன் அடியார்களிடம் மிக்க கிருபையுள்ளவன்” – அல்குர்ஆன் (2 : 207)

---

அல்லாஹ்வின் பொருத்தம் தேடி, இஸ்லாத்திற்காக, ஈமானை பாதுகாப்பதற்காக தன் சொத்துக்களை எல்லாம் இழந்து, இம்மார்க்கத்தைக் கட்டிக் காத்தவர்கள் நபித் தோழர்கள் - ஸஹாபாக்கள். அவர்களில் ஒருவர் ஹள்ரத் ஸுஹைப் ரூமி (ரளி). இவர்கள் மக்கா நகரை துறந்து மதீனா செல்வதற்காக வெளியேறிய பொழுது குறைஷிக் காபிர்கள் வழி மறித்தார்கள். அப்பொழுது ஸுஹைப் (ரளி) அவர்கள், “ஓ குறைஷிகளே! என்னை உங்களுக்கு தெரியும். என் அம்புகள் ஒன்று கூட வீணாகாது. என் அம்புகள் தீர்ந்து விட்டால் என் உடலில் கடைசி மூச்சு உள்ள வரை என் வாளால் போராடுவேன். இல்லையெனில் என் பொருள், செல்வம், சொத்துக்களை கூட எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு பாதை விடுங்கள்” என்றார்கள்.

குறைஷிகள் அதற்கு ஒத்துக் கொண்டு வழிவிட்டார்கள். நபியவர்களின் தர்பாருக்குள் நுழைந்த பொழுது மேற்கூறப்பட்ட வசனம் இறங்கியது. அல்லாஹ்வின் பொருத்தம் தேடி தன் ஆன்மாவை விற்பவர்களும் நபித்தோழர்களில் உள்ளார்கள் எனப் புகழ்ந்து ஆயத்தை அல்லாஹ் இறக்கினான். நபி (ஸல்) அவர்களும் புகழ்ந்து “உமது வியாபாரம் இலாபம் பெற்று விட்டது” என்றார்கள். அப்புனிதர்களுக்கு இவ்வுலகம் அற்பமானது. சொற்பமானது. நிலையற்றது. ஈமானிற்கு நிகர் ஏதுமில்லை என விளங்கி விட்டது போல நமக்கும் அல்லாஹ் விளங்க வைப்பானாக!

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# கேள்வி கணக்கு இலேசாக வேண்டுமே!

عَنْ عَائِشَةَ ـ قَالَتْ: سَمِعْتُ النَّبِيَّ ـ يَقُولُ فِي بَعْضِ صَلَاتِهِ: اللَّهُمَّ حَاسِبْنِي حِسَاباً يَسِيرًا فَلَمَّا انْصَرَفَ قُلْتُ: يَا نَبِيَّ اللَّهِ مَا الْحِسَابُ الْيَسِيرُ؟ قَالَ: أَنْ يَنْظُرَ فِي كِتَابِهِ فَيَتَجَاوَزَ عَنْهُ .إِنَّهُ مَنْ نُوقِشَ الْحِسَابَ يَوْمَئِذٍ يَا عَائِشَةُ هَلَكَ

“நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை தொழுகையில் “யாஅல்லாஹ், எனது கேள்வி கணக்கை எளிதாக்குவாயாக!” என்று துஆச் செய்யக் கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் தொழுது முடித்தபின் “அல்லாஹ்வின் தூதரே! எளிதான கேள்வி கணக்கு என்றால் என்ன?” என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன். “அடியானின் அமல்களின் பட்டோலையை மேலோட்டமாகப் பார்த்து, அவனை மன்னித்து விடுவதாகும்”, ஆயிஷாவே! அந்நாளில் எவரிடம் கேள்வி கணக்கு கடினமாகக் கேட்கப்படுமோ, அவர் நாசமாகி விடுவார்” என்று ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்.
(நூல்:முஸ்னத் அஹ்மத்)

மறுமையின் வெற்றியை ஒவ்வொரு மாதமும் வெளிப்படுத்தித் தரும் குர்ஆனின் குரலை அல்லாஹ் பெருகச் செய்வானாக!

செய்யது சகோதரர்கள்
நாகூர்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 67 எதிரொலி – 2
ரஜப் – ஷஅபான் 1445 பிப்ரவரி–2024

## அலட்சியம் வேண்டவே வேண்டாம்!

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாரதீய ஜனதாவின் அடிப்படைக் கொள்கை, முஸ்லிம்களை இந்தியாவிலிருந்து அகற்ற வேண்டும் என்பதுதான்.

இப்போது இந்த தீய சக்திகள் இந்தியாவை ஆளும் பொறுப்பில் இருப்பதால் முஸ்லிம்களை அடியோடு வேரறுத்து வருகிறார்கள்.

கடந்த பத்தாண்டுகளில் ஒன்றிய பாரதீய ஜனதா ஆட்சியில் மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை.

இதனை மறைக்க ராமர் கோவில் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளை பாரதீய ஜனதா கட்சி கையிலெடுத்து அதன் மூலம் அரசியல் இலாபம் பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நாட்டில் வேலை வாய்ப்புகள் பெருகவில்லை. பொருளாதாரம் முன்னேற்றத்தை அடையவில்லை. நரேந்திர மோடி அளித்த வாக்குறுதியின்படி ஏழை எளிய மக்களுக்கு நல்ல நாட்கள் வரவில்லை. நாடு முழுவதும் மக்கள் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட வசதிகளை பெறாமல் சிரமத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால், பாரதீய ஜனதாவின் தலைவர்கள் மிகப் பெரிய சாதனைகளை செய்துவிட்டதாக வெற்று முழக்கங்களை பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இந்த வெற்று முழக்கங்கள் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பலனளிக்காது என்பதால் ராமர் கோவில் உள்ளிட்ட விவகாரங்களை கையிலெடுத்து மக்களை திசை திருப்பி வருகிறார்கள்.

குறிப்பாக, வட மாநில மக்கள் மத்தியில் ஒருவித பதற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்துத்துவ அமைப்புகளும், பாரதீய ஜனதா கட்சியும் மக்களை

குழப்பிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால், தற்போது நிலைமை மாறி வருகிறது. பாரதீய ஜனதாவின் வெற்று முழக்கங்கள் குறித்து வடமாநில மக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.

இந்தியா பல்வேறு இனங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு கலாச்சாரங்கள், பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் ஒரு மதச்சார்ப்பற்ற நாடு, இந்திய அரசியலமைப்பு சட்டமும் இந்தியாவை மதச்சார்பற்ற நாடாக பிரகடனம் செய்துள்ளது. நாட்டில் வாழும் அனைத்து தரப்பு மக்களும் தங்களது மொழி, கலாச்சாரம், பண்பாட்டை பின்பற்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால், இந்த ஒற்றுமையை சீர்குலைக்க ஒன்றிய பாரதீய ஜனதா அரசு தொடர்ந்து முயற்சிகளை செய்து வருகிறது. "ஒரே நாடு – ஒரே மொழி – ஒரே கலாச்சாரம்" என புதிய சிந்தனைகளை நாட்டில் விதைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதை மறந்துவிட்டு, இந்தியாவில் வாழும் 25 கோடி முஸ்லிம்களையும் பாரதீய ஜனதா புறக்கணித்து வருகிறது.

ஒன்றியத்தில் உள்ள பாரதீய ஜனதா அரசில் ஒரு முஸ்லிம் அமைச்சர் கூட இல்லாத நிலை இருந்து வருகிறது. பாரதீய ஜனதாவில் முஸ்லிம் எம்.பி.க்கள் கிடையாது.

முஸ்லிம்களின் வாக்குகள் தங்களுக்கு வேண்டாம் என பாரதீய ஜனதாவினர் வெளிப்படையாக பேசி வருகிறார்கள். இதன் மூலம் முஸ்லிம்கள் மீது அவர்கள் எத்தகைய வன்மத்துடன் இருக்கிறார்கள் என்பதை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அனைத்து துறைகளிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். அரசு உயர் பதவிகளில் முஸ்லிம்கள் இல்லை. நீதிமன்றங்களில் முஸ்லிம்களின் மக்கள் தொகைக்கேற்ப நீதிபதிகள் இல்லை. கல்வி, வேலைவாய்ப்புகளில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

மதச்சார்பற்ற இந்தியாவில் முஸ்லிம்களை அழித்துவிட பாரதீய ஜனதா உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சி.ஏ.ஏ. போன்ற திட்டங்களை

அமல்படுத்தி, முஸ்லிம்களுக்கு நெருக்கடிகளை தொடர்ந்து பாரதீய ஜனதா தந்துகொண்டே இருக்கிறது.

நேற்றுவரை இந்துத்துவா கூட்டணியிலிருந்த ஒரு சில கட்சிகள், மக்களவைத் தேர்தல் வருவதால் "இந்துத்துவா கூட்டணியை முறித்து விட்டோம். எனவே, முஸ்லிம்களே! எங்களுக்கு வாக்களியுங்கள்" என்று கூறி வலம் வருகிறார்கள்.

இவர்கள் விஷயத்தில் நாம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்கள் மட்டுமின்றி, இந்துத்துவாவை எதிர்க்கின்றோம் எனக் கூறி முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் அமைப்புகள் வெவ்வேறு திசைகளில் பிரிந்து இந்துத்துவாவுக்கு எதிரான வாக்குகளை பிரிப்பவர்களிடத்திலும் முஸ்லிம்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மக்களவைத் தேர்தல் ஒரு சில மாதங்களில் நடைபெறவுள்ளது. எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு வினாடி கூட தாமதமின்றி பாரதீய ஜனதா மற்றும் ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு எதிரான வாக்குகளை ஒன்று திரட்டிட கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, அலட்சியம் வேண்டவே வேண்டாம்!

தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்-
குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call-
Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள்
தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS www.cityadsbooks.com

# வாங்கி விட்டீர்களா...

# பிரார்த்தனை செய்வது எப்படி?

## ஒன்று வாங்கினால்
## மற்றொன்று இலவசம்!

வரக்கூடிய ரமளானை முறையாக முழுமையாக பயன்படுத்தி, நம் அதிகமான நேரங்களை துஆகளிலேயே செலவு செய்வதற்கு வழிகாட்டக்கூடிய அற்புதமான நூல்தான் **"பிரார்த்தனை செய்வது எப்படி?"** எனும் நன்நூல் ஆகும்.




ஆசிரியர் : அல்லாமா

**அ.மு.அப்துல் ஜப்பார் பாகவீ** ஹள்ரத் (ரஹ்)

**நூல் விலை : ரூ.25/- மட்டுமே!**

தபால் செலவு தனி!

**உடன் இந்த நூலை வாங்குங்கள்!**

**"நமக்கு உதவும் நாற்பது துஆகள்"**

**எனும் நூலை இலவசமாக பெறுங்கள்!!**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## குர்ஆனின் குரல்

தபால் பெட்டி எண் : 45, 4/25, எழில் நகர்,
மேலமடை, **மதுரை - 625 020.**

வாட்ஸப் மற்றும் அலைபேசி தொடர்புக்கு :

**9442056547, 9486729192**

☛ பொதுவாக ஒருவர் மற்றொருவருக்கு ஸலாம் கூறும்போது "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காதுஹு" என்று சொல்கிறார். ஆனால், தொழுகையில் ஸலாம் கொடுக்கும்போது மட்டும் "வபரக்காதுஹு" என்பதை சேர்க்கப்படுவதில்லையே! ஏன்? இவ்வாறே, அரபி இலக்கணப்படி ஸலாம் சொல்லப்படுபவர் ஒருவராக இருந்தால் "அஸ்ஸலாமு அலைக்க" என்றும், பலராக இருந்தால் "அலைக்கும்" என்றும் சொல்வது முறையாகும். ஆனால், தொழுகையில் ஒரே நிலை மட்டும் கடைபிடிக்கப்படுவது ஏன்?

**திருவண்ணாமலையிலிருந்து அஸதுல்லாஹ்**

✍ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் தொழுகையில் ஸலாம் கொடுக்கும்போது "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி" என்றே கூறியுள்ளதாக ஹதீஸ்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, நாம் நமது தொழுகைகளிலும் அந்த சுன்னத்தான நடைமுறையை கருத்தில் கொண்டு மேற்சொன்ன வார்த்தையை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று மார்க்கச் சட்ட மேதைகள் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்.

எனவே, அந்த வார்த்தையை அதை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தி சொல்வது, சுன்னத்துக்கு மாற்றமான செயலாகும். அந்த நிலையில், அவனது தொழுகை நிறைவேறி விடும் என்றாலும் கூடுதல் - குறைவின் காரணமாக தொழுகையில் அது இலேசான பாதிப்புகளை ஏற்படுத்தும்.

நாமாக எதையும் ஆராய்ந்து நமது அறிவுக்கு தகுந்தவாறு சிந்தித்து மார்க்கக் கடமைகளை செயல்படுத்த நினைத்தால் நாம் நமது அறிவின் மீதுள்ள நம்பிக்கை காரணமாக மார்க்கத்தைவிட்டும்

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ

**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலபாதீ

கூட வெளியேற வேண்டிய நிலைமை வந்து விடலாம். **கவனம்! மிக மிக கவனம்!**

☛ ஒருவர் நீண்ட பயணம் மேற்கொள்ளும்போது ஒளுச் செய்வதற்கு தண்ணீர் கிடைக்க வில்லை. எனவே, தய்யமும் செய்துவிட்டு தொழ ஆரம்பித்து விடுகிறார். தொழுது கொண்டி ருக்கும்போது அருகிலுள்ள வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பதைப் பார்க்கிறார். இப்போது அவர் என்ன செய்ய வேண்டும்?

**ஆர்.எஸ்.மங்கலத்திலிருந்து**
**உமைரா ஆஸி:பா**

✍ தொழுகையை இடையிலே முறித்துவிட்டு, அங்கு சென்று அந்த வாய்க்காலில் ஒளுச் செய்து விட்டு பிறகு மீண்டும் தொழுகையை முழுமையாக தொழுக வேண்டும்.

☛ வயதானவர்கள் சிறுநீர் கழிக்கும்போது உட்கார முடியாததால் நின்று கொண்டு சிறுநீர் கழித்து விட்டு சுத்தம் செய்து கொள்கிறார்கள். இதனால் தொழுகையில் மன உளைச்சல் ஏற்படுவதாக உணர்கிறார்கள். மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

✍ கீழே உட்கார்ந்து சிறுநீர் கழிக்க முடியாதவர்கள் தற் காலத்தில் உபயோகப்படுத்தக் கூடிய மாற்று உபகரணங்களை தாராளமாக பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, சேரில் அமருவது போன்று உட்கார்ந்து தனது சுயத்தேவைகளை முடித்துக் கொள்ளலாம்.

எங்காவது, எப்போதாவது இது வும் முடியாமல் போகும் பட்சத் தில் இக்கட்டான ஒரு சூழ்நிலை யில் நின்று கொண்டு சிறுநீர் கழித்துவிட்டு தம் உடம்பையும், ஆடைகளையும் முழுமையாக சுத்தம் செய்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

மலம், ஜலம் கழித்ததற்குப் பின் னால் முழுமையான சுத்தமின்றி ஒளுச் செய்ய நாடுவது மார்க்கத் தில் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படி செய்வதால் அந்த ஒளு வும் நிறைவேறாமல் போய் விடும். அதன் தொடர்ச்சியாக அவர் தொழுகக்கூடிய தொழுகை யும் வீணாய் போய் விடும்.

இதுமட்டுமின்றி, இதுபோன்ற சுயத் தேவைகளுக்குப் பின் னால் சுத்தம் செய்வதில் பொடு போக்குத்தனமாக இருப்பவ ருக்கு கபுரின் வேதனை கடுமை யாக இருக்கும் என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே, முடிந்தவரை அவசிய மாக அமர்ந்து தன் தேவைகளை நிறைவேற்றுவதே சிறந்த செயலாகும். நிர்ப்பந்தமான சூழ்நிலையில் மாற்று வழி

களைத் தேர்ந்தெடுக்கும்போது சுத்தம் செய்யும் விஷயத்தில் மிக மிக கவனமாக செயல்படுவது மார்க்கத்தின் கண்டிப்பான சட்டமாகும்.

☛ சில மனிதர்கள் பயம், அச்சம், பாவம் போன்ற நிலைகளுக்குள்ளாக தங்களை தாங்களே அடமானம் வைத்து மூடிக் கொள்வதால், வேறு எதையும் அவர்கள் செய்ய முடிவதில்லை. இதிலிருந்து விடுபட தெளிவான வழிகள் இருந்தால் கூறுங்களேன்.

✍ "அல்லாஹ்விற்கு மட்டுமே பயப்படுவேன்" என்று உறுதிமானம் எடுத்துக் கொண்டால் வேறு யாருக்கும் பயப்படக்கூடிய சூழ்நிலைகள் இன்ஷா அல்லாஹ் நமக்கு உருவாகாது. யாருடைய பயமோ, மிரட்டலோ அல்லது ஷைத்தானுக்கு அடிபணிந்து, பாவங்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையோ ஏற்படாது.

☛ சில சகோதரர்கள், மனதை ரிலாக்ஸ் செய்வதற்காகவும், உடல் வெப்பநிலையை குறைப்பதற்காகவும் கைதேர்ந்த மசாஜ் சென்டர்களுக்குச் சென்று மசாஜ் செய்து வருவதை வழமையாக்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட மசாஜ் சென்டர்களில் சில இடங்களில் பெண்களும் பணி புரிகிறார்கள். அப்படிப்பட்ட சென்டர்களுக்கு செல்வதற்கு மார்க்கம் அனுமதிக்கிறதா?

**சேலத்திலிருந்து**
**பஷீர் முஹம்மது**

✍ ஆண்களுக்கு பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் மசாஜ் செய்துவிடுவதை மார்க்கம் அறவே அனுமதிக்கவில்லை. நவூதுபில்லாஹ்! ஆண்களுக்கு ஆண்களே மசாஜ் செய்து விடுவதும், பெண்களுக்கு பெண்களே மசாஜ் செய்து விடுவது ஆகுமானதாகும் என்றாலும், அப்போதும் கூட, மறைக்கப்பட வேண்டிய இடங்கள் என்று ஒவ்வொருவருக்கும் எதை சொல்லப்பட்டுள்ளதோ அந்த இடங்களை அவர்களுக்கு காட்டுவதும், அவர்கள் அந்த இடங்களைப் பார்ப்பதும் ஹராமாகும்.

மருத்துவ ரீதியாக வேண்டுமானால் மருத்துவர்கள் அவசியத்தின் அளவு மட்டும் அந்த இடங்களை மருத்துவத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

☛ கண் திருஷ்டி நீங்கிட என்ன ஓத வேண்டும்?

**மங்கலத்திலிருந்து**
**முஹம்மது ஸலாஹுத்தீன்**

✍ லி ஈலாஃபி குறைஷ் என்ற சூராவை ஏழு தடவைகள் ஓதி, நம் உடலின் மீது அல்லது திருஷ்டி படக்கூடிய பொருள்கள் என்று நாம் எவற்றை நினைக்கிறோமோ அந்தப்

பொருள்கள் மீது அல்லது அப்படிப்பட்ட இடங்கள் மீது ஊதிக் கொள்வதோடு, அதை தண்ணீரில் ஊதி தெளித்து விடுவதாலும் இன்ஷா அல்லாஹ் நிறைந்த பலன் களை காணலாம்.

குழந்தைகளின் விஷயத்தில் அதுபோன்ற சந்தேகங்கள் இருக்குமானால், அல்குர்ஆனின் 29வது ஜுஸ்உவின் இரண்டாவது சூராவின் கடைசி ஆயத்துகளான

وَإِن يَكَادُ ٱلَّذِينَ كَفَرُوا۟ لَيُزْلِقُونَكَ بِأَبْصَـٰرِهِمْ لَمَّا سَمِعُوا۟ ٱلذِّكْرَ وَيَقُولُونَ إِنَّهُۥ لَمَجْنُونٌ (٥١)

وَمَا هُوَ إِلَّا ذِكْرٌ لِّلْعَـٰلَمِينَ (٥٢)

(68 : 51, 52) ஆகிய வசனங் களை ஓதி, அந்த குழந்தைகளின் உணவுகளிலும், குடிக்கும் பாலிலும், தண்ணீரிலும் ஊதி குடிக்கக் கொடுத்தால் இன்ஷா அல்லாஹ் விரைவில் முழுமை யான குணங்கள் கிடைக்கும்.

☛ என் மகனுக்கு "முஹம்மது ஆசிர்" என்று பெயர் வைத் துள்ளேன். அந்தப் பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எப்படி எழுதுவது? அதன் அர்த்தம் என்ன?

**நாமக்கல்லிலிருந்து**
**அப்துர் ரஹ்மான்**

✍ அந்தப் பெயருக்கு "எடுத்துக் கொள்பவர், கைபற்றுபவர், எதிரிகளைப் பிடிப்பவர்" என்பன போன்ற பொருள்கள் கொள்ளப்படும். தமிழில் "ஆஸிர்" என்றும், ஆங்கிலத்தில் "AASIR" என்றும் எழுதப்படும்.

☛ கணவன் - மனைவி இரு வரும் ஹஜ்ஜுக்குச் சென்று வந்தார்கள். வந்ததற்குப்பின்பு மனைவி தன் கணவரை வீட்டிலோ அல்லது பொது இடத்திலோ "ஹாஜியாரே" என்று அழைக்கிறார். இப்படி ஹஜ்ஜுடைய கடமையை வெளிப்படுத்திக் கொள் வதற்காக தன்னை ஹாஜி என்று போட்டுக் கொள்வதும், பிறரை இப்படி அழைக்கத் தூண்டுவதும் சரிதானா?

**ஒசூரிலிருந்து**
**முஸம்மில்**

✍ அப்படி ஒரு பட்டத்தை பெருமைக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் போட்டுக் கொள்வதும் அல்லது அப்படி பிறரை அழைக்கத் தூண்டுவதும் மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட விஷயமா கும். இயல்பாக அல்லாஹ்வின் நிஅமத்துகளை வெளிப்படுத் தும் நோக்கத்துடன் அவ்வாறு போட்டுக் கொள்வது தவறல்ல. நம் முன்னோர்களும் நமக்கு வழிகாட்டியாக வாழ்ந்த யாரும் தங்களைத் தாங்களே இப்படி

Since 1977-2023
46
Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

# மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

பிரபல்யபடுத்திக் கொண்டதாக வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்படவில்லை. எனவே, நாமும் அவர்களை பின்பற்றி எளிமையான வாழ்வு முறைகளை கையாளுவோம். ஆடம்பரமும், பகட்டும் மனிதர்களின் வாழ்க்கையை சீரழித்து சின்னா பின்னமாக்கி விடும் என்பதை கொஞ்சம் கவனத்தில் கொள்வோம்.

வீட்டை ஒத்திக்கு வாங்கி, வாடகைக்கு விடலாமா?

**மேட்டுப்பாளையத்திலிருந்து**
**முஹம்மத முஜம்மில்**

மார்க்கம் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

ஒருவர் சுமார் 85 வயதுடையவர். வயதுமுதிர்வின் காரணமாக நடப்பது குறைவு. எனவே, தன்னால் முடிந்தளவு உட்கார்ந்த இடத்திலேயே வணக்க - வழிபாடுகள் செய்து, ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் நிறைய தான - தர்மங்கள் செய்கிறார். குறிப்பாக, ரமளானுடைய காலக்கட்டத்தில் பல ஏழை குடும்பங்களுக்கு துணிமணிகள் எடுத்துக் கொடுக்கிறார். இப்படிப்பட்டவருக்கு அல்லாஹ் நன்மையே செய்வான் என்ற நம்பிக்கை இருந்தாலும் மென்மேலும் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

**நாமக்கல்லிலிருந்து**
**சைய்யது ரஹ்மான்**

நமது பொதுவான தான - தர்மங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், அல்லாஹ்வுடைய கடமைகளிலும், அடியார்களுடைய கடமைகளிலும் குறைவு வந்து விடாமல் பார்த்துக் கொண்டாலே இன்ஷா அல்லாஹ் அந்த வல்லோனின் அன்பை பெற்று விடலாம்.

துணி துவைத்தபின்பு, அந்த துணிகள் மணம் பெறுவதற்காக கம்போர்ட் என்ற வாசனை திரவியம் பயன்படுத்தப்படுகிறது. அதில் ஆல்கஹால் போன்ற திரவங்கள் கலந்திருக்குமானால் அப்படிப்பட்ட ஆடைகளை தொழுகையாளிகள் பயன்படுத்தலாமா?

**பள்ளிப்பாளையத்திலிருந்து**
**பி.ஷேக் அலாவுதீன்**

பயன்படுத்தலாம். தொழுகை கூடி விடும்.

தற்போது பள்ளிவாசலுக்கு தொழ வரக்கூடிய சில சகோதரர்கள், கைகளில் வெள்ளி மோதிரம், கை மணிக்கட்டுகளில் கனமான வளையம், கழுத்தில் கயிறு போன்றவற்றை அணிந்து கொண்டு வருகிறார்கள். இது விஷயத்தில் மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**ஹுசைன் கான்**

வெள்ளி மோதிரம் அணிவதற்கு மார்க்கத்தில் அனுமதி உண்டு. அதன் எடை 4 கிராம் 374 மில்லி கிராமாகும். இதை

விட அதிகளவையுள்ளதை அணிவது கூடாது. இவ்வாறே, 2 - 3 மோதிரங்கள் அணிவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்று மார்க்கச் சட்ட நிபுணர்கள் நமக்கு அறிவுறுத்துகிறார்கள்.

மேலும், மார்க்கத்தில் கைதேர்ந்த இறையச்சமுள்ள நல்லோர்களால் குர்ஆன் - ஹதீஸ்களின் வார்த்தைகளைக் கொண்டு ஓதி அல்லது எழுதிக் கொடுக்கப் பட்ட தாவீஜ்களை அணிந்து கொள்ளலாம்.

இதனன்றி, மாற்றுமத கலாச்சாரங்களின் அடிப்படையில் அவர்களைப் போன்று ஆடை அணிவதும், முடி வைப்பதும் - அதை வெட்டுவதும், கை கால்களில் அனாவசியமாகவளையங்கள் மற்றும் செயின்களை அணிந்து கொள்வதும், பச்சை குத்திக் கொள்வதும் எந்த விதத்திலும் மார்க்கத்திற்கு சம்பந்தமில்லாத மார்க்கம் அறவே அனுமதிக்காத செயல்களாகும்.

குர்ஆனின் குரலில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கக்கூடிய "சீரத்துன் நபி (ஸல்) அவர்களின் சீரிய பார்வையில்..." என்ற தொடர் கட்டுரையை ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும். அல்லாஹ் நமது எழுத்துக்களைக் கொண்டு நம் சமுதாய இளைஞர்களுக்கு நிரப்பமான ஹிதாயத்துகளை வழங்குவானாக!

☛ வங்கியில் நாம் போடக்கூடிய S.B. கணக்குகளுக்கும், நிரந்தர வைப்பாக நாம் போட்டு வைக்கக்கூடிய F.D. கணக்குகளுக்கும் வட்டி வருகின்றது. அதை நாம் தனியாக எடுத்து அனாதை விடுதிகளுக்கும், பிற மத யாசகர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும் கொடுத்து உதவலாமா?

✍ இம்மை - மறுமையுடைய எந்த நன்மைகளையும் எதிர் பார்க்காமல் குப்பையில் போட வேண்டிய வட்டிப்பணங்களை அவர்களாவதுபயன்பெறட்டுமே என்ற நோக்கத்தில் மேற்படி நபர்களுக்கு கொடுத்து உதவுவது ஆகுமானதாகும்.

எனினும், இஸ்லாமிய பொது நிறுவனங்களுக்கு அதை கொடுக்க நாடினால், இது வட்டிப் பணம் என்று சொல்லி அடையாளப்படுத்தி கொடுப்பது அவசியமாகும். தனி நபர்களுக்கு கொடுக்கும்போது அப்படி எதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

☛ நான் தினந்தோறும் சூரா அர்ரஹ்மான், ஸஜ்தா, முஜ்ஜம்மில், துகான் போன்ற சூராக்களை ஓதி வருகிறேன். இதை எந்த நேரத்தில் ஓதுவது நல்லது?

✍ மேற்படி சூராக்களை மக்ரிபிலிருந்து இரவு படுப்பதற்கு முன்னுள்ள நேரங்கள் வரையும் ஓதிக் கொள்ளலாம்.

மரணித்தவர்களின் உடலுறுப்புகளை தானம் செய்வதற்கு மார்க்கம் ஏன் தடை விதிக்கிறது?

**பணங்காட்டூரிலிருந்து**
**ஜே.முஹம்மது யூசுஃப்**

நம் உடல் முழுவதும் அல்லாஹ் நமக்கு அமானிதமாக கொடுத்த பொருட்களாகும். அமானிதப் பொருட்களை பெற்றவரிடமே திரும்ப கொடுப்பதுதான் மார்க்கமும், உலகமும் கூறக்கூடிய சட்டமாகும். எனவே, உடலுடைய ஒவ்வோர் உறுப்பையும் அதை அமானிதமாக கொடுத்த அல்லாஹ்விடமே முறையாக ஒப்படைப்பது ஒவ்வொரு மனிதனின் கட்டாயக் கடமையாகும். எனவே, நாம் இறந்து விடப்போகிறோம் எனத் தெரிந்து நம் உடலுறுப்புகளை நம் இஷ்டப்படி தானம் செய்வதற்கு அது நமக்கு சொந்தமான உறுப்பல்ல என்பதை முதலில் நாம் உணர வேண்டும்.

அடிக்கடி ஏதாவது ஒரு நோய் ஏற்பட்டு சிரமம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அதிலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி?

**மங்கலத்திலிருந்து**
**முஹம்மது தாவூத் அலீ**

முதற்கட்டமாக நம்பிக்கையுள்ள சிறந்த மருத்துவரை அணுகுங்கள். அத்துடன் அவர் கொடுக்கக்கூடிய சிகிச்சையின் போதும், மருந்துகளை உட்கொள்ளும் போதும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். ஆசைக்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ, பெருமைக்காகவோ, அளவுக்கதிகமாகவோ எதையும் சாப்பிடாதீர்கள். பசிக்குத் தகுந்தவாறு அவசியத் தேவையின் அளவு மட்டும் உணவுகளையும், பழங்களையும் சாப்பிட்டுக் கொள்ளுங்கள். ஹதீஸ்களில் வரக்கூடிய

اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي دِينِي وَدُنْيَايَ وَأَهْلِي، وَمَالِي،

என்ற துஆவை அதிகமாக ஓதி வாருங்கள். ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடத்தில் "உடல் சுகம்" என்ற பொருள்படும்படியான ஆஃபியத்தைக் கேளுங்கள் என்று நமக்கு அறிவுறுத்தி இருக்கின்றார்கள். எனவே, மேற்படி துஆவை நாம் அதிகமதிகம் ஓதுவோம். நமக்கு வரக்கூடிய நோய்களிலிருந்தும், சிரமங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் நம்மை பாதுகாப்பதற்கு அல்லாஹ் வழிவகை செய்வான்.

## நன்றி செலுத்துவோம்!

"மக்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவனாக ஆக மாட்டான்." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதி)


வாழ்த்துக்களுடன்....

# ARM

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**
**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

எப்போதாவது நாம் தீய கனவு எதையாவது கண்டு, அதை மற்றவரிடம் சொல்லி அவர் அதற்கு தவறுதலான விளக்கத்தை அளித்துவிட்டால் அது அப்படியே நடந்து விடும் என்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். என்னுடைய கனவு உடைய விஷயத்திலும் அப்படி ஏதாவது நடந்துவிடுமோ என்று நான் பயப்படுகிறேன். விளக்கம் தேவை.

**கோவையிலிருந்து**
**அஸ்மா பானு**

பொதுவாக நல்ல கனவு, தீய கனவு என்றில்லாமல் எந்த கனவையும் யாரிடமாவது சொல்லி விளக்கம் கேட்பதை அவசியம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அது நல்லதாக இருந்தாலும், தீயதாக இருந்தாலும், விளக்கம் கேட்கப்படுபவர் நல்லவராக இருந்தாலும், தீயவராக இருந்தாலும் அந்த கனவிற்கு அவர் எதை சொல்கிறாரோ அதுவே அதன் விளக்கமாக அமைந்து விடக் கூடும். எனவே, கனவு கண்ட பின்பு அது சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தால் அல்லாஹ்விடம் அதன் மகிழ்ச்சியை வேண்டி துஆ செய்து கொள்ள வேண்டும். திடுக்கத்தையும், பயத்தையும் கொடுத்தால் அதன் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக் கொள்ள வேண்டும். கனவு கண்டு, திடுக்கிட்டு கண் விழித்தால் ஷைத்தானை விட்டும் பாதுகாப்பு தேடி விட்டு நாம் படுத்திருக்கும் திசையை விட்டும் மறுபக்கமாக திரும்பிப் படுத்துக் கொள்ள வேண்டும். அந்நேரத்தில் "அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தா னிர்ரஜீம்" என்று ஓதி, ஆயத்துல் குர்ஸீயை ஓதி தன் நெஞ்சிற்குள்ளாக ஊதிக் கொள்ள வேண்டும். இதுவே, கனவு காணக் கூடியவர்களுக்கு மார்க்கம் கூறியிருக்கக் கூடிய பொதுவான வழிகாட்டுதலாகும்.

இதுவன்றி, கண்டிப்பாக நாம் கண்ட கனவுக்கு விளக்கத்தை அறிந்தால்தான் நமக்கு நிம்மதி ஏற்படும் என்ற சூழ்நிலை இருந்தால், இறையச்சமுள்ள மார்க்கப் பேணுதலுள்ள கனவுகளுக்கு விளக்கம் சொல்வதில் கைதேர்ந்த நல்லோர்களிடம் சென்று இரகசியமாக கனவைக் கூறி அதற்கு விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே, நாம் காணும் கனவை காணுபவர்களிடமெல்லாம் பொதுவாக சொல்லிக் கொண்டிருப்பது நமக்கு நல்லதாக ஆகாது. அதனால், சில சமயங்களில் நமக்கு வர வேண்டிய நலவுகள் தட்டிப் போகலாம். சில சமயங்களில் நமக்கு தகாத தீமைகள் ஏற்படலாம்.

# தண்ணீர்! தண்ணீர்!!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"வானத்திலிருந்து பரக்கத்தான தண்ணீரை நாம் இறக்கி வைத்து, அதன் மூலம், தோட்டங்களையும், அறுவடை செய்யப்படும் தானியங்களையும் நாம் முளைக்கச் செய்தோம்"

- அல்குர்ஆன் (50 : 9)

"இறந்துவிட்ட பூமியை நாம் உயிர்பித்தோம்"

- அல்குர்ஆன் (50 : 11)

"வானத்திலிருந்து தண்ணீரை அவன் இறக்கினான். பிறகு தம் அளவுக்கேற்ப, ஓடைகள் ஓடின, பிறகு வெள்ளம், நுரையை சுமந்து சென்றது"

- அல்குர்ஆன் (13 : 17)

"வறண்ட பூமியின் பக்கம், நிச்சயமாக நாம் தண்ணீரை இழுத்து வந்து, பிறகு அதைக் கொண்டு, பயிரை நாம் வெளியாக்குகிறோம்"

- அல்குர்ஆன் (32 : 27)

"கொட்டுகின்ற தண்ணீரைக் கொண்டு, வானத்தின் வாயில்களை நாம் திறந்து விட்டோம்"

- அல்குர்ஆன் (54 : 11)

"பூமியில் ஊற்றுக்களை நாம் பெருக்கெடுத்து ஓடச் செய்தோம்"

- அல்குர்ஆன் (54 : 12)

"நீங்கள் பருகும் தண்ணீரை கவனித்தீர்களா?, அதை மேகத்திலிருந்து நீங்கள் இறக்குகிறீர்களா? அல்லது நாம் இறக்குகிறோமா? நாம் நாடினால் அதைக் [குடிக்க முடியாதபடி] கைப்பாக ஆக்கி விடுவோம். எனவே, [இதற்காக] நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா?"

- அல்குர்ஆன் (56 : 68, 69, 70)

திருகுர்ஆனில் தண்ணீரைப் பற்றி 45 அத்தியாயங்களிலும், நதியைப்பற்றி 48 அத்தியாயங்களிலும், கடலைப் பற்றி 32 அத்தியாயங்களிலும், ஊற்றைப் பற்றி 6 அத்தியாயங்களிலும் கூறப்பட்டுள்ளது.

மனிதனுக்கு பிரதானமாக உள்ள தண்ணீர் உடலில் குறைந்து விட்டால், அது இறப்புக்கு காரணமாகி விடும், பயிர் பச்சைகளுக்கு தண்ணீர் இல்லாவிட்டால், காய்ந்து

சருகாகி விடும் அல்லது முளைக்காமலே போய்விடும், மற்ற ஜீவராசிளும் தண்ணீன்றி வாழ முடியாது. தண்ணீரைத் தேடி பல கி.மீட்டர்கள் நடந்து செல்லும் அவலத்தையும் காண்கிறோம், விரயம் செய்யாதீர் என்ற குர்ஆன், ஹதீஸ் அறிவுரைகளை அலட்சியப் படுத்தப்படும் இடங்களில் பஞ்சம் ஏற்படுவதைப் பார்க்கலாம்.

அல்லாஹுவால் இலவசமாக வழங்கப்படும் தண்ணீர் விற்பனை செய்யப்படுகிறது, ஒரு ரூபாய் அடக்கமாகும் பாட்டில் பத்து ரூபாயிலிருந்து அதிக விலைக்கு விற்கப்பட்டு, கோடிக்கு சொந்தக்காரர்களாக ஆகி தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு வழி வகுக்கிறார்கள்.

இறைவா! உன் அடியார்களுக்கும், விலங்குகளுக்கும் தண்ணீர் புகட்டு; உன் ரஹ்மத்தை பரவலாக்கு; காய்ந்து போன ஊர்களை செழிப்பாக்கு என்று பிரார்த்தித்த நபிகளார் மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தியாக்க ஹள்ரத் உஸ்மான் (ரளி) அவர்கள் மூலம் கிணற்றை விலைக்கு வாங்கி மக்களுக்கு பயன்படச் செய்துள்ளார்கள்.

"பக்கத்து வீட்டான் பசியுடனிருப்பதை சகிக்க மாட்டான் ஒரு முஃமின்" என்ற நபி மணியின் நல்லுரை உலக மக்கள் அனைவரின் சிந்தனையிலும் நுழைய வேண்டும்.

வரலாற்று முக்கியத்துவமும், வாழ்வா சாவா என்ற இறுதி முடிவெடுக்கப்பட்டதுமான பத்ருப் போரின்போது அந்தக் கொடூர குணம் கொண்ட எதிரிகளுக்கும், பதட்டமான அந்த நேரத்திலும் தண்ணீர் தந்த தாஹா நபியை நினைத்துப் பார்க்க வேண்டாமா?

இராக் நாட்டு பக்தாது நகரிலிருந்து, மக்காவுக்கு வாய்க்கால் வழியாக தண்ணீர் கொண்டு வந்த மன்னர் ஹாரூன் ரஷீதின் மனைவி ஜுபைதா அம்மையாரின் தியாகத்தை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

கேன் தண்ணீரை நம்பி, கேணித் தண்ணீரை இழந்து நிற்பவர்களிடம் பரந்த மனப்பான்மை இல்லாமல் போய் விட்டது.

தேசம் பற்றி வாய்கிழியப் பேசுவோருக்கு தேசியம் என்பதற்கு பொருள் தெரியாமல் போய்விட்டது.

இன, மொழிப் பாகுபாடு இல்லை எனக்கூறும் இஸ்லாம், இன்றும் அதிலிருந்து மாறுபடவில்லை, பின்வாங்கவில்லை, உலகம் முழுவதும் அள்ளிச் செல்லும் ஜம்ஜம் நீருக்கு கட்டுப்பாடு இல்லை.

மாநிலத்துக்கு மாநிலம் தண்ணீர் தர மறுப்பது நியாயமா? அல்லாஹ், நானும் தர

மாட்டேன் என்று மழையை நிறுத்திக் கொண்டால் என்ன செய்வீர்கள்?

ஜாதி, மதம் பார்க்காமல் அருளை அள்ளி வழங்கும் இறைவனை மறந்து இங்கே ஜாதி, மதம், இனம், மொழி பார்த்து சொத்துக்கள், உயிர் சேதாரம்விளைவித்து ஆடுமாடு களை விட அலங் கோலமாக நடக்கும் மக்களே! பூகம்பம், புயல் ஏற்பட்டு அழிவைத் தந்தால், அப்போது யாரை எதிர்ப்பீர்கள்? உங்களால் என்ன செய்ய இயலும்?.

தாகித்த நாய்க்கு தண்ணீர் தந்ததால், சுவனம் கிடைத்ததாகவரலாற்றுக் குறிப்புண்டு. தவித்த வாய்க்கு தண்ணீர் தராதவன் என்ற வழக்குச் சொல்லுமுண்டு. வெள்ளப் பெருக்கின்போது, தண்ணீரில் நின்றிருந்தவர்கள், அந்தத் தண்ணீரைக் குடிக்க முடியா மல் அவதிப்பட்டார்களே, அப்படி அல்லாஹ் தண்ணீரை தரமற்ற தாக ஆக்கிவிட்டால், எங்கே போய் முட்டிக் கொள்வீர்கள்? உங்கள் திறமையால் ஒரு சொட்டு நீரை உருவாக்க முடியுமா? முடியாது.

எனவே, வல்ல அல்லாஹு விற்கு அதிகமதிகம் நன்றி கூறுவோம்.

"அல்லாஹ்விற்காக பணிந்தவரை அல்லாஹ் உயர்த்துவான்; பெருமையடிப்பவரை அல்லாஹ் தாழ்த்துவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் (நூல் : பைஹகி)

பாவா மெடிக்கல்ஸ்
53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை – 1.
04373-254354; 253339; 99444 54354

# நுகர்ந்தவை

**நூல் : இஸ்லாத்தில் வாரிசுரிமை சட்டம்**

**ஆசிரியர் (தமிழில்) :**
மவ்லானா
**கே.ஜே.மஸ்தான் அலீ**
பாகவி உமரி

**பக்கங்கள்: 392; விலை : ரூ.350/-**

**வெளியீடு :**
**நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்,**
43, யூனிகான் காம்ப்ளக்ஸ்,
அண்ணாநகர், மதுரை – 625020.
அலைபேசி : 9080330200

பேரறிஞர் அஷ்ஷைகு முஹம்மது பின் ஸாலிஹ் உஸைமின் (ரஹ்) அவர்கள் அரபு மொழியில் எழுதியுள்ள "தஸ்ஹீலுல் ஃபராஇழ்" எனும் நூலின் தமிழாக்கம் இந்நூல். வாரிசுரிமை சட்டம் பற்றி இந்நூல் முழுமையாகப் பேசுகிறது.

நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களின் சிறப்புகளைப் பற்றி கூறிய ஹதீஸும், பாகப் பிரிவினை சட்டங்களை கற்றுக் கொள்ளும்படி வலியுறுத்தும் ஹதீஸும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இறந்தவரின் உறவுகள் எந்தெந்த நிலைகளில் எவ்வளவு பங்குகளைப் பெறுவார்கள் என்ற சட்டங்கள் தத்ரூபமாக இந்நூலில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு முஸ்லிமும் இந்நூலை தம்முடன் வைத்திருந்தால் சொத்து பங்கீடு சட்டங்கள் பற்றி கேட்பவர்களுக்கு எளிதாகச் சொல்லி விட முடியும். அந்தளவுக்கு வரைபடங்களுடன் விளக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மூல நூலின் ஆசிரியர், மொழியாக்க ஆசிரியர் இருவரின் முயற்சியும் பாராட்டுதலுக்குரியது.

மொழியாக்கம் என்று சொல்ல முடியாத அளவிற்கு தமிழில் தரமாகத் தந்துள்ள மவ்லானா கே.ஜே.மஸ்தான் அலீ பாகவி உமரி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

ஆய்வு : **பாவா**

## எவர் அல்லாஹ்வுக்காகவே....

"எவர் அல்லாஹ்வுக்காகவே நேசித்தாரோ, எவர் அல்லாஹ்வுக்காகவே விரோதம் கொண்டாரோ, எவர் அல்லாஹ்வுக்காகவே கொடுத்தாரோ, எவர் அல்லாஹ்வுக்காகவே (கொடுக்காமல்) தடுத்துக் கொண்டாரோ அவர் ஈமானை பரிபூரணமாக்கிக் கொண்டார்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஉமாமா (ரளி) அவர்கள் (நூல் :அபூதாவூத்)

# "மாஷித்தா"
# ஃபிர்அவ்னின் குடும்பத்துப் பெண்களுக்கு தலை வாரி விட்ட பெண்!

**மவ்லானா காதர் பாஷா மன்பயீ ஹஸ்ரத்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் பயணத்தின்போது ஓர் இடத்தில், கஸ்தூரியை விட மிக்க வாசனையைக் கொண்ட அதிசயமான மணமொன்றினை நுகர்ந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், வானவர் கோமான் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அந்த அற்புதமான வாசனையைப் பற்றி கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "இந்த அற்புதமான வாசனை 'மாஷித்தா'வும், அவருடைய குடும்பத்தினரும் இருக்கக் கூடிய (கப்ர் அல்லது சுவர்க்க மாளிகை) இடத்திலிருந்து வருகின்ற வாசனை" என்று கூறினார்கள்.

தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாஷித்தாவின் வரலாறை விவரிக்கும்படி கேட்க, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

மாஷித்தா - ஃபிர்அவ்னின் குடும்பத்துப் பெண்களுக்கு தலை வாரி விட்ட பெண். ஒரு நாள் அவர் ஃபிர்அவ்னின் மகளுக்கு தலை வாரிக் கொண்டிருந்தபோது தற்செயலாக சீப்பு கீழே விழுகிறது. உடனே மாஷித்தா "பிஸ்மில்லாஹ்– அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு" என்று கூறினார். அப்போது அந்தப் பிள்ளை "நீ அல்லாஹ் என்று கூறியது என் தந்தை ஃபிர்அவ்னைத் தானே?" என்று கேட்டாள். அதற்கு மாஷித்தா "இல்லை! என்னையும், உன் தந்தையையும் படைத்து பரிபாலிக்கும் அந்த இறைவன் அல்லாஹ்வை" என்று கூறினார்.

மாஷித்தா, வணக்கத்திற்குரிய நாயனாக அல்லாஹ்வை யும், இறைத்தூதராக நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஈமான் கொண்டு அதை மனதில் மறைத்து வைத்திருந்த பெண்ணாவார்.

உடனே அந்தப் பிள்ளை போய் தன் தந்தை ஃபிர்அவ்னிடம் குற்றஞ் சொல்ல, அவன் மாஷித்தாவை சபைக்கு அழைத்து வரச் சொல்லி, முழு விஷயத்தையும் ஃபிர்அவ்ன் கேட்டான். "என்னைத் தவிர உனக்கு வேறு யாரும் கடவுள் உண்டோ?"

என்று. அதற்கு மாஷித்தா, “ஆம்! நிச்சயமாக என்னையும், உன்னையும் படைத்து பரிபாலிக்கும் அந்த அல்லாஹ்தான் என் இறைவன்” என்றார் உறுதியோடு.

கோபங் கொண்ட ஃபிர்அவ்ன் நெருப்பை மூட்டி செம்பாலான பெரும் பாத்திரத்தில் எண்ணெய்யைக் கொதிக்க வைத்து மாஷித்தாவுடைய கணவனிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு பிள்ளைகளாக நெருப்பில் எரிந்து கொண்டிருந்த எண்ணெய் பாத்திரத்தில் எறிந்தான். ஆனால் மாஷித்தா மனந்தளரவுமில்லை, அவருடைய ஈமானில் சற்றேனும் உறுதி குறையவுமில்லை.

கடைசியாக ஃபிர்அவ்ன் மாஷித்தாவையும், அவருடைய மார்பில் பால் குடித்துக் கொண்டிருந்த கைக் குழந்தையையும் தூக்கி எறியும்படி கூறினான். அப்போது மாஷித்தா “எனது கடைசி ஆசை ஒன்று இருக்கிறது” என்று கூறினார். ஃபிர்அவ்ன் “என்ன, சொல்?” என்று கேட்டான். மாஷித்தா “என்னையும், என் கைக்குழந்தையையும் எண்ணெயில் தூக்கியெறிந்த பின் கடைசியாக எமது எலும்புகள் எதுவெல்லாம் மிச்சமாகுமோ அவற்றையெல்லாம் ஒன்றாக ஒரு புடவையினுள் சுற்றி ஒரே கப்ரில் அடக்கஞ் செய்யவேண்டும்” என்று.

கொடிய ஃபிர்அவ்ன் மாஷித்தாவுடைய வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தான். அப்போது மாஷித்தா தன் மார்பில் பால் குடித்துக் கொண்டிருந்த கைக் குழந்தையைப் பார்த்து “ஒரு பாவமும் அறியாத இந்த பிஞ்சும் சேர்ந்து எண்ணெயில் கருகப் போகிறதே” என்று தயங்கினார். அப்போது வல்ல அல்லாஹ் அந்தக் குழந்தைக்கு பேசும் சக்தியை கொடுத்தான். அது “கவலைப்படாதே தாயே! நீ சத்தியத்தில் இருக்கிறாய்; பொறுமைக் கொண்டு முன்னேறிச் செல்; மறுமையுடைய வேதனைகளும், தண்டனைகளும் இதை விடக் கொடியவை” என்று ஆறுதல் கூறியது. கடைசியில் மாஷித்தாவும் அவரது கைக்குழந்தையுடன் எண்ணெய்ப் பாத்திரத்தில் எறியப்பட்டார்.

வல்லவன் அல்லாஹ் மாஷித்தாவையும், அவருடைய குடும்பத்தையும் பொருந்திக் கொண்டு வாக்களித்த உயர்ந்த சுவர்க்கத்தை அளித்துவிட்டான்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்

(நூல்கள் : முஸ்னத் அஹ்மத், தப்ரானீ, இப்னு ஹிப்பான், ஹாகீம்)

தொடர்-3

# ஸூஃபியாக்களின் பார்வையில் அவ்வல் கலிமாவின் அந்தரங்கம்!

மவ்லவீ **பி.எம்.கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

## லாஇலாஹ இல்லல்லாஹுவின் எண்ணியல் ரகசியங்கள் :

"லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மது ரசூலுல் லாஹ்" எனும் இந்தச் சொல், நபிமார்கள் அனைவரும் சொன்ன சிறந்த சொல்லாகும்.

மரணத் தருவாயில் ஒரு மனிதன் இந்த வார்த்தையை சொன்னால், அவன் சொர்க்கம் நுழைவது உறுதியாகி விடுகிறது. இதுவே சொர்க்கத்தின் திறவுகோல்; இதுவே இறை நம்பிக்கையின் தோற்றுவாய்.

இந்த கலிமாவில் உள்ள எழுத்துக்களை அல்லாஹ் கோர்த்து வைத்திருக்கும் முறையில் மிகப்பெரும் அத்தாட்சியும், அல்லாஹ் ஒருவன் என்பதற்கு ஆதாரமும் இருக்கின்றன.

இந்தவார்த்தையில் அலிஃப், லாம், ஹே ஆகியமூன்றுஎழுத்துக்களை கொண்டு அப்ஜதி - வரிசை முறைப்படி அழகாக அல்லாஹ் கோர்த்திருக்கிறான்.

மூன்று எழுத்துக்களில் நான்கு வார்த்தைகளை அமைத்து, ஈடு இணை இல்லாத ஒரு பொருள் கொண்ட வாக்கியத்தை அமைத்திருப்பது அல்லாஹ்வைத் தவிர வேறு யாரால் முடியும்?

இப்படி மூன்று எழுத்துக்களைக் கொண்டு ஒப்புவமை இல்லாத பொருள் நிறைந்த ஒரு வார்த்தையை மனிதனால் உருவாக்க முடியுமா என்றால் முடியாது. இதுவரை எவரேனும் உருவாக்கி இருக்கிறார்களா என்றாலும் இல்லை. ஏன் எந்த இலக்கியங்களிலும் அப்படிப் பட்ட ஒரு வார்த்தை இல்லை.

மேலும் இந்த வார்த்தையில்எண்ணியல்சார்ந்த அற்புதங்கள் பல உள்ளடங்கியிருக்கின்றன. அவையும் கூட அல்லாஹ் ஒருவன் என்பதற்கும் சாட்சியாக அமைந்திருக்கின்றன.

அலிஃப், லாம், ஹே ஆகிய இந்த எழுத்துக்கள் அல்லாஹ் எனும் ஜலாலியத் ஒளிரும் எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

## லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்வின் சிறப்பு :

1. ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"எந்த ஓர் அடியான் 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி' என்று சொல்லுகிறாரோ அவரை அல்லாஹ் சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்காமல் இருப்பதில்லை. மேலும் அவருடைய முகம் மறுமை நாளில் பௌர்ணமி இரவில் சந்திரன் ஒளிர்வது போல் ஒளிரும்."

(நூல் : தப்ரானீ)

2. ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள் கூறியதாவது;

"சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டு பூமியில் பல ஆண்டுகள் பாவங்கள் மன்னிக்கப்படாமல் இருந்த போது ஆதம் (அலை) அவர்கள் எப்பொழுதும் அழுது கொண்டே இருந்தார்கள். துஆவும் பாவ மன்னிப்பும் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

ஒரு முறை வானத்தின் பக்கம் தலையை உயர்த்தி, "யா அல்லாஹ்! நான் ஹள்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் பொருட்டால் உன்னிடம் பாவ மன்னிப்பு வேண்டுகின்றேன்" என்று கூறினார்கள்.

உடனே அல்லாஹ், "ஆதமே! முஹம்மதை உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் தான் அவரை இன்னும் படைக்கவே இல்லையே?" என்று கேட்டான்.

"இறைவா! நீ என்னை எப்பொழுது படைத்தாயோ, அப்பொழுது நான் என் தலையை உயர்த்தி அர்ஷைப் பார்த்தேன். அதன் மீது 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று எழுதப்பட்டிருந்தது.

முஹம்மத் (ஸல்) அவர்களைத் தவிர உயர்ந்தவர் உன்னிடம் வேறு யாரும் இல்லை, மேலும் நீ அவரை மிகவும் நேசிக்கிறாய், நீ நேசிக்காமல் உன் பெயரோடு வேறு யாருடைய பெயரையும் சேர்க்க மாட்டாய் என்று நான் புரிந்து கொண்டேன்" என்று ஆதம் (அலை) அவர்கள் கூறினார்கள்.

"ஆதமே! நீங்கள் உண்மையை சொன்னீர்கள். படைப்புகளில் நான் விரும்பும் நபரைக் கொண்டு என்னிடம் பிரார்த்தித்திருக்கிறீர்கள். அதனால் உங்களை நான் மன்னித்து விட்டேன், நிச்சயமாக அவர் தான் இறுதித் தூதர், உங்களுடைய சந்ததியில் வருபவர். அவர் இல்லாமல் இருந்திருந்தால் நாம் உங்களையும் படைத்திருக்க மாட்டோம்" என்று அல்லாஹ் கூறினான்."

(நூல்: தப்ரானீ, பைஹகீ, ஹாகிம்)

**லாஇலாஹ இல்லல்லாஹுவின் சிறப்பு :**

1. ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது; "நபி (ஸல்) அவர்களிடம் நான் 'இறைத்தூதர் அவர்களே!

மறுமை நாளில் தங்களின் பரிந்துரைக்குத் தகுதி படைத்த மனிதர் யார்?' என்று கேட்ட போது, "அபூஹுரைராவே! என்னைப் பற்றிய செய்திகளின் மீது உமக்கிருக்கும் பேரவா எனக்குத் தெரியும்.

எனவே, இச்செய்தியைப் பற்றியும் உமக்கு முன்னர் யாரும் என்னிடம் கேட்க மாட்டார்கள் என நான் நம்பியிருந்தேன்" என்று நபி (ஸல்) அவர்கள் சொல்லிவிட்டு, "மறுமை நாளில் மக்கள் அனைவரிலும் என் பரிந்துரைக்குத் தகுதி பெற்றவர் யாரெனில், உள்ளத்திலிருந்து தூய்மையானஎண்ணத்துடன் "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சொன்னவர்தாம் என்று கூறினார்கள்." (நூல் : புகாரி)

2. ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நான் நபி (ஸல்) அவர்களிடம் 'என்னை சொர்க்கத்தின் பக்கம் நெருக்கமாக்கக் கூடியதும், நரகத்தை விட்டும் தூரமாக்கக் கூடியதுமான ஒரு அமலை எனக்கு கற்றுத் தாருங்கள்' என கேட்டேன்.

அதற்கு அவர்கள், "நீங்கள் ஒரு பாவத்தை செய்துவிட்டால், அதற்கு பகரமாக ஒரு நன்மையை செய்து விடுங்கள். ஏனெனில், ஒரு நன்மை இறைவனிடத்தில் அதே போன்ற பத்து மடங்கு நன்மையை பெற்றுத் தரும்" என பதிலளித்தார்கள்.

அப்போது நான் "அல்லாஹ்வின் தூதரே! 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதும் நன்மைகளில் உள்ளதா?" என வினவினேன். அதற்கு அவர்கள் "ஆம்; அது நன்மையான காரியங்களில் மிகவும் சிறந்தது" என பதிலளித்தார்கள்.

(நூல் : முஸ்னத் அஹ்மத்)

3. ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதரென்றும் சாட்சி சொல்கிறேன் என்கிற இவ்விரண்டு கலிமாவையும் எவ்வித சந்தேகமுமின்றி நம்பி ஒரு அடியான் அல்லாஹ்வை சந்திப்பானேயானால் அவன் சொர்க்கத்தில் நுழைவான்."

(நூல் : முஸ்லிம்)

4. ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது; "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மறுமை நாளில் ஒரு மனிதன் அனைத்து படைப்புகளுக்கும் முன்னிலையில் அழைக்கப்படுவான். அவனுக்காக தொண்ணூற்றொன்பது ஏடுகள் கொண்டு வந்து விரிக்கப்படும். அவை ஒவ்வொன்றும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீண்டு காணப்படும்.

அப்போது அல்லாஹ், "இதில் எதையாவது (நான் செய்யாத தவறுகள் இதில் எழுதப்பட்டிருக்கிறது என்று) நீ மறுக்கிறாயா?

மேலும் எழுதுபவர்கள் உங்களுக்கு அநியாயம் செய்து விட்டார்களா?" என்று கேட்பான். அதற்கு அவர் "இறைவா! அப்படி ஒன்றும் இல்லை" என்று கூறுவார்.

"இதைத் தவிர, உங்களுக்கு ஏதேனும் நற்செயல்கள் இருக்கிறதா?" என்று கேட்பான். அதற்கு அந்த மனிதன், "இல்லை" என்று கூறுவான்.

பின்னர் அல்லாஹ், "இன்றைய நாளில் நீ எந்த வகையிலும் அநீதம் இழைக்கப் பட மாட்டாய்! நீ செய்த நன்மைகளில் ஒன்று இருக்கிறது; அது, அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வ அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு (அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இறைவன் இல்லை; நிச்சயமாக முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் வுடைய அடிமையாகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறு கிறேன்) என்று எழுதப்பட்ட ஓர் அட்டையை வெளியில் கொண்டு வரப்படும்.

அவர் கேட்பார், "இறைவா! இந்த (சுருள்களுடன் ஒப்பிடும் போது இந்த) அட்டை என்ன?" என்று கேட்பார். அதற்கு அல்லாஹ், "நீங்கள் அநீதி இழைக்கப்படமாட்டீர் என்று கூறுவான். பின்னர் நீண்ட சுருள் ஏடுகள் தராசின் ஒரு பக்கத்திலும், ஒரு அட்டை மட்டும் மற்றொரு தராசிலும் வைக்கப்படும்.

சுருள் ஏடுகள் மேலே செல்லும் (அதாவது, இலகுவாக இருக்கும்) அட்டை கீழே போகும் (அதாவது, அதிக எடையுடன் இருக்கும்) அல்லாஹ்வின் பெயரைவிட வேறெதுவும் கனமாக இருக்காது."

(நூல் : சுனன் இப்னு மாஜா 4300 / திர்மிதீ)

5. ஹள்ரத் அம்ரு பின் ஷுஐப் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது; நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நானும் எனக்கு முன் சென்ற நபிமார்களும் கூறியதில் மிகச் சிறந்தது லாஇலாஹ இல்லல் லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் - அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணையாக எதுவும் இல்லை. அவன் அனைத்து பொருட்களின் மீதும் ஆற்றல் உடையவன் என்பதாகும்."

(நூல்: திர்மிதீ, அல் முஅத்தா)

6. ஹள்ரத் இத்பான் பின் மாலிக் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியவராக

# நிலையான நன்மைகள் பெற்றிட நல்ல வாய்ப்பு!

## ஜாமிஆ தக்வியத்துல் இஸ்லாம்

வேலூர் மாநகர் அரியூரில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் சிறப்பான அரபிக் கல்லூரி ஆகும். இங்கு நூற்றுக்கும் அதிகமானவர்கள் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி முறையாக ஓத கற்றிருக்கிறார்கள். 50–க்கும் அதிகமானவர்கள் குர்ஆனை முழுவதும் மனனம் செய்து ஹாஃபிழ்களாகவும், 25க்கும் மேற் பட்டவர்கள் மார்க்கக் கல்வியை கற்றுத் தேறிய ஆலிம்களாகவும் பரிணாமம் பெற்றிருக்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

இத்தகைய மத்ரஸா தற்போது இட நெருக்கடியில் சிரமப்பட்டு வருவதால் மத்ரஸாவிற்காக இடம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. **14400**சதுர அடி கொண்ட இடம் ஒருகோடியே நாற்பது இலட்சம் **(1,40,00,000)** ரூபாய் என கிரயம் பேசப்பட்டுள்ளது. இந்தத் தொகை எதிர்வரும் புனித ரமளான் மாதத்திற்குள் கொடுக்கப்பட வேண்டும். ஆகையால் நல்லுள்ளம் கொண்ட கணவான்கள் தங்கள் மனம் தி ற ந் து விசாலமான எண்ணத்துடன் மத்ரஸாவிற்காக உதவி செய்ய வேண்டுமாய் கோருகிறோம்.

தங்கள் பெயரில் அல்லது மரணித்துவிட்ட பெற்றோர்கள், உறவினர்களின் பெயரில் அல்லது வீட்டிலுள்ள உறவினர்களின் பெயரில் ஆளுக்கு ஒரு சதுர அடி என்ற ரீதியில் வாங்கி மத்ரஸாவிற்கு வக்ஃபு செய்து நிரந்தரமான நீடித்த நன்மையை பெற்றுக் கொள்வீர்களாக.

A/C Name : **AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

Bank Name : INDIAN BANK    Branch : ARIYUR

A/C No. : **6845938157**

IFSC Code : IDIB000A198

+91 9080005537

+91 9080005537@akbizaxis

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா மவ்லவீ **உபைதுல்லாஹ்** காஸிமி, நிறுவனர் & முதல்வர்,

## ஜாமியா தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

**அஜீஸ் நகர், அரியூர், வேலூர் - 632055. தமிழ்நாடு.**

**செல் : 9443491834/9080005537**

லா இலாஹ இல்லல்லாஹ் என்று யார் கூறினாரோ அவருக்கு அல்லாஹ் நிச்சயமாக நரகத்தை ஹராமாக்கி விட்டான்" (நூல் : புகாரி, முஸ்லிம்)

7. ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மரணப் படுக்கையில் இருப்பவர்களுக்கு "லாயிலாஹ இல்லல்லாஹ்" என்ற ஷஹாதாவை நினைவூட்டுங்கள். அது அவருடைய இறுதி வார்த்தையாக இருக்குமானால் அவர் சொர்க்கவாதியாவார்."

(நூல்:முஸ்லிம், புலூக் அல்மராம்)

8. ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எந்த ஓர் அடியான் "லா இலாஹ இல்லல்லாஹு" என்று கூறி பின்னர் அதே நிலையில் மரணிக்கிறாரோ அவர் சொர்க்கம் நுழையாமல் இருப்பதில்லை" என்று நபியவர்கள் கூறியபோது, "விபச்சாரம் செய்தாலும், திருடினாலுமா?" என நான் கேட்டேன். "விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சொர்க்கம் நுழைவார்" என நபியவர்கள் கூறினார்கள். மீண்டும் நான் "விபச்சாரம் செய்தாலும், திருடினாலுமா?" எனக் கேட்டேன். "விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சொர்க்கம் நுழைவார்" என நபியவர்கள் மூன்று முறை கூறினார்கள். நான்காவது முறையாக "அபூதர்ரே! விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சொர்க்கம் நுழைவார்" என நபியவர்கள் கூறினார்கள்.

( நூல் : புகாரி, முஸ்லிம்)

9. ஹள்ரத் ஷேக் அபூ யஜீத் குர்துபீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "யார் எழுபது ஆயிரம் முறை லா இலாஹ இல்லல்லாஹு என்று கூறுவாரோ, அவர் நரக நெருப்பிலிருந்து விடுதலை பெறுவார்" என்று நான் கேள்விப்பட்டேன்.

இதை கேள்விப்பட்டு நான் எனக்காக எழுபதாயிரம் முறை ஓதி வைத்துக் கொண்டேன். பிறகு என் மனைவிக்கும், இன்னும் பல முறை ஓதி என் பெற்றோருக்கும், என் மறுமைக்காகவும் சேமித்து வைத்துக் கொண்டேன்.

எங்கள் வீட்டிற்கு அருகில் ஓர் இளைஞர் வாழ்ந்து வந்தார். அவர் கஷ்ஃப் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நற்செய்திகள் வழங்கப் பெறுகிறவர் என்று பிரபலமாக பேசப்பட்டது.

அவருக்கு சொர்க்கம் நரகத்தைப் பற்றியும் கஷ்ப் - அல்லாஹ்வின் புறத்திலிருந்து நற்செய்திகள் வழங்கப் பெறுகின்றன என்று பேசப்பட்டது. அந்த விஷயத்தை நம்புவதில் எனக்கு தயக்கம் இருந்தது.

ஒரு நாள் அந்த இளைஞர் எங்களுடன் விருந்தில் அமர்ந்திருந்தார். திடீரென்று அவர் கூச்சலிட்டார். அவருடைய மூச்சுக்கள் திணறின. அப்போது அவர், "என் தாயார் நரகத்தில் எரிந்து கொண்டிருக்கின்றார்கள்" என்றார்.

ஹள்ரத் குர்துபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : என்னுடைய எழுபதாயிரம் கலிமாக்களைக் கொண்ட ஒரு நிஸாப் - அளவை நான் அவருடைய தாயாருக்கு ஏன் தர்மம் செய்யக் கூடாது என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது. அதே சமயம் அந்த இளைஞருடைய உண்மை நிலையும் எனக்கு விளங்கி விடும் என்று நினைத்தேன்.

எனவே என்னிடமிருந்ததிலிருந்து ஒரு நிஸாப் - அளவை நான் அவருடைய தாயாருக்கு தர்மம் செய்தேன்.

இந்த விஷயம் எனக்கும் அல்லாஹ்விற்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அப்போது அந்த இளைஞர், 'என் தாயிடமிருந்து நரக நெருப்பு அகற்றப்பட்டுவிட்டது" என்று கூறினார்.

ஹள்ரத் குர்துபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : இந்தச் சம்பவத்திலிருந்து இரண்டு பயன்களை நான் புரிந்து கொண்டேன்.

ஒன்று: கலிமா தய்யிபாவை எழுபதாயிரம் முறை ஓதினால் என்ன மாதிரியான பயன் கிடைக்கும்? என்று நான் கேள்விப்பட்டிருந்தேனோ, அதைப் பற்றிய உண்மை நிலையை கண்கூடாகக் கண்டு அறிந்து கொண்டேன்.

இரண்டு : இந்த இளைஞரைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டது உண்மைதான் என்பதையும் புரிந்து கொண்டேன். அதனால் அவர் மீது நல்லெண்ணமும், நம்பிக்கையும் உண்டானது."

(நூல் : தஃப்ஸீர் குர்துபி, மிர்காதுல் மஃபாதீஹ்)

10. ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'லாஇலாஹ இல்லல்லாஹு' என்று சொன்னவர்களுக்கு தங்களுடைய கபுருகளிலும், மஹ்ஷர் மைதானத்திலும் அச்சம் என்பதில்லை.

அவர்கள் தம் தலைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் மண்ணைத் தட்டியவர்களாக எங்களை விட்டும் கவலையைப் போக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறியவர்களாக கபுருகளில் இருந்து எழுந்து வரும் காட்சி என் கண்முன்னே தெரிகிறது.'

(நூல் : தப்ரானீ, பைஹகீ)

11.ஹள்ரத் அபூ ஸயீதுல் குத்ரி (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"மூஸா (அலை) அவர்கள், "இறைவா! எனக்கு ஒரு திக்ரை கற்பித்துக் கொடு! நான் அதைக் கொண்டு உன்னிடம் பிரார்த்திப் பேன்!" என்று கேட்டார்கள்.

"மூஸாவே! லா இலாஹ இல்லல்லாஹு என்று சொல்லி வாருங்கள்" என அல்லாஹ் பதிலளித்தான்.

மூஸா (அலை) அவர்கள், "இறைவா! உன்னுடைய அடி யார்கள் அனைவரும் இக் கலிமாவைத்தானே சொல்லி வருகிறார்கள் என்று கூறியதும், "லாஇலாஹ இல்லல்லாஹு" என்று ஓதி வருவீராக" என அல்லாஹ் மீண்டும் கூறினான்.

மீண்டும் மூஸா (அலை) அவர்கள், "இறைவா! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை; எனக்கு மட்டும் பிரத்தியேக மாக ஒன்றை வழங்க வேண் டும் என நான் விரும்புகிறேன்" என்று சொன்னார்கள்.

அப்பொழுது, அல்லாஹ், "மூஸாவே! ஏழு வானங்களை யும், ஏழு பூமிகளையும், அதில் உண்டான வஸ்துக்களையும் தராசின் ஒரு தட்டிலும், 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை மறுதட்டிலும் வைத்தால் லா இலாஹ இல் லல்லாஹு என்ற கலிமாவுடைய தட்டு கீழே தாழ்ந்துவிடும்" எனக் கூறினான்.

(நூல் : நஸாயீ, இப்னு ஹிப்பான்)

12. ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மணிக் கோதுமை அளவு ஒருவரின் உள்ளத்தில் நன்மை யிருக்கும்நிலையில், 'லாஇலாஹ இல்லல்லாஹு' எனக் கூறி யிருந்தால் அவர் நரகிலிருந்து வெளியேற்றப்படுவார்.

ஒரு தொலிக் கோதுமை அளவு ஒருவரின் உள்ளத்தில் நன்மையிருந்து அவர், 'லா இலாஹ இல்லல்லாஹு' எனக் கூறினால் அவரும் கூட நரகி லிருந்து வெளியேற்றப்படுவார்.

ஒரு மக்காச் சோளம் அளவு நன்மை உள்ளத்திலிருக்க அவர் 'லா இலாஹ இல்லல்லாஹு' எனக் கூறினால் அவரும் கூட நரகத்திலிருந்து வெளியேற்றப் படுவார்." (நூல்: புகாரி, முஸ்லிம்)

எனவே லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரசூலுல்லாஹி என்று தினமும் 100 முறையும், லா இலாஹ இல்லல்லாஹு என தினமும் 200 முறையும், இல்லல்லாஹு என தினமும் 400 முறையும், அல்லாஹு என தினமும் 600 முறையும், மீண்டும் லா இலாஹ இல்லல்லாஹு என 100 முறையும் என அனைத்து தரீக்காவினரும் ஓதி வரும் இந்த பாரா தஸ்பீஹ் எனும் கலிமாவை நீங்களும் ஓதி பயன் பெறுங்கள்.

# முஸ்லிமாக மட்டும் நில்லுங்கள்!

மவ்லவீ ஹாஃபிழ் எஸ்.ஃபக்கீர் முஹம்மது ஜலாலீ

கொரோனாவிலிருந்து 2023 வரையிலான தொடர் இயற்கைப் பேரிடர்கள் நமது சமுதாயத்தை உலகுக்கு தலை நிமிர்த்தியுள்ளது. கொரோனாவில் நமது உலக முஸ்லிம் சமுதாயப் பங்களிப்பு சீருடையற்றது. அடையாளமற்றது. உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வில் மக்களின் துன்பங்களில் பங்கேற்று அவர்களை ஆற்றுப்படுத்தியதில் முஸ்லிம்கள் முதலிடம் வகிக்கிறார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. முஸ்லிம்களில் யார்? என்ற பகுத்தாய்வு அதில் இல்லை.

தமிழ்நாட்டில் ஸன்னீ என அறியப்படும் சுன்னத் வல் ஜமா அத்தில் நூறு கோஷ்டிகள். நூறு அடையாளங்கள். நூறு சீருடைகள்.

முஸ்லிம்கள் பேரிடரில் பங்கு கொள்வது ஒவ்வொரு முறையும் நடக்கிறது. ஆனால் பரிதாபம்! ஒவ்வொன்றும் தனித்தனி சீருடையுடன், களத்தில் நிற்பதுதான் கொடுமை. ஒவ்வொரு பேரிடர் வரும்போதும், எந்த சங்கியும் களத்துக்கு வருவதில்லை. யூடியூபர்கள் விலைக்கு வாங்கப்பட்டு ஆளும் கட்சியை குத்திக் கிழிக்க கூலி வாங்கிக் கொண்டு காலத்தை ஓட்டுகின்றன.

நடுநிலையாளர்கள் நடத்தும் சோஷியல் மீடியாக்களில் பேரிடர்களில் முஸ்லிம்களின் பங்களிப்பை பாராட்டிப் பேசுவது நிறைய வந்துள்ளது. அதில் ஒருவர் சொன்னார், "எல்லாப் பள்ளிவாசல்களையும் இடித்து விடாதீர். வெள்ளம், பிரளயம் வந்தால் நீங்கள் ஒதுங்குவதற்கு சில பள்ளிவாசல்கள் இருக்கட்டும். எல்லா முஸ்லிம்களையும் கொன்று விடாதீர்கள். உயிர் போகும் நிலை உங்களுக்கு வந்தால் இரத்த தானம் கொடுக்க முஸ்லிம்கள் வேண்டும்."

இவையனைத்தும் மேலும் மேலும் முஸ்லிம்களின் அடிவேர் வரை அலச வைத்து "இந்தியாவினுள் முஸ்லிம்கள் இருப்பு இல்லையெனில் சுதந்திரம் இன்றியே இன்னும் ஒரு யுகம் கழித்திருப்போம்" என்றும், "முஸ்லிம்களின் சமூக நல்லிணக்கப் பங்கு எவ்வாறு இந்திய இறையாண்மையை

காப்பாற்றியுள்ளது?" என்றும் நிறைய பிரபலமான செய்திப் பத்திரிகைகள் எழுதும் நிலை ஏற்பட்டுள்ளது.

குஜராத் கலவரத்தை அரசே முன்னின்று நடத்திய பிறகும், அஹமதாபாத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது அதற்கு சில நாள் முன்னேதான் கடுமையான வன்கொடுமையால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்ட போதும், ரயில்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் சிரமப்பட்ட அஹமதாபாத் ரயில் நிலையத்திலேயே முஸ்லிம்கள் சப்பாத்தி, தால் தயார் செய்து மத வேறுபாடின்றி விநியோகித்த நிகழ்வுகள் இன்னும் அது போன்றவை தொடர் சரித்திரம். அவை எல்லாமே தொப்பியுடன் முஸ்லிம் என்ற அடையாளத்துடன் மட்டுமே நிகழ்த்தப்பட்டதால் முஸ்லிம்களின் மனிதாபிமானமாக பார்க்கப்பட்டன.

இந்த சரித்திரமெல்லாம் மாறி இன்று பேரிடர் களங்களில் பல கொடிகள், பல சீருடைகள். சீருடையும், கொடியும் கொண்ட பிள்ளைகள் யாருக்கும் தொப்பி இல்லை. எனவே நவீனமாக சங்கிகள் இன்னொரு கேவலமான பிரச்சாரத்தை திணிக்கின்றனர். இந்த சீருடை, கொடிகள் தாங்கி களப்பணி ஆற்றும் இளைஞர்களின் தொண்டு அளப்பரியது. அந்த தொண்டு ஒன்றுதான் அவர்களின் நற்குணத்துக்கு எடுத்துக்காட்டு. ஆனால் அவர்களின் இஸ்லாமிய நிலை பரிதாபத்துக்குரியது.

இந்தப் பல சீருடைகளுடன் நிவாரணப் பொருட்கள் வழங்கும் இப்பிள்ளைகளை சங்கிகள் அசிங்கப்படுத்த நிவாரணப்பொருள் வாங்குவோரிடையே சங்கிகளை உலவ விட்டு அசிங்கப்படுத்தியுள்ளனர்.

கல்லூரி கேட்டிலிருந்து இரண்டடி தூரம் நின்று நிவாரணப் பொருள் வழங்க வந்த ஒரு சீருடை இயக்க இளைஞர் கேட்டுக்குள் நின்று கைநீட்டிய கல்லூரி மாணவர்களிடம், 'யாராவது ரெண்டு பேர் வந்து மொத்தமாக வாங்கிக்கிட்டுப்போய் அனைவருக்கும்

## பங்கீடு செய்தல்

"மனிதர்கள் சிலர் அல்லாஹ்வின் செல்வத்தை நியாயமாகப் பங்கிடாமல் (அநியாயமாகப் பங்கீடு செய்து) கையாள்கிறார்கள். அவர்களுக்கு மறுமை நாளில் நரகமே கிடைக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் கவ்லா அல்அன்சாரிய்யா (ரளி) அவர்கள்.

(நூல் : ஸஹீஹ் புகாரி 3118)

# தமிழக மதரஸாக்களுக்கான
# அரிய வாய்ப்பு!

அரபு கல்லூரிகளின் ஆலிம் பிரிவின் ஆரம்பப் பாடங்களான மீஜான், அஜ்னாசுல் குப்ரா, ஜன்ஜானீ ஆகிய மூன்று கிதாபுகளை ஒரே கிதாபின் வடிவில் **சொல்லிலக்கணம்** என்ற பெயரில் ஒன்று சேர்த்து, தங்களின் 40 ஆண்டு கால கல்வித் துறையின் அனுபவத்தைப் பயன்படுத்தி, தமிழ் விரிவாக்கமாக நமக்கு அளித்திருக்கிறார்கள் சென்னை மதரஸா காஷிஃபுல் ஹுதாவின் பேராசிரியர் மவ்லானா அல்ஹாஜ் **M.முஹம்மது இப்ராஹீம் பாகவி ஹள்ரத்** அவர்கள்!

அந்த பாடத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும், சரியான தமிழ் விளக்கத்துடன் வழங்கியிருக்கிறார்கள்.

மேற்படி பாடங்களை நடத்தக்கூடிய அரபு கல்லூரிகள் மற்றும் நிஸ்வான் மதரஸாக்களின் பேராசிரியப் பெருந்தகைகளுக்கு மிக மிக உதவியாக இருக்கும்.

**வாங்குங்கள்! பயன்படுத்துங்கள்!!**

**பக்கங்கள் : 800; விலை ரூ. 500/-**
(தபால் செலவு தனி)

**நூல் கிடைக்குமிடம் : குர்ஆனின் குரல்**

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை - 625 020.**

**9486729192, 9976686439**

**மதரஸாக்களுக்கு சிறப்பு சலுகை உண்டு**

கொடுங்கள்' என்ற போது, அந்தக் கல்லூரி மாணவர்களில் ஒருவர் சொன்னது, 'நீங்க வாங்கங்க. அதுக்குத்தானே வந்திருக்கீங்க. விளம்பரம் உங்களுக்குத்தானே!' என்றிருக்கிறான். இது வளரும்!

ஒரு கட்டத்தில், என் மரியாதைக்குரிய இளைஞரே! நீ சேவைகளால் இழிவடைவாய். அதற்கான கீழறுப்பு வேலைகள் சங்கிகளால் தீவிரமாக செய்யப்படுகின்றன. இனி தொப்பி மட்டும் அணிந்து களத்தில் நில். அல்லாஹ்வுக்காக நீ சேவை செய்வது உண்மையானால், இனி தொப்பியுடன் முஸ்லிம் என்ற அடையாளத்தில் நில். இல்லையெனில் நீ அரசியல் செய்கிறாய் என பரப்பப்படும்.

கிஷோர் கே.ஸ்வாமி என்னும் R.S.S. யூ டியூபர், 'என்னய்யா வெள்ளம் வந்து நேரமாச்சு. நாலஞ்சு துலுக்ஸ் வருவானுங்களே சோத்துப் பொட்டலத்தோட; காணோம்?' என்று எகத்தாளமாக பதிவிட்டதற்கு இந்துக்களே வார்த்தை செருப்பால் அடித்து பதில் தந்தாலும், இது அபாயத்தின் அறிகுறி. ஒருவர் இரண்டாகும். இரண்டு இரண்டாயிரமாகும். பொதுத் தளத்திலாவது தொப்பியுடன் மட்டும் நில்லுங்கள். அதுதான் உங்களுக்கும் நல்லது; சமுதாயத்திற்கும் நல்லது.

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

# விண்ணுலகப் பயணம்

## மவ்லவி எஃப்.ஜமால் பாகவி

சமுதாய மக்களுக்கு நேர் வழிகாட்டுவதற்காக அல்லாஹ் எல்லா சமுதாயத்தவர்களுக்கும் தூதர்களை அனுப்பி வைத்தான். அவர்களையே நபிமார்கள் என்கின்றோம். சமுதாய முற்றத்தில் ஏகத்துவ பிரச்சாரத்தை எடுத்து வைக்கும் போது "இவர்கள் உண்மையில் இறைத் தூதர்கள்தான்" என்பதை நிரூபிக்கும் வகையில் சில அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலை அல்லாஹ் வழங்கினான். ஒவ்வொரு இறைத்தூதரும் தத்தமது அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி ஏகத்துவத்தின் பக்கம் அழைப்புக் கொடுத்தனர்.

இறைத்தூதர்கள் மரணமாகி விட்டால் அவர்களின் அற்புதங்களும் இல்லாமல் போய்விடும். உதாரணமாக, ஹள்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பின் அவர்களின் கைத்தடியை கீழே போட்டால் அது பாம்பாக மாறாது. அதையெடுத்து "கல்பாறை"யில் அடித்தால் தண்ணீர் வராது. கடலில் பாதை ஏற்படாது.

ஆனால், நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களில் ஒன்று "இன்றும் என்றும்" உயிரோட்டமாகவே இருக்கும். மறுமைநாள் வரை அந்த அற்புதம் நீங்கா இடம் பெற்றிருக்கும். அதுதான் அல்குர்ஆன்.

மற்ற நபிமார்களுக்கு அல்லாஹ் வழங்காத பல அற்புதங்களை நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அதில் ஒன்றுதான் "மிஃராஜ்" எனும் விண்ணுலகப்பயணம். நபி (ஸல்) அவர்கள், "விண்ணுலகப் பயணம்" மேற்கொண்ட அக்கால கட்டத்தில், "விண்வெளிப் பயணமே" சாத்தியமில்லாத ஒன்றாக கருதப்பட்டது.

எனவே தான், நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட விண்ணுலகப் பயணத்தை மக்கத்து குறைஷியர், இறைமறுப்பாளர்கள் ஏற்க மறுத்ததுடன் அதைக் கேலியாகவும், கிண்டலாகவும் பார்க்க ஆரம்பித்தனர். இறை நம்பிக்கையாளர்கள் அதனை முழுவதுமாக நம்பினார்கள்.

நபி (ஸல்) அவர்களின் வயது ஐம்பத்தி மூன்று. இறையில்லமாம் திருகஃபாவி

லிருந்து, ஜெருஸலத்திலுள்ள பைத்துல் முகத்தஸ்-க்கு "புராக்" எனும் மின்னல் வேகத்தில் செல்லக் கூடிய விசேஷ வாகனத்தில் கணப் பொழுதில் பயணித்தார்கள். அங்கிருந்து ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்களுடன் முதல் வானம், இரண்டாவது வானம்..., இப்படியாக ஏழு வானம், அல்லாஹ்வின் அர்ஷ், சுவனம், நரகம் எல்லாவற்றையும் கண்டு களித்து விட்டு அதே இரவில் பூமிக்கு வந்துவிட்டார்கள்.

உண்மையிலேயே "மனித அறிவு" இதனை ஏற்றுக் கொள்ள மறுக்கக் காரணம், நபி (ஸல்) அவர்கள் காலத்தில் கழுதை, குதிரை, ஒட்டகம் தவிர மற்ற வாகனங்கள் ஏதுமில்லை. அப்படியிருக்க மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் செல்லவே பல நாட்கள் பிடிக்கும். அது மட்டுமின்றி பூமியிலிருந்து முதல் வானம் செல்ல "2500 ஒளியாண்டுகள்" ஆகும். ஏழு வானம் செல்வதாயின் 17,500 ஒளியாண்டுகள் ஆகும்.

(ஒரு ஒளியாண்டு என்பது "ஒரு ஒளித்துகள் இடைவிடாமல் ஓராண்டு பயணிக்கும் தூரம் ஒளியாண்டு எனப்படும். ஒளியின் வேகம் நொடிக்கு மூன்று லட்சம் கி. மீ.)

திரும்ப ஏழாவது வானிலிருந்து பூமிக்கு வருவதாயின் அதே 17,500 ஒளியாண்டுகள் பிடிக்கும். ஆக, மொத்தம் 35,000 ஒளியாண்டுகள். இவ்வளவு ஆண்டுகள் பயணிக்க வேண்டிய தூரத்தை நபி (ஸல்) அவர்கள் கடந்து சென்று ஒரே இரவில் பூமிக்கு வந்தார்கள்.

விண்ணுலக பயணத்தை முடித்துவிட்டு பூமிக்கு திரும்பி வரும் நேரத்தில் அல்லாஹ், நபி (ஸல்) அவர்களுக்கு ஐம்பது நேரத்தொழுகைகளை கடமையாக்கி வழங்கினான். மிகவும் சந்தோஷப்பட்டவர்களாக திரும்பி வந்த நபி (ஸல்) அவர்கள், ஹள்ரத் மூஸா (அலை) அவர்களை சந்திக்கும் போது ஐம்பது நேரத் தொழுகைகளை நினைவுபடுத்த, "உங்கள் சமுதாயம் இதனை நிறைவேற்றவே மாட்டார்கள். உங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று குறைத்து வாருங்கள்" என அனுப்பி வைக்க, அல்லாஹ் ஐம்பது நேரத்தொழுகைகளிலிருந்து ஐந்து நேரத் தொழுகையாக குறைத்தான். ஹள்ரத் மூஸா (அலை) அவர்கள் இதுவும் போதாது. இன்னும்... இன்னும்... இன்னும்... திரும்பத் திரும்ப அனுப்பி வைக்க ஐந்து ஐந்தாக குறைத்து, குறைத்து இறுதியில் வெறும் ஐந்து நேரத் தொழுகைகளோடு நபி (ஸல்) அவர்கள் திரும்பி வந்தார்கள்.

"அல்லாஹ்விற்காக மனத் தூய்மையுடன் ஒரு காரியத்தை செய்தால் ஒன்றுக்கு பத்து மடங்கு கூலியை அல்லாஹ்

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

**மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.**

**அலைபேசி : 97156 04495, 95977 25934**

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **54 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு **'ஆலிமா'** பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு **"புதுச் சேர்க்கை"** நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு "MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST" என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

வழங்குவான்" என்ற அல் குர்ஆனின் கூற்றின் பிரகாரம் ஐந்து நேரத் தொழுகைக்கு ஐம்பது நேரத் தொழுகையின் கூலி கிடைத்து விடும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஐம்பெரும் கடமைகளில் தொழுகை என்பது மனித உடலில் உள்ள தலையைப் போன்றதாகும்.

* மறுமையில் முதல் விசாரணை தொழுகையைப் பற்றியே.
* தொழுகையின்றி மற்ற வணக்கங்களுக்கு மரியாதை கிடையாது.
* சிறுபாவங்கள் மன்னிக்கப்பட தொழுகை காணமாகும்.
* தொழுகையை விடுவதற்கு மார்க்கம் அனுமதி வழங்கவே இல்லை.
* குடும்பத்திலுள்ள குழப்பங்கள் நீங்க தொழுகை அருமருந்தாகும்.
* பாவமான, வெறுப்பானசெயல்களை விட்டும் மனிதனை தொழுகை தடுக்கும்.

இன்னும் பல சிறப்புகள் தொழுகைக்கு இருப்பதினால் தான் நபி (ஸல்) அவர்களை தன் பக்கம் வரவழைத்து நேரடியாக அல்லாஹ் தொழுகையைக் கடமையாக்கினான்.

மற்ற கடமைகளான நோன்பு, ஜகாத், ஹஜ், ஜிஹாத் போன்றவற்றை 'ஆயத்' களை இறக்கிவைத்து கடமையாக்கினான். அப்படிப்பட்ட இந்த முக்கியமான கடமையாகத் திகழும் "தொழுகை" கடமையாக்கப்பட்ட இரவு தான் "மிஃராஜ்" இரவாகும்.

உயிர்வாழும் காலமெல்லாம் படைத்த இறைவனை மட்டும் நின்று, வணங்கி, வழிபடும் நன்மக்களாக அல்லாஹ் நம்மையும், நம் குடும்பத்தாரையும், வருங்கால நம் சந்ததிகளையும் அல்லாஹ் ஆக்கி அருள் புரிவானாக.

---

## ஐந்தாம் வகையினராக ஆகி விடாதீர்!

நீங்கள் ஆலிமாகவோ அல்லது இல்மைக் கற்பவராகவோ, அல்லது இல்மைக் கவனத்துடன் கேட்பவராகவோ இல்லையெனில், இல்மை, (கல்வி) அறிஞர்களை நேசிப்பவராகவோ இருங்கள். (இந்நான்கல்லாமல்) ஐந்தாம் வகையினராக ஆகி விடாதீர்கள்! இல்லையெனில் நீங்கள் அழிந்து போய் விடுவீர்கள். ஐந்தாம் வகை என்பது கல்வியுடனும், கல்விமான்களுடனும் வெறுப்புக் கொள்வதாகும்'' என நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூபக்ரா (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ)

# கனமழை என்பது பஞ்சம், உலக அழிவின் அடையாளமே! அத்தாட்சியே! அதிர்ச்சியே!

மவ்லவீ ஹாஃபிழ் அ.சைய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

**மழைத்துளி உயிர்த்துளி!**

**அருள் மழை இறைவனின் அருட்கொடை!**

மழை என்பது உலக இயக்கத்தின் மூலப்பொருள். மழை என்பது மனிதவாழ்வின் வாழ்வாதாரம். மழை என்பது உயிருள்ளஒவ்வொருபொருளின் அடிப்படை ஆதாரம்.

'உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம்'

- அல்குர்ஆன் 21:30

மழை பொழிந்தால்தான் மலர்கள் மலரும். பூக்கள் பூக்கும். பூஞ்சோலை செழிக்கும்; காய் கனிகள் காய்க்கும்; புற்பூண்டுகள் முளைக்கும்; விளை நிலம் விளையும்; விவசாயம் பெருகும். ஆறுகள் ஓடும்; குளங்கள் நிரம்பும்; ஊற்றுகள் ஊறும்; அணைகள் வழியும். மழை பொய்த்துப் போனால், மலர்கள் மலராது, பூக்கள் பூக்காது; பூஞ்சோலை செழிக்காது; காய் கனிகள் காய்க்காது; புற்பூண்டுகள் முளைக்காது; விளை நிலம் விளையாது; விவசாயம் பெருகாது; ஆறுகள் ஓடாது; குளங்கள் நிரம்பாது; ஊற்றுகள் ஊறாது; அணைகள் வழியாது. ஒட்டு மொத்தத்தில் மனித வாழ்வு சிறக்காது. உலகம் இயங்காது.

'நீரின்றி அமையாது உலகு'- திருக்குறள். இத்தகைய மழையை, மனிதன் இறைவனிடம் இருகரமேந்தி வேண்டும் பொழுது பொத்தம் பொதுவாக இறைவா! மழையைப் பொழிவாய்! இறைவா! மழையைத் தருவாய்! இறைவா! மழையை இறக்கியருள்வாய்! என்று மட்டுமே வேண்டக்கூடாது.

**மழை வேண்டும் போது பின்வருமாறு வேண்டிட வேண்டும் "அல்லாஹும்ம அஃகிஸ்னா! அல்லாஹும்ம அஃகிஸ்னா! அல்லாஹும்ம அஃகிஸ்னா!"**

**"இறைவா! மழையை பொழியச்செய்வாயாக!**

**இறைவா! மழையை பொழியச்செய்வாயாக!**

**இறைவா! மழையை பொழியச் செய்வாயாக!"**

இவ்வாறு நபி [ஸல்] அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

(நூல் : அபூதாவூத்)

"அல்லாஹும்ம ஸ்கினா ஃகைஸன் முஃகீஸன் மரீஅன் முரீஃஅன் நாஃபிஅன் ஃகைர ளார்ரின் ஆஜிலன் ஃகைர ஆஜிலின்"

யா அல்லாஹ்! எங்களுக்கு உதவிகரமான, மகிழ்ச்சிகர மான, பசுமையை ஏற்படுத்தக் கூடிய மழையைப் பொழியச் செய்வாயாக! நன்மை தரக் கூடிய, நஷ்டம் ஏற்படுத்தாத, விரைவான, தாமதமாகாத மழையை பொழியச் செய்வா யாக! என நபி [ஸல்] அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

(நூல் : அபூதாவூத்)

"அல்லாஹும்மஸ்கி இபாதக, வபஹாயிமக, வன்ஷுர் ரஹ்மதக, வ அஹ்யி பலதகல் மய்யித,

யா அல்லாஹ்! உன் அடியார் களுக்கும், விலங்குகளுக் கும் தண்ணீர் புகட்டுவாயாக! மேலும் உனது அருளை பரப்பு வாயாக! வறண்டு கிடக்கும் இந்த உனது ஊருக்கு உயிர் கொடுப்பாயாக" என நபி [ஸல்] அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

(நூல் : அபூதாவூத்)

ஆக மழை வேண்டும் போது, மேற்கூறப்பட்ட 3 நபி மொழிகளின், அடிப்படையிலும் நபி (ஸல்) அவர்கள் கேட்டதின் அடிப்படை யிலும் தான் மனிதன் மழை வேண்டி கேட்க வேண்டுமே தவிர தமது இஷ்டத்திற்கு மழை வேண்டக் கூடாது.

இறைவனிடம் உதவிகர மான, மகிழ்ச்சிகரமான, பசுமையை ஏற்படுத்தக்கூடிய, நன்மை தரக்கூடிய, நஷ்டம் ஏற்படுத்தாத, விரைவான, தாமதமாகாத, மீட்சி தரும் மழையை, தங்கு தடையில்லாத மழையை பெருக்கெடுத்து ஓடும் மழையை, பூமியைச் செழுமையாக்கும் மழையை, மனித வாழ்வைச் செழுமையாக் கும் மழையை தான் குறிப்பிட்டு கேட்க வேண்டுமே தவிர, பொத்தம் பொதுவாக கேட்கக் கூடாது. சரி, மழை வேண்டினோம், இறைவனின் அருள் மழையும் பொழிகிறது. இப்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

## மழை பொழியும்போது வேண்டும் துஆ

"அல்லாஹும்ம ஸய்யிபன் நாஃபிஅன், இறைவா! பயனுள்ள மழையாக இதை ஆக்கு! என நபி [ஸல்] அவர்கள் பிரார்த்திப்பார்கள்"

(நூல் : புகாரி)

மழைபொழியும் போது இந்து துஆவை வேண்டினால், பெய்யும் மழை பயனுள்ளதாகப் பொழியும். மழை அதுவாகப்

# பள்ளிவாசல் கட்டிட வேலைகள் நிறைவு பெற உதவிக்கரம் நீட்டுங்கள்!

**“எவர் அல்லாஹ்விற்காக இறை இல்லத்தை கட்டுகிறாரோ அது காடை கூடு அளவிற்கு இருந்தாலும் அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை கட்டுகிறான்.”**

– நபி (ஸல்) அவர்கள் (நூல் : இப்னு ஹிப்பான், பஸ்ஸார்)

கோவை மாவட்டம், சூலூர் வட்டம், கருமத்தம்பட்டி, **சோமனூர்** பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு மஸ்ஜிதே நூர் சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசலுக்காக கட்டப்பட்ட கட்டிடம் வலுவிழந்ததன் காரணமாக அதே இடத்தில் மக்கள் தொழுமளவுக்கு பள்ளிவாசலின் உள் கட்டிட வேலைகள் அனைத்தும் அல்லாஹ்வின் அருளால் நிறைவு பெற்றுவிட்டன. அல்ஹம்துலில்லாஹ்!

வெளி வேலைகளும், மினாரா மற்றும் சுற்றுச்சுவர் வேலைகளும் பெருமளவில் நிலுவையில் இருப்பதால், மேற்படி வேலைகளை முழுமைப்படுத்தி நிறைவு செய்வதற்கு சுமார் **10 இலட்சம் ரூபாய்** வரை தேவைப்படுகிறது.

எனவே, நல்லுள்ளம் கொண்ட சகோதரர்கள் மேற்படி பொருளாதாரத்திற்கு உதவி செய்து **சுவனத்தைப் பெற அன்புடன் வேண்டுகிறோம்.** உதவி செய்ய முன்வருபவர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.

| 9843042027 | 9944685559 | 9443899786 | 9443426137 |
| --- | --- | --- | --- |
| தலைவர் | செயலாளர் | முத்தவல்லி | கௌரவ ஆலோசகர் |

**Account Name :** **Masjidhe Noor & Madhrasa Sunnath Jamath Paribalana Sabhai**

**Bank Name** : UNION BANK OF INDIA

**Branch** : SOMANUR

**Account No.** : **334902010010940**

**IFSC Code** : UBIN0533491

G Pay    PhonePe    **94438 99786**

**MASJIDHE NOOR MADHRASA SUNNATH JAMATH PARIBALANA SABHAI**

**Somanur - 641668. Coimbatore Dt. Tamilnadu**

பொழிகிறது. நமக்கென்ன என்று நமது வேலையைப் பார்த்தால் அது தனது வேலையை காட்டி விடும். அது தனது கோர முகத்தைக் காட்டினால் மனிதர் களால் தாங்கமுடியாது.

மழை வேண்டும், மழை வேண்டும் என்கிறோம். அது பயனுள்ள மழையாக இருக்க வேண்டும் என்று வேண்டு வதில்லை. இது ஒரு பக்கம். தேவைக்கு அதிகமாக மழை பொழியும்போது, மழை வேண்டாம் மழை வேண்டாம் என்று கூப்பாடு போடுகிறோம். இது மறுபக்கம். மழை அதிகம் பொழியும்போது அதை வேண் டாம் என்று கூறக்கூடாது. மாறாக பின்வரு மாறு இறை வனிடம் வேண்ட வேண்டும்.

## தேவைக்கு அதிகமான மழை பொழியும்போது ஓதவேண்டிய துஆ

“அல்லாஹும்ம ஹவா லைனா, வலா அலைனா, அல்லாஹும்ம அலல் ஆகாமி, வல்ஜிபாலி, வல்ஆஜாமி, வள்ளிராபி, வல் அவ்தியத்தி, வமனாபிதிஷ்ஷஜரி”

யா அல்லாஹ்! எங்கள் சுற்றுப்புறங்களில் [இம் மழை யைப் பொழியச் செய்வா யாக!] எங்களுக்குப் பாதகமாக இதை நீ ஆக்கிவிடாதே யா அல்லாஹ்! மேடுகளிலும், மலைகளிலும், குன்றுகளிலும், ஓடைகளி லும், மரங்கள் முளைக்கும் இடங்களிலும் இந்த மழையை பொழியச் செய்வாயாக! என நபி [ஸல்] அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

(நூல் : புகாரி)

தேவைக்கு அதிகமான மழைஎன்பது உயிர்சேதங்களை யும், பொருட் சேதங்களையும், பலவிதமான இழப்புகளையும் ஏற்படுத்திவிடும். எனவே தேவைக்கு அதிகமாக மழை பொழியும்போது, மழை வேண் டாம்என்று கூறாமல், “இறைவா! இந்த மழையை மழை பொழியாத சுற்றுப்புறங்களில், சுற்றுவட்டாரப் பகுதிகளில், அண்டை மாவட்டங்களில், அண்டை மாநிலங்களில் பொழியச் செய்வாயாக! இதை எங்களுக்கு நீ சாதகமாக ஆக்கி விடு! பாதகமாக ஆக்கி விடாதே! இந்த மழையை ஓடைகளில் பொழியச் செய் வாயாக! வனப்பகுதிகளில் பொழியச் செய்வாயாக! மலைப் பகுதிகளிலும், குன்றுப் பகுதிகளிலும் பொழியச் செய் வாயாக!” என்று துஆ கேட்க வேண்டும்.

இவ்வாறு துஆ கேட்டால், தொடர் மழையிலிருந்தும், கன மழையிலிருந்தும், பெரும் மழையிலிருந்தும், மழையின் பாதிப்பிலிருந்தும், மழையின் ஆபத்துகளிலிருந்தும், மழை

ஏற்படுத்தும் சேதாரங்களிலி ருந்தும், மழையால் ஏற்படும் உயிரிழப்புகளிலிருந்தும் மனிதர்கள் தங்களையும், தங்களின் உடைமைகளையும், தங்களின் உயிர்களையும் தற்காத்துக் கொள்ளலாம்.

இல்லையென்றால் தங்களையும், தங்களின் உயிர்களையும், உடைமைகளையும், உறவினர்களையும், வீடுகளையும், கால்நடைகளையும், கடைகளையும் இன்னும் இது போன்றவற்றை இழக்க நேரிடும்.

மேலும் கனமழை பொழியும் போது கனமழையின் அழிவிலிருந்து இறைவனிடம் பாதுகாப்பு வேண்டி பின்வருமாறு துஆ கேட்க வேண்டும்.

**“அல்லாஹும்ம சுக்யா ரஹ்மத்தின் வலா சுக்யா அதாபின் வலா மஹ்கின் வலாபலாயின் வலா ஹதமின் வலா:கர்கின்”**

‘யா அல்லாஹ்! ரஹ்மத்துடைய பொழிதலாக இதனைப் பொழியச் செய்வாயாக! வேதனையின் பொழிதலாக, அழிக்கும் பொழிதலாக, துன்பத்தின் பொழிதலாக, இடிந்து விழும் பொழிதலாக, நீரில் மூழ்கும் பொழிதலாக ஆக்கிவிடாதே!'

மழை அதிகமாகப் பொழிந்து, அதனால் மக்களுக்கு கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட ஆரம்பித்தால், உடனே இந்த துஆவை கேட்க வேண்டும்.

2023 டிசம்பர் 5-ம்நாள் அன்று சென்னையில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளும் அதிகம். 2023-ம் ஆண்டில் கடந்த டிசம்பர் 17, 18 ஆகிய இருதினங்களாக தென் மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடர் மழை பெய்தது. அது கனமழையாக மாறியது.

அந்த மழை என்பது வரலாறு காணாத மழை. நூறாண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு கன மழை. அதனால் நான்கு மாவட்டங்களிலும் இயல்பு நிலை இரண்டு நாட்களாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக தூத்துக்குடி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகள் யாவும் திறக்கப்பட்டன. 2 லட்சம் கன அடி நீர் அணைகளிலிருந்து வெளியேறியது. தாமிரபரணி ஆறு நிரம்பி வழிந்தோடியது. கரைபுரண்டு தண்ணீர் ஓடியதால் ஆற்றங்கரையோரம் அமைந்துள்ள அனைத்து பகுதிகளும் கடுமையான சேதாரத்திற்கு உள்ளாயின. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. தாழ்வான குடியிருப்பு

களில் வெள்ளம் புகுந்தது. பெரும்பாலான வீடுகளில் வெள்ள நீர் இடுப்புக்கு மேலே ஏறியது. பல்லாயிரக்கணக் கான ஏக்கர் விவசாய நிலம் முழுவதும் வெள்ள நீர். அதனால் விவசாயப் பயிர்கள் சேதமாகின. பலவீடுகள் இடிந்து விழுந்தன. ஆயிரக்கணக்கான கால்நடைகள் செத்து மடிந்தன. ஆயிரக்கணக்கான இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டன. வெள்ளநீரில் சேதாரமடைந்த ஆயிரக்கணக்கான வாகனங்கள் பழுது பார்க்கும் கடைகளில் அணிவகுத்து நிற்கின்றன.

பலசரக்கு கடைகளில் வெள்ள நீர் புகுந்து பலகோடி மதிப்பிலான பலசரக்கு சாமான் கள் அழிந்துவிட்டன. செல் போன் கடைகளில் வெள்ள நீர் புகுந்து பலகோடி செல்போன் கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இவ்வாறு மொத்த வெள்ள நீரும் தூத்துக்குடியை நோக்கி படையெடுத்தது. அதனால்தூத்துக்குடிமாவட்டமே இரண்டு வார காலங்களாக ஸ்தம்பித்து விட்டது. அங்கு வெள்ள நீர் வடிய இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன. நான்கு மாவட்டங்களில் ஒட்டுமொத்த சேதாரம் என்பது 5 ஆயிரம் கோடியை தாண்டிவிட்டது. 5 ஆயிரம் கோடி அளவுக்கு சேதாரம் ஏற்பட்டு விட்டது.

ஒரு வருடத்திற்கு பொழிய வேண்டிய மழை இரண்டே நாட்களில் பொழிந்து விட்டது. இதனால்தான் கடுமையான சேதாரம் ஏற்பட்டு விட்டது.

இந்தியாவைப் பொறுத்த அளவில் இரண்டு விதமான பருவமழை காலங்கள் உண்டு. 1. தென்மேற்கு பருவ மழை. இது ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய நான்கு மாதங்களில் பொழியும். இந்தியாவில் 80% சதவீதம் இந்த மழை பொழியும். 2. வடகிழக்கு பருவமழை. இது அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் பொழியும். தமிழகம் பெரும்பாலும் வட கிழக்கு பருவ மழையை நம்பித் தான் உள்ளது.

2023 டிசம்பர் 5-ம் நாளன்று சென்னையில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையும, 2023 டிசம்பர் 17, 18 ஆகிய இருதினங் களில் நான்கு தென் மாவட்டங் களில் பொழிந்த கனமழையும் வடகிழக்கு பருவமழை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தகனமழைபொழிவிற்கு முக்கியக் காரணம் 'எல்நினோ' என்பதாகும். 'எல்நினோ' என்றால் என்ன? அதாவது உலகிலேயே பெரும் கடல் என்பது பசிபிக் பெருங்கடல்

தான். இந்தப் பெருங்கடலின் மேலே வளி மண்டலத்தில் சூரிய வெப்பம் 0.5 டிகிரியோ அல்லது அதை விட அதிகமாகவோ இருந்தால் அதற்கு ‘எல்நினோ’ என்று சொல்லப்படுகிறது. இதைவிடக் குறைவாக இருந்தால் ‘லாநினோ’ என்று கூறப்படுகிறது.

இந்த ‘எல்நினோ’ என்பது பருவநிலை மாற்றங்களால் சூரியன் அதிகம் வெப்பமடைவதால் ஏற்படுகிறது. இந்த ‘எல்நினோ’ என்பது முன்பு 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும். ஆனால் இப்போதெல்லாம் பருவநிலை மாற்றங்களால் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வந்து செல்கிறது. இப்போது 2023 டிசம்பர் 5 அன்றும், 17,18-ம்தேதி அன்றும் கனமழை ஏற்பட்டதற்கு இந்த ‘எல்நினோ’ தான் காரணம். ஏனென்றால் இந்தப் பருவம் ‘எல்நினோ’ பருவகாலமாகும். இந்த ‘எல்நினோ’ பருவகாலங்களில் மழையும் அதிகமாகி கன மழையாகப் பொழியும். குளிரும் அதிகமாகி கடுங்குளிராக பனிபொழியும். வெயிலும் அதிகமாகி கடும் கோடையாக வெயில் கொளுத்தும்.

இந்த கன மழை குறித்து ‘கிளைமேட் டிரெண்ட்ஸ்’ எனும் நிறுவனம் ஆய்வு


# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

மேற்கொண்டது. அந்த ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

'தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் டிசம்பர் மாதம் வரைக்கும் கனமழையை எதிர்கொள்ளும். பொதுவாக வடகிழக்கு பருவமழை 70 நாட்கள் நீடிக்கும். இது தமிழக, ஆந்திர கடலோரப் பகுதிகளைத்தான் அதிகம் பாதிப்புக்கு உள்ளாக்கும். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 453.70 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இது அதிக மழையாகும். ஏனெனில் இயல்பான மழை என்பது 430.70 மில்லி மீட்டர் ஆகும். தற்போது பெய்த மழை இயல்பைவிட அதிகமானதாகும்'.

இந்த கனமழைக்கு காலநிலை மாற்றம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில், பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்ட சுழற்சி, வெப்பச் சலன மேகங்களை உருவாக்கியது. அதுமட்டுமல்லாமல் கணிசமான வளிமண்டல வேறுபாட்டுக்கு வழிவகுத்து, ஈரப்பதம் நிறைந்த கிழக்கு காற்று வலுவாக உயர்ந்ததும் இந்த கனமழைக்கு காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு கனமழை பொழிவது உலக அழிவின் சிறு அடையாளங்களில் ஓர் அடையாளமாகும்.

'மக்களுக்கு அதிக [கன] மழை பொழியாதவரை உலக அழிவு நாள் வராது. அந்த மழை என்பது கோபுர மாளிகை வீடுகளையும் விடாது; குடிசை போன்ற ஓலை வீடுகளையும் விட்டு வைக்காது. அது அனைத்து வீடுகளையும் அடைந்தே தீரும்" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்'.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மது)

கனமழை என்பது செழுமையின் அடையாளம் அல்ல! அது பஞ்சத்தின் அடையாளம்! மழை பொய்த்து விடுவது பஞ்சமல்ல! மழை அதிகம் கொட்டோ கொட்டோ என்று கொட்டுவது தான் பஞ்சம்!

'மழை பொய்த்து விடுவதற்குப் பெயர் பஞ்சமன்று. மாறாக, பஞ்சம் என்பது, மழை பெய்து கொண்டேயிருந்தும் பூமியில் [புற்பூண்டுகள்] எதுவும் முளைக்காமலிருப்பதாகும்" என நபி [ஸல்] அவர்கள் கூறினார்கள்.'

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் 5563)

**மிதமான மழை செழுமை!**
**கனமழை பஞ்சம்!**

# பற்கள்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

"தூய்மை, ஈமானில் பாதியாகும்" (நபிமொழி)

ஆகவே, நமது உடல், உடை, உணவு, இருப்பிடம் ஆகியவற்றை தூய்மையாக வைத்துக் கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும்.

"(நபியே!) உமது ஆடையை பரிசுத்தமாக்கி வைத்துக் கொள்வீராக!"

"அசுத்தங்களை வெறுத்து விடுவீராக!"

- அல்குர்ஆன் (74 : 4, 5)

"உங்கள் வாய்கள் குர்ஆனின் வழிகளாகும். ஆகவே மிஸ்வாக் செய்வதன் மூலம் மணமாக்கி வையுங்கள்" - நபிமொழி


நமது வாய், உணவின் வழியுமாகும் அழகிய உடலில் வாயை அமைத்து, அதனுள் பற்கள், ஈறுகள், நாக்கு முதலியவற்றை அற்புதமாக அமைத்து, அழகூட்டியுள்ள அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

பற்களும், விரல்ரேகை போன்று தனித்தன்மை கொண்டவையாகும். ஒருவரின் பற்கள் போல, மற்ற எவரின் பற்களும் ஒத்தத்தன்மை கொண்டிராது. இரட்டையர்களாக இருந்தாலும் ஒத்திருப்பதில்லை.

## பற்களின் அமைப்பு

இவை இரண்டு வகைப்படும்.

1. பால் பற்கள் (Milk Teeth) தற்காலிகமானது.
2. நிரந்தப் பற்கள் (Permanent Teeth) நிரந்தரமானவை.



**தலைப்பகுதி :**

மேல் பகுதி வாயில் காணப்படுவது.

**வேர்ப்பகுதி :**

ஈறுகளுக்குள் புதைந்து, அதற்கு கீழும், மேலும் உள்ள எலும்புகளுடன் இணைந்திருப்பது.

**கழுத்து :**

இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள பகுதி. இதன் வழியாக, இரத்தக் குழாய்களும், நரம்புகளும் நுழைகின்றன.

**எனாமல்** (Enamel) :

இது பற்களின் வெளிப் பகுதியாகும். உடலிலுள்ள உறுப்புகளில், இதுதான் மிகக் கடினமான பகுதியாகும்.

இது பற்களைப் பாதுகாக்கிறது. எலும்புகளைப் போல், கால்சியம், பாஸ்பேட் ஆகிய பொருட்களால் உருவாக்கப் பட்டது. மேலும் அதிலுள்ள சில புரதங்கள், படிகம் (Crystallite) ஆகியன அதற்கு அதிகவலிமையைத் தருகின்றன என்ற போதிலும், இது கீறல், உடைந்து சிதறுதல், சிதைவு ஆகியவற்றிற்கு உட்படுகிறது.

நாம் பருகும், குடிப்புகள், சர்க்கரை, ஆகியன பற்களில் காணப்படும் நுண்கிருமிகளால் தாக்கப்பட்டு, அமிலம் தோன்றுவதால், இவை தூண்டப்படுகின்றன.

பற்களின் வெண்மை எனாமலால் ஏற்படுகிறது.

எனாமல் இருப்பிடத்தில் நிலைத்திருக்கும்; வளர்வதில்லை.

**டென்டைன்** (Dentine) :

இது எனாமலுக்குக்கீழ் அமைந்துள்ள படலம். எலும்புகளைவிட வலுவானது. இது பல ஓடைகளால் (Channels) ஆக்கப்பட்டது. இவற்றின் மூலம் நரம்புகளின் சமிக்கைகள் செல்கின்றன. சத்துப் பொருட்களும் பற்களுக்குக் கிடைக்கின்றன. வெண்மையும், மஞ்சளும் கலந்தது இதன் நிறம்.

இது மூன்று வகைப்படும். முதன்மை வகை, இரண்டாம் வகை மற்றும் சிதைவை சீர் செய்யும் வகை (Reparative).

டென்டைன் வளர்ந்து கொண்டும் அதில் மாற்றங்கள் ஏற்பட்டு கொண்டுமிருக்கும். இது பற்களின் உருவ அமைப்பையும், கனத்தையும் காட்டும் முக்கிய பகுதியாகும்.

**பல்ப்** (Pulp) :

பஞ்சு போன்ற பிசுபிசுப்பான திசுக்களால் நிரப்பப்பட்ட பகுதி. இரத்தக் குழாய்கள், நரம்புகள் ஆகியன இதில் காணப்படும். வலி, தொடு உணர்வு, வெப்பம், குளிர்ச்சி ஆகிய உணர்வுகளை உணர்த்துகிறது.

**சிமெண்ட்** (Cement) :

எலும்பு போன்றது. டென்டைன் பகுதியைச் சுற்றி, கழுத்துப் பகுதியிலிருந்து வேர் முனைகள் வரை செல்கிறது. வேர்ப்பகுதி, எலும்பு

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

களுடன் இணைந்திருப்பதை உறுதி செய்கிறது.

**கழுத்து** (Neck) :

பற்களின் நடுப்பகுதி. இதில் அமைந்த துளைகள் மூலம் இரத்தக் குழாய்களும், நரம்புகளும் நுழைகின்றன.

**பால்பற்கள்** (Milk Teeth) :

கருவில் குழந்தை வளரும் போது 6வது வாரம் பால்பற்கள் உருவாகத் தொடங்குகின்றன. குழந்தை பிறந்த பின்பு 6வது மாதம் தொடங்கி 24வது மாதம் வரை நீடித்து, பல் வளர்ச்சி முடிவுறும். பால்பற்கள் மொத்தம் 20.

இவை ஒவ்வொன்றாக கழன்று, பிறகு நிரந்தரப் பற்கள் முளைத்து விடும்.

**நிரந்தரப் பற்கள்**
(Permanent Teeth) :

இவை 6 வயதில் தொடங்கி 25 வயதில் வளர்ச்சி நிறைவடையும். இவைகள் மொத்தம் 32.

முன் பற்கள் - 8 (Incisors).

ஊசிப்பற்கள்-4 (Canines)

முன் கடைவாய்ப்பற்கள் - 8 (Premolars)

கடைவாய்ப்பற்கள்-12 (Molars)

கடைசிக் கடைவாய்ப்பல் அறிவுப்பல் (Wisdom Teeth). சிலருக்கு, இந்த பல் முளைப்பதேயில்லை. 20 வயதில் முளைப்பதாகும்.

**ஈறுகள்** (Gums) :

இவை அடர்ந்த நார்த்திசுக்களால் அமைக்கப்பட்டவை. இவை நகர்வதில்லை. மேல் பகுதியில் மாக்ஸில்லா (Maxilla) எலும்புகளுடனும், கீழ் பகுதியில் மேண்டிபுலார் (Mandibular) எலும்புடனும் இணைந்துள்ளன. இவற்றில், அதிக அளவில் இரத்தக் குழாய்கள் புதைந்துள்ளன. சவ்வுப்படலத்தால் போர்த்தப் பட்டுள்ளன. பற்களின் ⅓ பகுதி, இவற்றில் புதைந்துள்ளது. பற்கள் உணவை நன்கு மென்று ருசித்து சாப்பிட உதவி செய்து, எளிதில் ஜீரணிக்க வழி ஏற்படுத்துகின்றன. மேலும் இவை முகத்தை அழகுபடுத்துகின்றன.

**நாக்கு** (Tongue) :

இது தசைகளால் ஆக்கப் பட்டுள்ளது. உணவின் சுவையை உணரச் செய்கிறது. உணவை விழுங்கவும், பேசும் போது சொற்களை நன்கு உச்சரிக்கவும் உதவுகிறது.

**சுவை அரும்புகள்**
(Taste Buds) :

நாவின் மேற்பரப்பிலும், வாயின் மேற்பரப்பு மற்றும் பின்பகுதி ஆகிய இடங்களிலும், சுவை அரும்புகள் அமைக்கப் பட்டுள்ளன. உணவுகளின் வேறுபட்ட சுவைகளை உணர உதவுகின்றன. ஒருவரிடம் 3,000 முதல் 10,000 சுவை அரும்புகள் உள்ளன.

**சுவைகள் :**

1. இனிப்பு (Sweet)
2. உப்பு (Salt)
3. புளிப்பு (Soar)
4. உறைப்பு (Pungent)
5. கசப்பு (Bitter)
6. துவர்ப்பு (Astringent)

இவை அறுசுவைகள் என்ற முதன்மைச் சுவைகள் ஆகும். இவை பொதுவானவை; அடிப்படையானவை.

**நாவில் சுவை அரும்புகளின் இருப்பிடம்**

இனிப்பு, உப்பு - நுனிநாக்கு.

புளிப்பு, உறைப்பு - நாவின் ஓரப் பகுதிகள்.

கசப்பு, துவர்ப்பு - பின் நாக்கு.

100க்கும் அதிகமான சுவைகளை நாக்கு உணரும் திறன் பெற்றது.

மனிதன் முதுமையடையும் பொழுது, உடல் வலிமை குறைகிறது. மூட்டுகள் தேய்ந்து விடுகின்றன. கண்பார்வை குறைகிறது. செவிப்புலன் மந்தமாகிவிடுகிறது.

ஆனால், சுவைகள் மட்டும் குறைவதில்லை. இது, மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய அருட்பேறு. அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்!

**உமிழ் நீர் :**

சுரப்பிகள் மூலம், வாயில் உமிழ்நீர் சுரந்து, வாயின் வறட்சியை நீக்குகின்றது.

CERTIFIED ISO 9001:2008 COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

CERTIFIED ISO 9001:2008 COMPANY

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

**அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்**
**அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்**

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

ஒருவர் உடலில், தினம் 1.5 லிட்டர் உமிழ் நீர் சுரக்கிறது (0.5 மி.லி./1 நிமிடம்) வாழ் நாளில் 50,000 லிட்டர் அளவு சுரப்பதாக அறியப்பட்டுள்ளது.

**இதன் பயன்கள் : -**

1. உடல் நலம் பேண உதவுகிறது.
2. வாயிலிடும் உணவை, எளிதாக விழுங்குவதற்கும், வாயில் தங்கிவிடும் உணவுத் துகள்களை நீக்கி, வாயைத் தூய்மைப்படுத்துவதற்கும் உதவுகிறது.
3. அதிலுள்ள சில நொதிகள் (Enzymes) ஜீரணத்தை தூண்டுகின்றன.
4. இதிலுள்ள கால்சியம், மற்றும் பாஸ்பேட் முதலிய இரசாயனப் பொருட்கள், பற்களைச் சிதைத்து கரைகளிலுள்ள அமிலங்களை, செயலிழக்கச் செய்கின்றன.
5. வாயில் நோய்க் கிருமிகள் நிறைந்துள்ளன. இவை திசுக்களைச் சிதைத்து, சொத்தைப் பற்களைத் தூண்டச் செய்வன. உமிழ் நீர் இந்நோய்க் கிருமிகளை வாயிலிருந்து நீக்கி விடுகிறது.
6. தையோசையனேட் அயனிகள் (Thiocyanate ions) மற்றும் லைஸோஸைம் (Lysozyme) நொதி, உமிழ் நீரில் உள்ளன. இவற்றுடன் நோய் எதிர்ப்புப் புரதங்களும் சேர்ந்து வாயிலுள்ள நோய்க் கிருமிகளை அழித்து விடுகின்றன. இவை மருந்துகளாகச் செயல்படுகின்றன.
7. வாயில் உமிழ் நீர் இல்லை என்றால் வாய் முழுவதும் புண்ணாகி, பற்கள் சொத்தைப் பற்களாகி (Caries) விடும்.
8. மூக்கடைப்பை நீக்கும் மருந்துகள், வலி நீக்கும் மருந்துகள், சிறுநீரை அதிகம் வெளியேற்றும் மருந்துகள் ஆகியன உமிழ் நீர் சுரப்பதைக் குறைப்பனவாகும். (தொடரும்)

## இறைநம்பிக்கையாளர் – இறைமறுப்பாளனின் நிலைகள்

“ஓர் இறைநம்பிக்கையாளரின் நிலையானது, நாணல் மரம் போன்றதாகும். காற்றடிக்கும் திசையில் அதன் இலை சாயும். காற்று (அடிப்பது) நின்றுவிட்டால் நேராக நிற்கும். இவ்வாறு தான் இறைநம்பிக்கையாளரும் சோதனைகளின்போது அலைக்கழிக்கப்படுகிறார். (எனினும், அவர் பொறுமை காப்பார்.) இறை மறுப்பாளனின் நிலையானது உறுதியாக நிமிர்ந்து நிற்கும் தேவதாரு மரத்தைப் போன்றதாகும். தான் நாடும்போது அதை அல்லாஹ் (ஒரேயடியாக) உடைத்து (சாய்த்து) விடுகின்றான்” என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

நூல் : ஸஹீஹ் புகாரி 7466.

தொடர்-8

# சீரத்துந் நபி (ஸல்) அவர்களின் சீரிய பார்வையில்....

மவ்லானா முஃப்தீ முஹம்மது ஹுஸைன் காஸிமி

## அல்ஹதீஸ்

நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள், தன் முடிகளுடன் பிறர் முடிகளை (சவுரி முடிகளை) சேர்க்கும் பெண்களையும், அவ்வாறு முடிகளில் பிறர் முடிகளை சேர்க்க உதவும் பெண்களையும், தம் உடலில் பச்சை குத்தும் பெண்களையும், அவ்வாறு பச்சை குத்துவதற்கு உதவும்பெண்களையும்அல்லாஹ் சபிப்பானாக. (அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக!) என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள்
(நூல் : புகாரி)

மேலும் புகாரி, முஸ்லிமில் ஒரு நிகழ்ச்சி பின்வருமாறு இடம் பெற்றுள்ளதாவது. ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "தம்மை அழகு படுத்திக் கொள்வதற்காக பச்சை குத்திக்கொள்ளும் பெண்களை யும், பச்சை குத்துவதற்கு உதவும் பெண்களையும், பிறர் மூலம் முகத்தின் புருவ முடிகளை பிடுங்கி எடுக்கும் பெண்களை யும், அல்லாஹ்வின் படைப்புகளை உருமாற்றுகின்ற பெண் களையும் அல்லாஹ் சபிப்பானாக! (அத்தகைய பெண்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டா கட்டும்) என்று கூறினார்கள். அவர்களிடம் ஒரு பெண் வந்தார். வந்த அவர் ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்களைப் பார்த்து "நீங்கள் இவ்வாறு சாபமிடுவதாக எனக்கு செய்தி கிடைத்தது. நீங்கள் அவ்வாறு சபித்தீர்களா?" என்று கேட்டார். உடனே ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் "எந்த மனிதனை நபி (ஸல்) அவர்களே சபித் துள்ளார்களோ குர்ஆனிலும் அந்த மனிதன் சாபம் இடப் பட்டுள்ளானோ அத்தகைய மனிதனை நான் ஏன் சபிக்கக் கூடாது?" என்று பதில் கூறினார்கள்.

அதற்கு அப்பெண் "நான் குர்ஆன் முழுவதையும் திட்ட மாக ஓதி விட்டேன். அதில் நீங்கள் கூறுவது போன்று நான்

பெற்றுக் கொள்ளவில்லையே" என்று வினவினார். அதற்கு ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் "நிச்சயமாக நீ குர்ஆனை கவனித்து ஓதி இருந்தால் கண்டிப்பாக அதை பெற்று கொண்டிருப்பாய்" என்று கூறியபின் "ஓ பெண்ணே நீ" நம் தூதர் எதைக் கொடுத்தாரோ அதனை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். எதனை விட்டும் உங்களை அவர் தடுத்தாரோ (அதனை விட்டும்) விலகிக் கொள்ளுங்கள், என்னும் (அல்ஹஷ்ர் வசனம் 7) வசனத்தை ஓதவில்லையா? என்று கேட்க "ஆம் ஓதி உள்ளேன்" என்று அப்பெண் பதில்கூறினார். உடனே ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் மேற்கண்ட விஷயங்களை விட்டும் நபி (ஸல்) அவர்கள் திட்டமாக தடுத்துள்ளார்கள் என்று பதிலுரைத்தார்கள்".


மேற்கண்ட ஹதீஸில் இன்றைய நியூ பேஷன் பல அனாச்சாரங்களை தெளிவாக எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய செயல்கள் அகிலங்களை படைத்துப் பரிபாலிக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் சிறந்த படைப்பான அழகிய மனித உறவை சிதைக்கும், இறை ஆற்றலை பரிகாசம் செய்யும் செயல்கள் என்று கண்டிக்கப்பட்டுள்ளன. இன்றைய நவீன அழகு நிலையம் (பியூட்டி பார்லர்) கோடிட்டு காட்டப் பட்டுள்ளது. இதுவெல்லாம் பெரும் சாபக் கேடுகளை ஈட்டித் தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆகவே அல்லாஹ், ரசூல், மறுமையின் மீது விசுவாசம் கொண்டவர்கள் இத்தகைய அனாச்சாரங்களை விட்டு முழுமையாக தானும் தவிர்த்துக் கொண்டு குடும்பத்தாரையும் சமுதாய மக்களையும் எச்சரித்து பாதுகாக்க கடமைப் பட்டவர்களாவர். உதடுகளுக்கு பூசப்படும் லிப்ஸ்டிக் மற்றும் நகங்களுக்கு பூசப்படும் நக பாலிஷ் இது போன்ற அழகு சாதனங்கள் கூட மேற்கண்ட ஹதீஸில் அடங்கும். மறுமையை நினைவில் நிறுத்தி நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வல்ல ரஹ்மான் அல்லாஹ் கிருபை செய்தருள்வானாக ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

## நியூ ஃபேஷன் புர்கா

ஏற்கனவே ஆடைகள் விஷயத்தில் இறுக்கமான ஆடைகள் வெறுக்கத்தக்கவை என தெளிவுபடுத்தி விட்டோம். அப்படி இருக்க பெண்களுடைய மேனி அழகையும், ஆடை, ஆபரண அழகையும் மறைப்பதற்காகவே வழிகாட்டப்பட்ட புர்கா இன்று பல வண்ண கற்கள்

பதிக்கப்பட்டும், பல வர்ணப் பூக்கள் தரிக்கப்பட்டும் அழகுபடுத்தபட்டு ஜொலிக்கும் அதே சமயம் உடல் அவய வடிவங்களை எடுத்துக்காட்டும் வகையில் இறுக்கமாக தைக்கப் பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டு பார்வை தாழ்த்தி செல்லும் ஆண்களையும் தலை நிமிர்த்தி அண்ணார்ந்து பார்க்க அழைப்பு விடுக்கிறது. இத்தகைய புர்கா அணிந்தவர்கள் 'எங்களுக்கு நேரானபாதையைகாட்டுவாயாக! யார் மீது நீ கிருபை புரிந்தாயோ அத்தகையவர்களின் பாதையை காட்டுவாயாக! உன்னால் கோபிக்கப்பட்டவர்களின், இன்னும் வழி தவறியவர்களின் பாதை அல்ல' என்று ஒவ்வொரு தொழுகையிலும் ஓதுவது எவ்வளவு விநோதமாக இருக்கிறது!

கலிமா, தொழுகையை எடுத்துக் கொண்டு, இல்மே இலாஹி, திக்ரே இலாஹியுடன், தன்னுடைய உரிமைகளை மதித்திட பிறருடைய கடமை களை நிறைவேற்றி, அல்லாஹ் வின் பொருத்தத்தைப் பெற தனது உயிரையும், பொருளை யும் எடுத்துக் கொண்டு, ஊர் ஊராக, தெருத் தெருவாக நாடு நாடாக, அல்லாஹ் ஹிதாயத் தந்தால் இன்ஷா அல்லாஹ் முழு உலகிலும் சுற்றுவோம்.



## மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோர்களுக்காக)
## மேல்விஷாரம்

★ அல்ஹம்துலில்லாஹ்! 2010–ம் ஆண்டு மக்தபாக தொடங்கிய நமது மதரஸா படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது நாழிரா, ஹிஃப்ழு, ஜுஸ்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

★ மதரஸாவில் 100 மாணவர்கள் (ம) 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்)

★ இதுவரை சுமார் 31 மாணவர்கள் 10–ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

★ ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 900 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/– செலவாகிறது.

★ மதரஸாவில் 20 ஆசிரியர்கள் மற்றும் 11 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

★ மதரஸாவிற்காக சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. தற்காலிக கட்டிடத்தில்தான் (Sheet Hall) மதரஸா செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்களுக்கு மழை, வெயில், குளிருக்கான போதிய வசதிகள் இல்லை.

★ அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

**கனிவான வேண்டுகோள் :** மதரஸாவின் வருடாந்திர, மாதாந்திர, வாராந்திர மற்றும் தினசரி செலவுகளில் தங்களின் (நன்கொடை, ஸதகா, ஜகாத், ஸதகத்துல் ஜாரியாவை)

**கொண்டு பங்கெடுத்துக் கொள்ளவும்**

ஜஸாக்கல்லாஹு கைரா

## மதரஸாவின் கல்வி பிரிவுகளின் முழு விளக்கம்

| பிரிவுகள் | மாணவர்கள் | மாணவிகள் | பார்வை அற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நாழிரா | 26 | 20 | 14 | 46 |
| ஹிப்ழு | 43 | 70 | 26 | 113 |
| ஜும்ரா | 29 | 12 | 10 | 41 |
| கிராஅத் | 28 | மக்தப் 20 | 10 | 20 |
| | | | மொத்தம் | 220 |
| **உலகக் கல்வி** | | | | |
| 10th | 27 | 89 | 13 | 116 |
| 12th | 05 | 02 | 02 | 07 |
| கல்லூரி | 12 | - | 02 | 12 |

## செலவினங்கள்

| | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,500 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 66,000 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 6,60,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 79,20,000 |
| மதரஸாவின் கடன் | 10,00,000 |

## பட்டம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| மொத்த ஹாபிழ்கள் | 30 |
| மொத்த உலமாக்கள் | 17 |
| மொத்த ஹாபிழாக்கள் | 100 |

G Pay

Scan and pay with any BHIM UPI app

**A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**STATE BANK OF INDIA**
CURRENT ACCOUNT NO : 35612371063
Melvisharam Branch Code : 3783
IFSC : SBIN0003783

**INDIAN BANK**
CURRENT ACCOUNT NO : 6288904753
Melvisharam Branch Code : 1312
IFSC : IDIB000M139

اَلْمَدْرَسَةُ الْاِمْدَادِيَةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيْلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْدُ


**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**
Run By : Imdadiya Educational & Charitable Trust
Registered under section 12AA of the Income Tax Act,1961 as per
Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499
539,Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500
Regd. No:59/2014
Estd: 1431-H/2010

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



### Platinum Package

(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

### Platinum Short Package

(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.

ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

“நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி
மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்.”

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)


என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அளப் பெரும் பேரருளால்...

# ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரியின்
# "மல்லவீ ஆலிம் ஸஆதி"
# பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்

இன்ஷா அல்லாஹ்....

நாள் : 03.03.2024 ஞாயிறு (ஹிஜ்ரி : 21.08.1445) நேரம் : காலை 10.00 மணி முதல்

இடம் : அல்லாமா முஃப்தீ "அஸ்அதுல் மில்லத்" அல்ஹாஜ் அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் அவர்கள் நினைவு அரங்கம், J.M.S. அரபு கல்லூரி வளாகம், மதுரை-20.

தலைமை : மவ்லானா அல்ஹாஜ் S.ஸபூர் முஹ்யித்தீன் ஹள்ரத்
தலைவர் : J.M.S.அரபு கல்லூரி & M.I.W.S.பைத்துல்மால்.

வாழ்த்துரை : கல்லூரிப் பேராசிரியர்கள், உலமா பெருமக்கள், சமுதாய முன்னோடிகள், வாரி வழங்கும் வள்ளல்கள்

ஸன்னது வழங்குபவர் : அஷ்ஷைகு அல்லாமா "ஸத்ருல் முதர்ரிஸீன்" "ஷைகுல் ஹதீஸ்"
M.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் கிப்லா தாமத் பரகாதுஹு
முதல்வர் : J.M.S.அரபு கல்லூரி.

பட்டமளிப்பு விழா சிறப்புரை : மவ்லானா அல்ஹாஃபிழ் அல்ஹாஜ் டாக்டர்
M.சதீதுத்தீன் பாஜில் பாகவி M.A.,M.Phil.,Ph.d., ஹள்ரத்
முதல்வர் : அல்ஹுதா அரபு கல்லூரி, அடையாறு, சென்னை.

அனைவரும் வாருங்கள்! வாழ்த்துக்களை வழங்குங்கள்!

இப்படிக்கு :

தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள்,
முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள்

JMS

ஜே.எம்.எஸ்.அரபு கல்லூரி,
எம்.ஐ.டபிள்யூ.எஸ்.பைத்துல்மால்
ஜாமிஆ நகர், சிவகங்கை ரோடு, மதுரை-625 020.
அலைபேசி எண்கள் : 94430 66539/94860 17570

தொடர்-9

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## கடற்கரைப் பிரார்த்தனை!

ஞானிகளில் தலைசிறந்தவர்களான ஹள்ரத் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் தமது பள்ளிவாசலில் தொடர்ந்து பல நாட்கள் தொழுகைக்குப்பின் 'மார்க்க உபதேசம்' செய்து வந்தார்கள். அப்படி ஒரு நேரத்தில் ஒருவர் எழுந்து நின்று "ஹள்ரத் அவர்களே! நீங்கள் இந்தப் பள்ளிக்கு தொழுகைக்கு வரும் எங்களிடம் மட்டுமே மார்க்க உபதேசம் செய்து கொண்டிருக் கிறீர்களே! இந்த ஊரில் கடற்கரைப் பக்கம் சென்று பாருங்கள். மக்கள் அங்கே குடியிலும், கூத்திலும், சூதாட்டத்திலும், மங்கை யின் மீதும் மயங்கிச் சாய்வதைப் போய் பாருங்கள்" என்று கூறினார்.

ஹள்ரத் அவர்கள் சிறிது நேரம் சிந்தனைவயப்பட்டு இருந்து விட்டு, அதன்படியே அன்று மாலை மார்க்க உபதேசத்திற்காக கடற்கரைப் பக்கம் சென்றார்கள்.

அந்த மனிதர் குறிப்பிட்டபடியே அங்கு மக்கள் சாய்ந்து கிடந்தனர். கண்ணியமான ஹள்ரத் அவர்களின் வருகையைக் கண்டு பலர் எழுந்து நிற்க, சிலர் விரைந்து விலகி ஓட, ஹள்ரத் அவர்கள், "பிரியமான மக்களே! நில்லுங்கள். நான் உங்கள் தோழன்தான். இன்றுமுதல் நானும் உங்களோடு சேர்ந்து குடித்து கும்மாளமிட தயாராகி விட்டேன்" என்று கூறியவர்களாக அந்தக் கூட்டத்தினருடன் சேர்ந்து கொண்டார்கள்.

ஹள்ரத்துக்கு முதல் பரிசாக மதுவைக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு! இவர்களும் முதன்முதலாக மதுவைக் கேட்டார்கள். அந்த நேரம் எல்லா மதுவும் காலியாகி இருக்க அவசரமாக ஒருவரை கடைவீதிக்கு சென்று மதுவை வாங்கி வர அனுப்பினார்கள். ஆனால், அல்லாஹ்வின் நாட்டம் என்னவோ, போனவர் வரவேயில்லை. ரொம்ப நேரமாக காத்திருந்த ஹள்ரத் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் அந்த நண்பர்களிடம் நான் சொல்வதைக் கேட்பீர்களா? என்று வேண்டிக் கொள்ள அவர் களும், "நீங்கள்தான் இன்று முதல் எங்கள் நண்பராயிற்றே! உங்கள் சொல்லை நாங்கள் கேட்போம்" என உறுதியளித்தார்கள். ஹள்ரத் அவர்கள் அனைவரையும் ஒரு கிணற்றடிக்கு

அழைத்துச் சென்று ஒளுச் செய்ய கற்றுக் கொடுத்து இரண்டு ரக்அத் தொழுகச் சொல்லிய பின் அனைவரையும் ஸுஜூதில் இருக்கச் சொல்லி அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள்.

"யா அல்லாஹ்! இந்த ஜீவன்களை இதுவரை நான் மாற்றி உன் பாதைக்குக் கொண்டு வந்து விட்டேன். இதற்குப்பின் இவர்களை மாற்ற வேண்டியது உன் பொறுப்பு" என்று துஆச் செய்தார்கள். இந்த ஞானியின் பிரார்த்தனையின் பொருட்டால் அவர்கள் அனைவரையும் அவ்லியாக்களாக மாற்றியமைத்த அல்லாஹ் அவர்களின் வழித்தோன்றல்களிலும் வலிமார்கள் தோன்றும்படி அருள் செய்தான். என்னே பிரார்த்தனையின் மாண்பு!

## அற்புதத் தீர்ப்பு!

ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுடைய கிலாஃபத் ஆட்சியில் ஒரு சிறுவன் கொண்டு வரப்பட்டான். அவனுக்கு இரண்டு தலைகள். இரண்டு முதுகுகள், நான்கு கைகள், இரண்டு கால்கள் இருந்தன. தலையிலிருந்து தொப்புள்வரை இரண்டு மனிதனைப் போன்றும் இருந்தது. அவனுக்கு வாரிசு பங்கு ஒன்றாக கொடுப்பதா? இரண்டாக கொடுப்பதா? என்ற பிரச்சனை எழுந்தது. ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள், ஹள்ரத் அலீ (ரளி) அவர்களிடம் தீர்ப்பு வழங்கும்படி கூறி அனுப்பி வைத்தார்கள்.

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் எப்படி தீர்ப்பு வழங்கினார்கள் என்றால் "அந்த சிறுவன் தூங்கிக் கொண்டிருக்கும்போது உரக்க சப்தமிடுங்கள். அப்போது அச்சிறுவனின் இருதலைகளும் ஒன்றாய் செயல்பட்டால் ஒருவனாகவும், அச்சிறுவனின் தலையில் ஒன்று மட்டும் செயல்பட்டு மற்றொன்று செயல்படாதிருந்தால் இரு நபராய் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்" என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

(தொடரும்)

---

## பொறுமைக்கு அல்லாஹ் வழங்கும் பிரதிபலன்

"உயர்ந்தோன் அல்லாஹ் கூறுகின்றான் : இறை நம்பிக்கையுள்ள என் அடியார், அவருக்குப் பிரியமான ஒருவரது உயிரை நான் கைப்பற்றிவிடும்போது நன்மையை நாடிப் பொறுமை காப்பாரானால், சொர்க்கமே அவருக்கு நான் வழங்கும் பிரதிபலனாக இருக்கும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

(நூல் : ஸஹீஹ் புகாரி 6424)

# நிஸ்ஃபு ஷஅபான் எனும் பராஅத் இரவு

**தொகுப்பு : செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை**

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍ ۘ مِّنْهُم مَّن كَلَّمَ اللَّهُ ۖ وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجَاتٍ

**“அத்தூதர்கள் அவர்களில் சிலரைச் சிலரை விட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம்; அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கின்றான் அவர்களில் சிலரைப் பதவி களில் உயர்த்தியும் இருக்கின்றான்;” - அல்குர்ஆன் [2 : 253]**

அல்லாஹ் இவ்வுலகில் சிலவற்றை வேறு சிலவற்றை விடவும் சிறப்பாக்கி வைத்துள்ளான்.

மக்காவையும், மதீனாவையும் மற்ற நகரங்களை விடவும், நமது நபி (ஸல்) அவர்களை மற்ற நபிமார்களை விடவும், சஹாபாக்களை மற்ற முஃமிகளைவிடவும், முஃமின்களை மற்ற மனிதர்களை விடவும் சிறப்பாக்கியுள்ளான்.

அதே போல ரமளானை மற்ற மாதங்களை விடவும், ஜும்ஆவை வாரத்தின் மற்ற நாட்களை விடவும், லைலத்துல் கத்ரு இரவு மற்றும் பராஅத் இரவுகளை மற்ற இரவுகளை விடவும் சிறப்பாக்கியுள்ளான்.

## ஐயமும் – தெளிவும்

பராஅத் இரவை குறித்து வரும் ஹதீஸ்களை “ளயீஃப் முர்ஸல்” எனக் கூறி முற்றாக இந்த இரவின் சிறப்புகளை மறுப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்.

ஆனால் கிட்டதட்ட இருபதிற்கும் மேற்பட்ட ஹதீஸ்களும், பத்து ஸஹாபாக்களின் ரிவாயத்துகளும் (1. ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள் 2. ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் 3. ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் 4. ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரளி) அவர்கள். 5.ஹள்ரத் முஆத்பின்ஜபல் (ரளி) அவர்கள் 6. ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் 7.ஹள்ரத் அபுஸஃலபா (ரளி) அவர்கள் 8.ஹள்ரத் அவ்ஃப் பின் மாலிக் (ரளி) அவர்கள் 9.ஹள்ரத் அபூமூஸா அஷ்அரி (ரளி) அவர்கள் 10. ஹள்ரத் உஸ்மான் பின் அபீ (ரளி) அவர்கள் மற்றும் தாபிஈன்கள், தபஉத்தாபிஈன்கள், இமாம்கள், நல்லோர்கள் இந்த இரவின்

சிறப்புகளையும், அதில் அமல் செய்வதையும் சிறப்பித்து கூறியிருப்பதாலும் முஸ்லிம்கள் இந்த இரவை சிறப்பாகக் கருதி அமல் செய்கிறார்கள்.

## பராஅத் இரவு

ஒரு தொழில் ஆரம்பிப்பதற்கு நேரம், சந்தர்ப்பம், சூழ்நிலை அமைவது போன்று நம் பாவம் மன்னிப்பதற்கு இந்த பராஅத் இரவு ஒரு வாய்ப்பாகும்.

ரஜப் விதைக்கும் மாதம்; ஷஅபான் நீர் பாய்ச்சும் மாதம்; ரமளான் அறுவடை செய்யும் மாதம் என்றும் மேன்மக்கள் கூறுவார்கள்.

அந்த ஷஅபான் மாதத்தின் பதினைந்தாவது இரவுதான் பாக்கியமுள்ள பராஅத் இரவு;

“ஹாமீம்! தெளிவான இவ் வேதத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக இதனை மிக்க பாக்கியமுள்ள ஓர் இரவில் இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாம் [இதன் மூலம்] அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறோம். உறுதியான எல்லா காரியங்களும் அதில் தான் நம்முடைய கட்டளையின் படி [தீர்மானிக்கப்பட்டு] பிரித்துக் கொடுக்கப்படுகின்றன.”

- அல்குர்ஆன் (44 : 1,2,3,4)

## பல்வேறு பெயர்களும், காரணங்களும்

இந்த சிறப்பான இரவுக்கு நான்கு பெயர்கள் கூறப்படும்.

1. இந்த இரவில் அதிகமான நரகவாசிகளுக்கு விடுதலை அளிக்கப்படுவதால் “பராஅத் இரவு” என்றும்.
2. பரக்கத் பொழியும் இரவு என்பதால் “முபாரக்கான இரவு” என்றும்
3. விதி நிர்ணயிக்கப்படும் இரவு என்பதால் “சீட்டு வழங்கப்படும் இரவு” என்றும்.
4. அல்லாஹ்வின் பிரத்யேக ரஹ்மத் இறங்குவதால் “ரஹ்மத்தான இரவு” என்றும் பெயர்கள் உள்ளன.

## பராஅத் இரவின் சிறப்புகள்

### 1) பராஅத் இரவு வணக்கமும்-நோன்பும்

நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள் சொன்னார்கள் : “ஷஅபான் மாதத்தின் பாதி [15ம் நாள்] இரவு வந்து விட்டால் அதன் இரவிலே நின்று வணங்குங்கள்; அதன் பகலில் நோன்பு வையுங்கள்; காரணம் அல்லாஹு தஆலா சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் உலகின் வானத்திற்கு இறங்கி வந்து எவரேனும் பாவ மன்னிப்பு

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

# இறைஇல்லம் விசாலமடைய உதவி செய்யுங்கள்

அல்லாஹ்வின் கிருபையால் சென்னை, முகப்பேர் ஏரி ஸ்கீம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அம்பேத்கார் நகர், 1வது தெரு, கதவு எண்.1, முகப்பேர் கப்ருஸ்தான் பின்புறம் ஒரு சிறிய இடத்தில் மஸ்ஜிதுன் நூர் & மதரஸா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

இந்த பள்ளிவாசலில் அம்பேத்கார் நகர், முகப்பேர் ஏரி ஸ்கீம் பகுதிகளிலிருந்து மக்கள் தொழுகைக்கு வருகிறார்கள். இங்கு முதியவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கும், ஸ்கூல் படிப்புடன் ஹிஃப்ழு மதரஸாவில் ஓதக் கூடியவர்களுக்கும் குர்ஆன் முழுமையாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

தொழுகையாளிகளுக்கு தற்போதுள்ள பள்ளிவாசலின் இடம் போதுமானதாக இல்லை. இப்பொழுது இருக்கும் பள்ளியை ஒட்டியே 600 சதுரடி இடம் ரூபாய் 36 இலட்சத்தில் விலைக்கு வந்திருக் கிறது. நல்லுள்ளம் கொண்டவர்கள் அல்லாஹ்விற்காக அதிகம் உதவி செய்யுங்கள். ஸதக்கத்துல் ஜாரியாவின் வகையில் நாம் மரணித்த பிறகும் நன்மை வந்து கொண்டேயிருக்கும்.

இறைவனின் வீட்டை கட்ட நீங்கள் சம்பாதித்த பணத்தை நீங்கள் இருக்கும்போதே உங்கள் கையால் உதவி செய்து இறைவனின் அன்பளிப்பான சொர்க்கத்தை பெறுவதற்கு முன்வாருங்கள்.

**பணம் அனுப்புபவர்கள் எமது கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி விட்டு அவசியம் தகவல் தாருங்கள்.**

தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் **நூர் முஹம்மது ஆமிரி : 9444273674**

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**
A/C No. : **1289135000013292**
G-pay No. : **9444273674**
Bank Name : **KARUR VYSYA BANK**
Branch : **ARUMBAKKAM**
IFSC Code : **KVBL0001289**
SWIFT Code : **KVBLINBBIND**

தேடுபவர் இருக்கிறாரா? அவரின் பாவத்தை நான் மன்னிப்பேன். எவரேனும் ரிஜ்கை கேட்பவர் இருக்கிறாரா? அவருக்கு நான் ரிஜ்கை அளிப்பேன்; எவரேனும் சிரமத்தில் அகப்பட்டவர் இருக்கிறாரா? அவரின் சிரமத்தை நான் நீக்குவேன். இவ்வாறே அல்லாஹ் [அன்றைய இரவு முழுவதும்] காலை ஃபஜ்ரு உதயமாகும் வரை கேட்டுக் கொண்டே இருப்பான்.

அறிவிப்பாளர் :
ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்
(நூல் : இப்னு மாஜா)

## 2) பராஅத் மன்னிப்பு வழங்கும் இரவு

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“ஒருநாள் இரவு வேளையில் நபி [ஸல்] அவர்களை காணவில்லை. அவர்களைத் தேடி நான் சென்றேன். அப்போது அவர்கள் வானத்தை நோக்கி தங்களின் தலையை உயர்த்தியவர்களாக ஜன்னத்துல் பகீ என்ற இடத்தில் [இருக்கக் கண்டேன்] அப்போது அவர்கள் அல்லாஹ்வும், அவனது தூதரும் உனக்கு அநீதம் செய்வர் என பயந்து விட்டாயா? என என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் “யா ரசூலல்லாஹ்! உங்களின் மனைவியர்களில் [வேறு] சிலரின் வீட்டிற்கு வந்திருப்பீர்கள் என நான் நினைத்தேன்” என்று கூறினேன். அப்போது நபி [ஸல்] அவர்கள் சொன்னார்கள் : “நிச்சயமாக அல்லாஹு தஆலா ஷஅபான் மாதத்தின் பாதி [15ஆம் நாள்] இரவில் இவ்வுலகின் வானத்திற்கு இறங்கி கலப் கோத்திரத்தவர்களின் ஆடுகளின் [அடர்த்தியான] ரோமங்களின் எண்ணிக்கையை விட அதிகமானவர்களுக்கு பாவ மன்னிப்பு வழங்குகிறான்.

(நூல் : திர்மிதீ)

## 3) ஒரு வருடத்திற்கான விதி எனும் களா கத்ர் (பட்ஜெட்) எழுதப்படும் மகத்தான இரவு

“நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓர் இரவு தொழுதார்கள். நீண்ட நேரம் “ஸுஜூத்” செய்து கொண்டிருந்தார்கள். [நெற்றியை தரையில் வைத்த வண்ணம் இருந்தார்கள். அவர்கள் மரணித்து விட்டார்களோ என்று நான் நினைத்து அவர்களின் கால் பெரு விரலை அசைத்துப் பார்த்தேன். அது அசைந்தது. தொழுகையை முடித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “ஆயிஷாவே! நான் உனக்கு துரோகம் செய்து விட்டதாக நினைக்கின்றாயா?” என்று கேட்டார்கள். “இல்லை அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் நீண்ட நேரம் ஸுஜூத் செய்து கொண்டிருந்ததால் நீங்கள்

மரணித்து விட்டீர்களோ என்று நான் எண்ணினேன்'' என்று சொன்னார்கள். அப்போது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இன்றிரவு பற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்கள். "அல்லாஹ்வுக்கும், ரஸூல் அவர்களுக்குமே தெரியும்'' என்றேன்.

இன்றிரவு "ஷஅபான்'' பதினைந்தாம் இரவு. "இன்றிரவு'' அல்லாஹ் தனது அடியார் களுக்கு [தஜல்லீ] வெளியாகி பாவமன்னிப்புக் கேட்பவர் களுக்கு அவர்களின் பாவங் களை, அருள் வேண்டுவோ ருக்கு அருள் செய்கிறான். பொறாமை நெஞ்சுள்ளவர் களை அவ்வாறே விட்டு விடுகின் றான்] என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள்.

இந்த நாளின் இரவில் நின்று வணக்கம் புரிவதும், பகலில் நோன்பு நோற்பதும் இறைவனுக்கு மிக உகந்த செயலாகும் என ஹதீஸில் வந்தள்ளது. என்றாலும், இந்த உம்மத்தின் நிலை குறித்து மாநபி (ஸல்) அவர்கள் அன்றே தங்களின் கவலையை, ஆதங்கத்தை வெளிப்படுத்தி னார்கள் என்பதை பின்வரும்


ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ ஹாஸ்டல் வசதி உண்டு.

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

தொடர்புக்கு : Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

ஹதீஸின் மூலமாக விளங்க முடிகின்றது.

"மாநபி (ஸல்) அவர்கள் ஷஅபான் மாதத்தில் அதிக மாக நோன்பு நோற்கும் பழக்க முடையவர்களாக இருந்தார் கள். இதைக் கவனித்த நபித் தோழர்கள் "அல்லாஹ்வின் தூதரே! ஏன் மற்றெல்லா மாதங் களில் நோன்பு நோற்பதை விடவும் ஷஅபானில் அதிகமாக நோன்பு நோற்கின்றீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு, மாநபி (ஸல்) அவர்கள் ரஜபுக் கும் ரமளானுக்கும் இடையே வருகிற இந்த ஷஅபான் மாதம் குறித்த விழிப்புணர்வு மக் களிடம் இல்லை. அல்லாஹ் விடம் எவ்வளவு மகத்தானது என்பதை விளங்காமல் மக்கள் அலட்சியமாக இருக்கின்றார்கள்.

1. இந்த மாதத்தில் தான் மனிதர் களின் அமல்கள்- செயல்கள் அல்லாஹ்வின் திருமுன் உயர்த்தப்படுகின்றன.
2. என் அமல்கள் அல்லாஹ் விடம் சமர்ப்பிக்கப்படும் போது நான் நோன்பாளியாக இருக்கவே விரும்புகின் றேன் என்று பதில் கூறினார்கள். (நூல் : நஸயீ)

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஷஅபான் மாதத்தினுடைய சரிபாதியின் இரவாகிய இந்த இரவில் என்னென்ன இருக் கின்றது என்று உங்களுக்குத் தெரியுமா?' என்று என்னைப் பார்த்து கேட்டார்கள். 'அந்த இரவில் என்ன இருக்கின்றது நாயகமே!' என்று நான் கேட் டேன். அப்போது நாயகம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இந்த இரவில் தான் இந்த வருடத்தில் பிறக்க இருக் கின்ற குழந்தைகள், இந்த வருடத்தில் இறக்க இருக்கின்ற மனிதர்கள் பற்றிய விபரங்கள் எழுதப்படுகின்றன. மேலும் இந்த இரவில் தான் அவர்களின் அமல்கள் உயர்த்தப்படுகின் றன. இந்த இரவில்தான் அவர்களின் உணவுகளும், இறக்கி வைக்கப்படுகின்றன."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் (நூல் : மிஷ்காத்)

ஆகவே இறப்பு, பிறப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட எல்லா காரியங்களின் தீர்ப்புகள் பராஅத் இரவில் எழுதப்பட்டு, லைலதுல் கத்ருடைய இரவில் அதை மலக்குகளிடம் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன என்று ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவ்ரகள் விளக்கமளித்துள் ளார்கள். இந்த வகையில் பராஅத் இரவு என்பது, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு பட்ஜெட், லைலத்துல் கத்ருடைய இரவில் தாக்கல் செய்வதற்குரிய பூர்வாங்கப் பணிகளை துவங்கும் நாளாகும்.

GSTIN : 33DMUPA2892F1ZW

8122365636
7708696860






# அன்னிஸா பேஷன்ஸ்

## மொத்த வியாபாரம்

- புர்கா
- ஹிஜாப்
- நைட்டி
- ஷால் – நைட்டி
- துப்பட்டா
- காட்டன் ஷால்
- லெகின்ஸ்
- பட்டியாலா





மொத்த விற்பனை மட்டும்

மங்கலம் – பல்லடம் ரோடு, சிட்டி யூனியன் பேங்க் அருகில்,
HFDC பேங்க் அருகில்,
**மங்கலம்** - 641663. திருப்பூர் மாவட்டம்.

## 4) பராஅத் இரவின் சிறப்புகளை பெற முடியாத பாவிகள்.

நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் : "நிச்சயமாக அல்லாஹ் ஷஅபான் மாதத்தின் பாதியில் (15ம் நாள்) இரவில் தனது படைப்பினங்களின்பால் இறங்கி வந்து தனது அடியார்களின் (அனைவரின்) பாவங்களை மன்னிக்கிறான், இரண்டு நபர்களை தவிர

1. குரோதம் கொள்பவன்
2. தற்கொலை செய்து கொண்டவன்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரளி) அவர்கள்
(நூல் : இப்னு ஹிப்பான்)

**இன்னும் சில அறிவிப்புகளில்...**

"உறவை துண்டிபபவன், பெற்றோருக்கு மாறு செய்பவன், முஷ்ரிக், சூனியக்காரன், விபச்சாரத்தில் பிடிவாதக்காரன், கோள் சொல்பவன், மது அருந்துபவன்" என இன்னும் சில நபர்களை இணைத்தும் கூறப்பட்டுள்ளது.

நம் சமூகத்தை பெரும் பாவங்களை விட்டும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

சமுதாய பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொண்டு "என் கட்சி", "என் இயக்கம்", "என் கொள்கை" என்று சக முஸ்லிம்களோடு குரோதம் கொள்பவர்களும், தீன்தாரிகள் எனக் கூறிக்கொண்டே உறவை துண்டித்து வாழ்பவர்களும், பெற்றோருக்கு மாறுசெய்பவர்களும் நம்மில் அனேகர் இருக்கின்றனர்.

மார்க்கத்தை விளங்காத, மார்க்கத்தை விட்டும் தூரமாக உள்ள சாதாரண முஸ்லிம்களின் நிலையைப் பற்றி சொல்லித்தெரிய வேண்டியதில்லை, மது, விபச்சாரம், வட்டி என்று அனைத்து பெரும் பாவங்களிலும் தயக்கமின்றி ஈடுபடுகின்றனர்.

பராஅத் போன்ற இரவுகளில் அல்லாஹ் தன் அடியார்களின் மீது கருணை கொண்டு மஃபிரத்தையும், ரஹ்மத்தையும் வாரிவழங்கும் போது கூட இவர்கள் போன்ற பெரும்பாவிகளுக்கு அருள் பாலிப்பதில்லை, ஆனால் இவர்களும் குற்றத்தை உணர்ந்து தவ்பா செய்து விடுவார்களேயானால் அல்லாஹ் இவர்களுக்கும் மஃபிரத்தை வழங்கிவிடுகிறான்.

எனவே, இந்த மகத்துவமிக்க இரவு நம்மை எதிர் நோக்கி இருக்கிறது. நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு நம் வாழ்வில் ஒளி வீசும் அந்த புனித இரவின் நன்மைகளை நாம் முழுமையாக அடைய இறைவன் அருள் புரிவானாக!

## துரித மனிதநேய சேவையால் 800 பயணிகளின் உயிர்களை காப்பாற்றிய ரயில் நிலைய கண்காணிப்பாளர் ஜாபர் அலீ

வாழ்க்கையில் ஒவ்வொரு வருக்கும் மனிதநேய சேவை களை செய்யும் வாய்ப்புகள் மிக எளிதாக கிட்டி விடுவதில்லை. அப்படியே சேவை செய்யும் வாய்ப்புகள் கிடைத்தாலும் சிலர் அதனை கண்டு கொள்ளாமல் புறக்கணித்து சென்று விடுகின் றனர். அதன் மூலம் தங்களுக் கும், மனித சமுதாயத்திற்கும் அவர்கள் ஒரு விதத்தில் தீங்கு செய்கிறார்கள் என்றே கூறலாம். தாங்கள் செய்யும் பணிகளில் கூட சிலர் அலட்சியமாக இருந்து விட்டு, பலருக்கு துன்பங் களை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

ஆனால் தூத்துக்குடி மாவட்டம், காயாமொழி கிராமத்தை பூர்வீகமாகக் கொண்டு, தற் போது ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலைய கண்காணிப்பாளராக பணிபுரிந்துவரும் எஸ்.எம்.ஜாபர் அலீ, இயற்கையிலேயே சமூக சேவையில் அக்கறை கொண்ட வர். மற்றவர்களுடன் மனித நேயத்டன் பழகும் குணம் கொண்டவர். அத்துடன், தனது பணியில் நேர்மையான முறையில் கடமையை நிறை வேற்ற வேண்டும் என்ற குறிக் கோளுடன் சேவையாற்றி வருபவர். இதன் காரணமாகத் தான், தூத்துக்குடி மாவட்டத் தில் கடந்த டிசம்பர் 17 ஆம் தேதி கொட்டிய கனமழையின்போது, செந்தூர் விரைவு ரயிலில் பயணம் செய்த 800க்கும் மேற்பட்ட பயணிகளின் உயிர் களை தன்து துரித சேவை மூலம் அவர் காப்பாற்றியுள்ளார்.

### துரித சேவை

தென்மாவட்டங்களில் பெய்த கனமழையால், அங் குள்ள ரயில் வழித்தடங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. கடந்த டிசம்பர் 17ஆம் தேதி பெய்த வரலாறு காணாத கன மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் திருச்செந்தூர் நெல்லை வழித்தடத்தில் செய்துங்கநல்லூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையங் களின் இடையேயான ரயில் தண்டவாளங்கள் அடித்துச் செல்லப்பட்டன. இத்தகைய சூழ்நிலையில், திருச்செந்தூரி லிருந்து செந்தூர் விரைவு ரயில், இரவு 8.25 மணிக்கு புறப்பட்டது. நாசரேத் ரயில் நிலையத்தை ரயில் கடந்தவுடன், ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்

திற்கு செக்ஷன் என்ஜினியர் மற்றும் செய்துங்கநல்லூர் ரயில் நிலைய மேலாளர் ஆகியோர் மூலமாக ரயில் தண்டவாளங்கள் மிகவும் மோசமாக இருப்பதாக தகவல் கிடைத்தது. இந்த பரபரப்பான சூழ்நிலையில், 5 நிமிடங்கள் மட்டுமே எஞ்சி இருந்த நிலையில், ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலைய கண்காணிப்பாளர் ஜாபர் அலீ, ரயிலை மேற்கொண்டு செல்ல அனுமதியளிக்காமல் நிறுத்தி வைத்தார். அத்துடன், செக்சன் கண்ட்ரோலுக்கு தகவல் தெரிவித்து, தொடர்ந்து கனமழை பெய்து கொண்டிருப்பதால், மேற் கொண்டு ரயிலை இயக்க வேண்டாம் என முடிவு செய்யப்பட்டது.

**மனிதநேய சேவை**

செந்தூர் விரைவு ரயில் மிகப்பெரியவிபத்தில் சிக்கிக் கொள்ள இருப்பதை தனது துரித சேவை மூலம் தடுத்து நிறுத்திய ஜாபர் அலீ, அத்துடன் தனது பணிகளை நிறுத்திக் கொள்ளவில்லை. அந்த விரைவு ரயிலில் சிக்கிக் கொண்ட 800க்கும் மேற்பட்ட பயணிகளை பாதுகாப்பாக தங்க வைக்க ரயில்வே நிர்வாகம் மூலம் ஏற்பாடுகளை செய்தார். இந்த நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப் பட்டதால், ரயில் நிலையம் முழுவதும் இருட்டாக மாறி விட்டது. தொடர்ந்து மழை பெய்து கொண்டும் இருந்தது. இதனால் மீட்புப் பணிகளில் மிகப்பெரிய சவால்களை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

முதலில் இரண்டு பேருந்துகள் மூலம் பயணிகள் அனுப்பப் பட்டு, ஸ்ரீவைகுண்டம் குமர குருபரர் பள்ளியில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர், தாமிரபரணி பாலத்தில் வெள்ளம் ஏற்பட்டதால், அந்தப் பேருந்துகள் மீண்டும் ரயில் நிலையத்திற்கு வரவில்லை. இதனால் பீதியடைந்த 600க்கும் மேற்பட்ட பயணிகள் ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்திலேயே இரவை கழித்தனர்.

இந்த விபரங்கள் குறித்த தகவல்களை மதுரை கண்ட்ரோலுக்கு ஜாஃபர் அலீ தொடர்ந்து அளித்துக் கொண்டே இருந்தார். ரயில் நிலையத்தில் தங்கியிருந்த 600 பயணிகளுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப் பட்டது. வெள்ளத்தால் போக்கு வரத்து தடைபட்டதால், வாகனங்கள் மூலம் உணவுப் பொருட்களை கொண்டு வர முடியவில்லை. எனவே ஹெலி காப்டர் மூலம், உணவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட் டது. ஆனால் வானிலை சரி

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# AL-BASHARATH
## HAJ & UMRAH SERVICE

LALPET

IATA

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.

CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

Al Basharath Lalpet +919566992919 ticket.basharath@gmail.com albasharath.com

## புனித ரமலான் உம்ரா - 2024

| முழு 30 நாட்கள் | முதல் 15 நாட்கள் | இறுதி 15 நாட்கள் |
|---|---|---|
| ₹. 1,99,000/- | ₹. 1,30,000/- | ₹. 1,70,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் 15 நாள் | 11-03-2024 | திங்கள் | 25-03-2024 | திங்கள் |
| முழு 30 நாள் | 14-03-2024 | வியாழன் | 14-04-2024 | ஞாயிறு |
| இறுதி 15 நாள் | 28-03-2024 | வியாழன் | 14-04-2024 | ஞாயிறு |

## ரமலான் 30 நாள் சிறப்பு பேக்கேஜ்

ECONOMIC PACKAGE ₹. 1,59,000/-

புறப்படும் நாள் : 14/03/2024 திரும்பும் நாள் : 14/04/2024

## புனித ஹஜ் பயணம் 2024

மிக மிக குறைந்த இடங்களே உள்ளன

புக்கிங் நடைபெறுகிறது ! முந்துங்கள் !!

## புனித உம்ரா பயணம் – 2023/24

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் | 03-12-2023 | ஞாயிறு | 17-12-2023 | ஞாயிறு | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2023 | ஞாயிறு | 07-01-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 14-01-2024 | ஞாயிறு | 28-01-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 28-01-2024 | ஞாயிறு | 11-02-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 07-02-2024 | புதன் | 21-02-2024 | புதன் | 15 நாள் |
| பிப்ரவரி | 18-02-2024 | ஞாயிறு | 03-03-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 29-02-2024 | வியாழன் | 14-03-2024 | வியாழன் | 15 நாள் |

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் |
|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,10,000/- | ₹. 1,39,000/- |
| ECONOMY | DELUXE | SUPER DELUXE | HILTON |

## ஷவ்வால் மாத உம்ரா பயணம் - 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |

சென்றவரை கேளுங்கள்! சென்று வருவோம் வாருங்கள்!!

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். O.M. முஹம்மது சுஹைபு செல்: 9994254304

யில்லாத காரணத்தால், ஹெலிகாப்டர் திருப்பி அனுப்பப் பட்டது. இதனால் பயணிகள் மிகவும் சிரமத்துடன் கோபம் அடைந்த நிலையில், புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் வீடுகளில் சமைத்த உணவுகளை கொண்டு வந்து பயணிகள் அனைவருக்கும் சாப்பிட வழங்கினார்கள்.

இப்படி இரண்டு நாட்கள் கழிந்தநிலையில் 3 ஹெலிகாப்டர் கள் மூலம் பயணிகளுக்கு உணவு மருந்து உள்ளிட்ட பொருட் கள் விநியோகம் செய்யப்பட் டன. எனினும் பயணிகள் மத்தியில் பீதியும், பதற்றமும் நிலவியதைக் கண்ட ஜாஃபர் அலீ மற்றும் ரயில் நிலைய ஊழியர்கள், அவர்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறி, எந்தவித பிரச்சனையும் வரா மல் பார்த்துக் கொண்டனர்.

மூன்று நாட்களும் கன மழை, மின்சாரம் துண்டிப்பு, உணவுப் பிரச்சினை என பல் வேறு நெருக்கடிகளை சந்தித்த ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலைய கண்காணிப்பாளர் ஜாஃபர் அலீ மற்றும் பாண்ட்ஸ் மேன்கள், ரயில் பயணிகளுக்கு மிகப் பெரிய அளவுக்கு சேவையாற்றி ரயில்வே துறைக்கு எந்தவிதப் பிரச்சனையும் வராமல் பார்த்துக் கொண்டு பெருமை சேர்த்தனர்.

**குவியும் பாராட்டுகள்**

தூத்துக்குடி மாவட்டம் காயாமொழி கிராமத்தில் பலசரக்கு கடை நடத்திய கே.எஸ்.அசன் மொய்தீனின் 7 பிள்ளைகளில் ஒருவரான ஜாஃபர் அலீ, மிகவும் சிரமத்திற்கு மத்தி யில் தன்னுடைய கல்வியை தொடர்ந்து M.Sc., B.Ed., முடித்து, பின்னர் ரயில்வே துறையில் சேர்ந்தார். மிகவும் நேர்மையாளரான அசன் மொய் தீனின் மகனான ஜாஃபர் அலீ யிடமும் எப்போதும் மனித நேயம் இருந்துகொண்டே இருக்கிறது என்பதற்கு செந்தூர் விரைவு ரயில் பயணிகளை காப்பாற்றிய சம்பவமே எடுத்துக் காட்டாக உள்ளது. இதன் காரணமாக அவருக்கு பாராட்டுக்கள் குவிந்து வரு கின்றன. 800 பயணிகளின் உயிர்களை தனது துரித சேவை யால் காப்பாற்றிய ஜாஃபர் அலீக்கு, மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் சரத் ஸ்ரீவஸ்தவா, நேரில் சந்தித்து, பொன்னாடை போர்த்தி, பாராட்டு தெரிவித்தார். அத் துடன், அவருடன் இணைந்து பணிபுரிந்த மற்ற ரயில்வே ஊழியர்களும் கவுரவிக்கப்பட் டனர். அனைவருக்கும் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

வாழ்க்கையில் வாய்ப்புகள் கிடைக்கும்போது, மனிதர் களுக்கு சேவையை செய்ய

கொஞ்சமும் தயங்கக் கூடாது. மேலும் தங்களுடைய கடமைகளில் ஒருபோதும் அலட்சியமாக இருக்காமல் எப்போதும் துரிதமாக செயல்பட வேண்டும் என்பதற்கு ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலைய கண்காணிப்பாளர் ஜாஃபர் அலீ ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்றே கூறலாம்.

## விபத்தில் சிக்கியவரை மீட்ட கிரிக்கெட் வீரர் முஹம்மது ஷமிக்கு குவியும் பாராட்டு!

விபத்தில் சிக்கிய ஒருவரை மீட்டு பத்திரமாக அனுப்பிய கிரிக்கெட் வீரர் முஹம்மது ஷமிக்கு பாராட்டுகள் குவிகின்றன.

உத்தரகண்ட் மாநிலத்தின் நைனிடாலில் மலைப் பாதை வழியாக சென்ற கார் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்தது. அப்பகுதி வழியாக காரில் வந்த இந்திய அணி வேகப் பந்து வீச்சாளர் முஹம்மது ஷமி இதனை கவனித்தார். உடனடியாக அந்த வழியாக வந்தவர்களை நிறுத்தி, அனைவரின் உதவியோடும் காரில் இருந்தவரை மீட்டு பத்திரமாக அனுப்பி வைத்தார்.

இதனை தனது சமூகவலைதள பக்கத்தில் பதிவிட்டு ஷமி கூறியுள்ளதாவது: அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி. இறைவன் அவருக்கு இரண்டாவது வாழ்க்கையை கொடுத்துள்ளான். அவரது கார், மலைப் பாதையிலிருந்து எனது காருக்கு முன்னால் கீழே விழுந்தது. நாங்கள் அவரை பாதுகாப்பாக வெளியே எடுத்தோம்.

இவ்வாறு முஹம்மது ஷமி கூறியுள்ளார்.

## இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா முயற்சிக்க வேண்டும் பிரியங்கா காந்தி வலியுறுத்தல்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே விரைவில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்த இந்தியா முயற்சி செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

### தற்காலிக போர் நிறுத்தத்திற்குப் பின்னரும் தாக்குதல்கள்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஹமாஸை நிர்வகித்து வரும் காசா முனைப்பகுதி மீது இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நிலையில், காங்கிரஸ் பொதுச்செயலாளர் தற்காலிக போர் நிறுத்தத்திற்குப் பின்னரும் பிரியங்கா காந்தி வத்ரா இது குறித்து

தனது எக்ஸ் தளத்தில் "காசா மீதான தனது தாக்குதல்களை இஸ்ரேல் மிகவும் வலுப் படுத்தி யிருக்கிறது. உணவுப் பொருட் கள் பற்றாக்குறையும், மருத் துவ வசதிகள் தடுக்கப்பட்டும் அடிப்படை வசதிகளும் முடக்கப் பட்டுள்ளன. கிட்டதட்ட 10,000 குழந்தைகள், 60க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர் கள் மற்றும் நூற்றுக்கணக்கான மருத்துவப் பணியாளர்கள் உட்பட 16,000 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### எங்கே நம் மனிதாபிமானம்?

ஒட்டு மொத்த தேசமே அழிந்து வருகிறது. இவர்களும் நம்மைப் போலவே கனவுகளும், நம்பிக்கையும் கொண்டவர்கள் தான். அவர்கள் இரக்கமின்றி நம் கண் முன்னே கொல்லப் படுகிறார்கள். எங்கே நம் மனிதாபிமானம்? இந்தியா சர்வதேச அரங்கில் எப்போதும் நியாயத்தின் பக்கமே துணை நிற்கிறது. இந்தியா ஆரம்பத் திலிருந்தே பலஸ்தீன மக்களுக்கு தன் ஆதரவை வழங்கி வருகிறது. ஆனால் இப்போது அனைத்து மக்களும் படுகொலை செய்யப்படும் போது ஒதுங்கி இருப்பதா? விரைவில் போர் நிறுத்தத்தை உறுதிப்படுத்த நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## அரேபியாவில் அசத்தும் இந்தியர்கள்!

கேரள மாநிலம் கொடு வள்ளியைச் சேர்ந்த கதீஜா நிஸா, தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஷேக் மஹத்ஷா இருவரின் பெற்றோரும் சவூதி அரேபியா வில் பணியாற்றி வருவதால் இவர்கள் அங்குள்ள பள்ளி யில் +2 படித்து வருகிறார்கள். தற்போது இவர்கள் இருவரும் அங்கு நடந்த பேட்மிண்டன் (Bad Minton) விளையாட்டில் சாதனைபடைத்துவருகின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற அரேபிய தேசிய விளையட்டுப் போட்டிகளில் பேட்மிண்டன் சாம்பியன் பட்டத்தை வென்ற கதீஜா நிஸா கோப்பையுடன் பத்து இலட்சம் ரியால் பரிசுத் தொகையும் பெற்றார்.

பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவில் தனித்தனியாக விளை யாடும் கதீஜா நிஸாவும், ஷேக் மஹத்ஷாவும் சவூதி அரேபியா வுக்காக சர்வதேச போட்டி களில் கலப்பு இரட்டையர் பிரிவில் இணைந்துவிளையாடி சாதித்து வருகின்றனர்.

கடந்த ஓராண்டில் அரேபியாவின் பிரதிநிதியாக ஏழு சர்வதேச பேட்மிண்டன் போட்டிகளில் கலந்து கொண்ட கதீஜா நிஸா உலக தரவரிசைப் பட்டியலில் 1200ஆம் இடத்

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

## காண்போம் கஃபாவை!

மக்காவில் எங்கு பார்த்தாலும் புறாக்கூட்டம். இலட்சக்கணக்கான புறாக்கள் இருக்கும். திடலிலுள்ள புறாக்களுக்கு தீனி போட்டு மக்கள் மன மகிழ்ச்சி அடைவர். வீதியெங்கும் நெல்மணிகளும், கோதுமை மணிகளும் கொட்டிக்கிடக்க, புறாக்கள் கொத்தித்தின்னும் அழகு ரசிக்கும் படியாக இருக்கும். புனித கஃபா உள்ள இடங்கள், அருகாமையிலும் நாய்கள் இருக்காது. பூனை, குருவிகள் அதிகமாக இருக்கும்.

### விரிந்து சுருங்கும் நிழற்குடைகள்

வானத்தை மறைத்திடும் அழகு குடைகள் பரந்து விரிந்து அழகு பள்ளியை சுற்றிலும் வெயிலுக்காக மின் குடைகள் அமைத்திருக்கின்றனர். நெடுகிலும் நூற்றுக்கணக்கான குடைகள் உள்ளன. வெயில் வந்ததும் அழகாக மெதுவாக விரியும் குடை, வெயில் மறைந்ததும் அதே போல் மெதுவாக மூடிக் கொள்ளும். நூற்றுக்கணக்கான குடைகள் ஒரு சேர ஒரே அளவில் சுருங்கி விரியும் போது காணும் அழகு இருக்கின்றதே அதனை வார்த்தைகளால் சொல்ல இயலாது.

ஆதாரம் : புனித பயணங்கள்

தருபவர் : **அன்வர்ஜீ, சேலம்-5.**

திலிருந்து 130ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இவர்கள் இருவரின் ஆட்டத் திறமைக்கு அங்கீகாரமாக சவூதி அரேபியாவின் பிரபலமான ரியாத் பேட்மிண்டன் கிளப், ஸ்பான்சராக முன் வந்துள்ளது. இதன் மூலம் கதீஜா நிஸா, ஷேக் மஹத்ஷா விரைவில் உலக தரவரிசையில் உலகின் முதல் நூறு வீரர்கள் பட்டியலில் இடம் பிடிப்பது உறுதி.

## உழைப்பால் உச்சத்தைத் தொட்ட ஐ.ஏ.எஸ் அதிகாரி அப்துல் நாசர்

ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மிக முக்கியமானது அவருடைய உண்மையான உழைப்பு. வெற்றி என்பது உழைக்காமல் வருவதில்லை. அது வியர்வைத் துளிகளின் விளைச்சல். உளி படாத கற்கள் சிலையாவது இல்லை. அது போல உழைப்பில்லாத கனவு நனவாவதில்லை. பறக்கும் போதுதான் பட்டாம்பூச்சிகள் ஜொலிக்கின்றன. அதுபோல உழைக்கும்போதுதான் மனிதர்கள் ஜொலிக்கின்றார்கள். உழைப்புதான் மனிதர்களை வெற்றிச் சிகரத்தில் அமர்த்துகிறது.

உழைப்பு என்றதும் கல் உடைப்பது, உழுவது, கஷ்டப்பட்டு பாரம் சுமப்பது என்று பொருள் கொள்ள வேண்டாம். பாடுபடுவது, சிரமங்களை மகிழ்வுடன் ஏற்பது, சினிமா, மது, சிகரெட் என்கின்ற இள வயது இன்பங்களில் தன்னை தொலைக்காமல் பலமணி நேரம் படிப்பது கூட உழைப்புதான். பல மைல் பயணித்து பள்ளிக்கும், கல்லூரிக்கும் போய் வருவது கூட உழைப்புதான். சோம்பி இராத, சுகம் தேடாத எல்லா முயற்சிகளும் உழைப்புதான். இப்படி உழைத்தவர்கள்தான் உயரமான இடங்களில் பின்னர் உட்கார்ந்தார்கள்.

ஓயாமல் உழைத்து, உயர்ந்த இடத்தை அடைந்து நமக்கெல்லாம் உதாரணமாகத் திகழ்ந்தவர்தான் அப்துல் நாசர். 49 வயதாகும் இவர், கேரள மாநிலத்திலுள்ள கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். வறுமை காரணமாக ஐந்து வயதில் குடும்பத்தை பிரிந்து, ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கி, கஷ்டப்பட்டு படித்தவர். இன்று உயர்ந்த பதவியை அடைந்து தன் தகுதியை உயர்த்திக் கொண்டவர்.

அவரது குழந்தைப் பருவம் கலங்க வைக்கும் நெகிழ்ச்சிப் பின்னணியை கொண்டது. அப்துல் நாசர் ஐந்து வயதில் தந்தையை இழந்துவிட்டார். அவருடன் பிறந்தவர்கள் ஆறு

பேர். தாயார் வீட்டு வேலைக்கு சென்று பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க சிரமப்பட்டிருக்கின்றார்.

ஆறு பேருக்கும் மூன்று வேளை உணவு கொடுக்க முடியாத சூழலும் ஏற்பட்டிருக் கிறது. அவரது உறவினர்கள் அப்துல் நாசரை ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்ந்து படிக்குமாறு வலியுறுத்தி இருக்கிறார்கள். அங்கு மூன்று வேளை உணவு தடையின்றி கிடைக்கும் என்பதால் வேறு வழியின்றி அப்துல் நாசரை அவருடைய தாயிடம் இருந்து பிரித்து தலச்சேரியில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்த்தார்கள். அங்கு தங்கிப் படித்த அப்துல் நாசர் தாயாரின் பாரத்தை குறைப்பதற்காக பள்ளிக்கூடம் முடிந்த பிறகு வேலைக்கு செல்ல தொடங்கி இருக்கிறார்.

ஓட்டல்கள், கடைகளில் டெலிவரி பாயாகவும் மற்றும் கிளீனராகவும் வேலை பார்த்திருக்கிறார். இந்த நிலை யில் அப்துல் நாசரின் தாயார் நோய்வாய்ப்பட்ட நிலையில் மரணத்தை தழுவியது அப்துல் நாசரை மேலும் வெகுவாக பாதித்தது.

அரசு கல்லூரியில் பி.ஏ. ஆங்கிலம் படித்துள்ளார். அதன் பிறகு கோழிக்கோட்டில் உள்ள பரூக் கல்லூரியில் முது நிலை படிப்பையும், அதைத் தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி படிப்பையும் படித்து முடித்திருக் கிறார். எந்த ஒரு சூழ்நிலை யிலும் படிப்பு தடைபட்டு விடக் கூடாது என்பதில் அப்துல் நாசர் உறுதியாக இருந்திருக் கின்றார். படித்துக் கொண்டே கிடைக்கும் வேலைகளுக்குச் சென்று அதில் கிடைக்கும் வருமானத்தில் படிப்பை தொடர்ந்து இருக்கிறார்.

அப்துல்நாசர் 17 வருடங்கள் குடும்பத்தை பிரிந்து ஆதர வற்றோர் இல்லத்தில் தங்கி யிருந்திருக்கிறார். ஒருமுறை ஆதரவற்றோர் இல்லத்திற்கு வந்த தலச்சேரி துணை கலெக்டர்தான் அப்துல் நாசர் வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

அவருடைய தன்னம்பிக்கை யூட்டும் பேச்சு அப்துல் நாசரை ஊக்கப்படுத்தியது. அவரது வருகையும், பேச்சும் அவருக்கு

## கணவரிடம் பேசக் கூடாத விஷயம்

ஒரு பெண் தனது கணவரிடம் வேறொரு பெண்ணைப் பற்றி அலங்கரித்துப் பேசக்கூடாது; இதனால் அவனுடைய சிந்தனையில் தடுமாற்றம் ஏற்படக்கூடும்.

உத்வேகம் அளித்தன. இந்த நிலையில் அப்துல் நாசருக்கு திருமணம் நடந்தது. அவருடைய மனைவி ஓர் ஆசிரியை. அவர் தான் போட்டிதேர்வு எழுதுவதற்கு அப்துல் நாசரை தொடர்ந்து ஊக்கப்படுத்தி உள்ளார். அவருடைய வழிகாட்டுதலின்படி சென்னை, டெல்லி, அலிகார் போன்ற இடங்களுக்குச் சென்று பயிற்சி பெற்று போட்டி தேர்வுக்கு தயாராகி இருக்கிறார். பின்பு சோனா சர்வீஸ் தேர்வில் வென்று மாநில அரசுப் பணியில் சேர்ந்து இருக்கின்றார். சிறப்பாக பணிபுரிந்து 2015ஆம் ஆண்டு சிறந்த துணை கலெக்டர் விருதும் பெற்றிருக்கின்றார். கேரளா அரசின் பல்வேறு துறை களில் பணிபுரிந்து இருக்கிறார். நுழைவுத் தேர்வை ஆன்லைன் மூலம் நடத்தும் நடைமுறையை கொண்டு வந்ததில் அப்துல் நாசரின் பங்களிப்பு முக்கியமானது. நுழைவுத் தேர்வு துறை கமிஷனராக சிறப்பாக செயல்பட்டு அனைவராலும் பாராட்டை பெற்றார். தனக்கு கிடைத்த ஒவ்வொரு பணியிலும் முழு வேகத்துடன் செயல்பட்டு தற்போது கொல்லம் மாவட்ட கலெக்டராக பொறுப்பேற்றுள்ளார் அப்துல் நாசர்.

இளம் வயதில் எவ்வளவு சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் ஒருபோதும் கல்வியை கைவிடாமல் தொடர்ந்தால் வாழ்க்கையில் விரும்பிய எதையும் சாதிக்கலாம் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக விளங்குகிறார் அப்துல் நாசர்.

ஆதரவற்றோர் இல்லத்தில் இருந்து ஐ.ஏ.எஸ். அதிகாரியாக உயர்ந்த அப்துல் நாசரின் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் பாடம் என்னவென்றால் நம்முடைய சூழல் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அத்துடன் உழைப்பையும் சேர்த்துக் கொண்டால் உயர்ந்த இடத்தை அடையலாம் என்பதாகும்.

நாம் செய்யும் பணியில் நம் உழைப்பு முழுவதையும் ஒருங்கிணைத்து ஈடுபாட்டுடன் செய்கின்ற போதுதான் வெற்றியும் நம்மை வந்தடைகிறது. இன்றைய இளைஞர்கள் தங்களுக்கு எது பிடித்திருக்கிறதோ அந்தந்த துறையை தேர்ந்தெடுங்கள். தேர்ந்தெடுத்த பின் உங்கள் பணியில் முழுமையான உழைப்பை ஈடுபாட்டுடன் செயல்படுத்துங்கள். விருப்பமுடன் செய்யும் செயலுக்கு வெகுமதி நிச்சயம் உண்டு.

தொகுப்பு : **பாவா.**
**ஜே.அப்துஸ் ஸலாம்**

# "லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்" என்ற மந்திரச் சொல்!

அல்ஹாஜ் **எம்.ஏ.ஹக்கீம்,** அத்திக்கோடு, கேரளா.

மந்திரச் சொற்களில் சிறந்த சொல் **"லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்".**

இதைப் பற்றி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இது கன்ஜுல் அர்ஷ்... அர்ஷுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையாகும். இதில் 99 நோய்களுக்கு நிவாரணம் இருக்கிறது. அதில் குறைந்தது கவலை" என்று கூறுகிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஹள்ரத் அவ்ஃப் இப்னு மாலிக்கில் அஷ்ஜயீ (ரளி) அவர்கள் வந்து, அல்லாஹ்வின் பாதையில் போருக்குச் சென்ற என் மகன் திரும்பவில்லை. எதிரிகள் பிடித்துச் சென்று விட்டார்கள். அதற்கு என்ன செய்வது நாயகமே?" என்று கேட்டார்கள்.

அதற்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் **"லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்"** என்ற கலிமாவை அதிகமாக ஓதி வாருங்கள் என்று சொன்னார்கள். அதை அவர் தன் மனைவியிடம் சென்று சொன்னார்.

வீட்டில் இருவருமாகச் சேர்ந்து **"லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்"** என்பதை ஓதிக்கொண்டே இருந்தார்கள். மிகக் குறுகிய காலத்தில், இரவு நேரத்தில் திடீரென்று கதவு தட்டப்படுகிறது. யார் என்று கதவை திறந்து பார்த்தால் தன் மகன் மாலிக் ஆடுகளோடு வந்து நின்றார். உடனே தன் மகனை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூட்டிக் கொண்டு போய் நிறுத்துகிறார்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாலிக்கிடம் காணாமற் போனதற்கான காரணம் கேட்கிறார்கள். மகன் மாலிக் அழகான காரணம் சொன்னார் : "என் எதிரிகள் என்னை கடத்திச் சென்றார்கள்.

ஆடு மேய்ப்பதற்காக என்னை நியமித்திருந்தார்கள். அல்லாஹ் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஒரு வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நான் ஓடி வந்து விட்டேன். மதீனா வின் எல்கை வரை ஓடி வந்து திரும்பிப் பார்த்தபோது, நான் மேய்த்துக் கொண்டிருந்த ஆடுகளும் என்னுடன் சேர்ந்து வந்திருக்கின்றன" என்று நடந்த நிகழ்வை கூறி முடித்தார்.

பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிரித்தார்கள். "பார்த்தீர்களா... **"லா ஹவ்லா வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்"** என்ன வேலை செய்திருக்கிறது? உங்கள் மகனை மட்டுமின்றி ஆடு களையும் கூட்டி வந்துவிட்டது. இதுதான் அந்த மகத்துவம் நிறைந்த சொல்லின் பலனாகும்" என்று கூறினார்கள்.

எனவே, என் சமுதாய மக்களே! நம்மில் ஒவ்வொரு வருக்கும் பல்லாயிரம் சிரமங்கள் இருக்கின்றன. தினம் தினமும் பல நூறு பிரச்சனைகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

அல்லாஹ்வும், அவனது தூதரும் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கின்ற பிரச்சனை களை தீர்த்து வைக்கக்கூடிய இலேசான வழிகள் நம் கண் முன் தெரிந்த போதிலும்கூட, நாம் நமது தீர்ப்புகளுக்காக பல்வேறு குறுக்கு வழிகளை யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

மேற்படி நிகழ்வை வைத்தாவது நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் சொல்லித் தரப் பட்ட **"லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்"** என்ற கலிமாவை அதிமதிகம் ஓதுவோம்! பிரச்சனைகளிலி ருந்து விடிவு காண்போம்!

## இறை சாபத்தைப் பெறும் பெண்கள்

"தனது அழகையும், பகட்டையும் வெளிப்படுத்திக் கொள்வதற்காக பச்சை குத்திவிடும் பெண்கள் (டாட்டூ), பச்சை குத்திக் கொள்ளும் பெண்கள், முகத்தில் முளைத்திருக்கும் முடிகளை அகற்றும் பெண்கள், தமது முன் பற்களை கருவிகளால் தேய்த்துக் கொள்ளும் பெண்கள், அல்லாஹ் தந்த உருவத்தை மாற்றிக் கொள்ள முயலும் பெண்கள் ஆகியோருக்கு இறை சாபம் உண்டு" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்: புகாரி 4886)

தொடர்-7

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

**காலிக் அகமது நிஜாமி**

காலிக் அகமது நிஜாமி, ஷேக் நிஜாமுதீன் அவுலியா எனும் நூலை ஆங்கிலத்தில் 1991இல் 222 பக்கங்களில் தந்துள்ளார். அதில் பக்கம் 119 - 123வரைநிஜாமுத்தீன்அவுலியா விற்கும், கியாசுத்தீன் துக்ளக்கிற்குமான உறவைக் குறித்து விவரித்துள்ளார்.

"Soem reckless and uncritical writers, have cast as persions on the character of the Shaikh and have expressed the view that he was involved in a conspiracy against the Sultan with the prince this is absurd. No one who has slightest know ledge of the Shaikh's character can entertain such suspicions".

**சீராய்வற்ற கூற்று**

சீராய்வற்ற, திறனாய்வு முறைப்படாத,பொருட்படுத்தாத அசட்டையான, எண்ணாமல் துணிகிற, விளைவைப்பற்றிக் கவலைப்படாத, துடுக்கான எழுத்தாளர்கள் சிலரின் கூற்று பொருளற்றது. பொருத்தமில்லாதது. நகைப்புக்கிடமா னது. அறிவில்குறைந்ததுஎன்றுகூறி விட்டு தொடர்ந்து சொல்வார்.

**மாஸிக்**

Mazik, Die Reise des Arabers Ibn Batuta durch Indian and China, Hamburg, 1911 என்ற நூலில், பக்கம் 103இல் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளார். Such a view is, according to Mazik, untenable and unhistorical ஏற்றுக் கொள்ள இயலாத வரலாற்றுக்கு மாறான குற்றச்சாட்டு இது என்று மாஸிக் கூறுவதை ஆகாமகதி ஹூசைன் தனது நூலில் மேற்கோள் காட்டுகிறார்.

**போரா**

எம்.ஐ.போரா நிஜாமுத்தீன் அவுலியா குறித்து எழுதிய கட்டுரையில், கியாசுத்தீன் துக்ளக்கின் மரணத்திற்கும், நிஜாமுத்தீன் அவுலியாவிற் கும்எந்தத் தொடர்பும் இல்லை; அக்குற்றச்சாட்டு அடிப்படை யற்றது என்று கூறியுள்ளார்.

### காலிக் அகமது நிஜாமி

மாசிக், போரா மற்றும் சிலரது கூற்றுப்படி கியாசுத்தீன் துக்ளக்கிற்கும் நிஜாமுதீன் அவுலியாவிற்கும் இடையே கூறப்படும் குற்றச்சாட்டு அடிப் படையற்றது என்று காலிக் அகமது நிஜாமி கூறியுள்ளார்.

Mazik - Bohrah and others have expused the absurdity and baselessness of this charge.

### உல்ஸ்லிஹூக்

தற்கால வரலாற்றாசிரியர் உல்ஸ்லிஹூக் 1922இல்எழுதிய கட்டுரையில் முகமதுபின் துக்ளக்கை குற்றஞ்சாட்டியுள்ளார்.

### ஈஸ்வரி பிரசாத்

தற்கால வரலாற்றாசிரி யரான ஈஸ்வரி பிரசாத் காரானா துருக்கியர் வரலாற்று நூலில் உல்ஸ்லிஹூக்கின் கருத்தை நியாயப்படுத்தியுள்ளார்.

### மொய்னுல் ஹக்

வரலாற்றாசிரியர் மொய்னுல் ஹக் முஸ்லிம் பல்கலைக்கழக இதழில் 1939இல் முகமது பின் துக்ளக்தந்தையைக்கொன்றவரா? என்ற கட்டுரையில் இது குறித்து விரிவாக ஆராய்ந்து எழுதி முகமது பின் துக்ளக் குற்றமற்றவர் என்பதனை நிரூபணம் செய்கிறார்.

### ஆகா மஹதி ஹுசைன்

இலண்டனில் 1935-இல் டாக்டர் பட்டத்திற்காக துக்ளக் வம்சம் குறித்து ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்றவர் ஆகா மஹதி ஹுசைன். அந்த நூல் 1963-இல் Thacker spink Calcuttaவில் இருந்தும், S.Chand & Co டில்லியிலிருந்து 1976-இலும் 675 பக்கங்களில் வெளிவந்துள்ளது. 1938-இல் The Rise and Fall of Muhamad bin Tughluq என்னும் நூல் Luzac வெளியீடாக வந்தது. 1972-இல் டில்லியிலிருந்து 274 பக்கங்களிலும், 2012-இல் 254 பக்கங்களிலும் அது நூலாக வெளிவந்துள்ளது. இதில் விரிவாக ஆராய்ந்து முஹம்மது பின் துக்ளக் குற்றமற்றவர் என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

Mahdi Husain and Moinul Haq have exonerated Muhammad bin Tughluq of complicity in any conspiracy against Ghiyas-ud-din and have shown that the Sultan's death was due to accident.

### காலிக் அஹமது நிஜாமி

கியாசுத்தீன் துக்ளக் மறைவு விபத்தினால்தான் நிகழ்ந்தது. அதில் முஹம்மது பின் துக்ளக்கின் சதி ஏதுமில்லை என்று காலிக் அஹமது நிஜாமி தெளிவு படுத்தியுள்ளார்.

### பரனியின் சுருக்கமான கூற்று

கியாசுத்தீன் துக்ளக் மறைவு பற்றி பரனீ மிகச் சுருக்கமாகக்

கூறியுள்ளார். ஆப்கன்பூரில் அமைக்கப்பட்டிருந்த மரத்தாலான அரண்மனைக்குச் சென்ற பிறகு அனைவரும் உணவருந்தினார்கள். மலிக்குகளும், அமீர்களும், கைகளை கழுவுவதற்கு வெளியே வந்தனர். அப்போது ஆகாயத்திலிருந்து பூமியில் வாழ்ந்து வந்த மக்கள் மீது பேரிடி விழுந்தது. அதன் விளைவாக அரண்மனையின் கூரைதிடீரெனக்கீழே விழுந்தது. அதன் கீழே உட்கார்ந்திருந்த (கியாசுத்தீன் துக்ளக் சுல்தான்) அதனடியில் சிக்கி உயிரிழந்தார்.

**தெளிவில்லை**

கியாசுத்தீன் துக்ளக்கோடு உடனிருந்த ஐந்து அல்லது ஆறு பேர்களும் மாண்டனர். பரனீ கூறும் விவரங்கள் இவ்வளவுதான். அப்போது என்ன நடந்தென்று தெளிவாக நமக்குக் கூறவில்லை

**பேரிடி**

பேரிடி விழுந்தது. அல்லது பேரிடி போன்ற ஆபத்து வந்தது என்ற இருவிதமான பொருளை அவர் கூறுவதிலிருந்து பெற இயலும். பேரிடி என்பது பொருத்தமாக இல்லை. இடி போன்ற பெரிய ஆபத்து அப் போது ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்தது என்பதனை, அந்த ஆபத்து எது என்பதை பரனீ விளக்கவில்லை. எனவே அவருடைய கூற்றானது சரித்திரத்திற்குச் சான்றாகப் பயன் தரவில்லை.

**ஈஸ்வரி பிரசாத்**

டாக்டர் ஈஸ்வரி பிரசாத் "History of Mediaval India" எனும் நூல் 1966-இல் அலகாபாத்திலிருந்து வெளியிட்டார். 621 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 263-இல்

## சிறந்த நற்செயல்கள் எது?

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறியதாவது:

"நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "(நற்)செயல்களில் சிறந்தது எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது" என்று பதிலளித்தார்கள். நான் "பிறகு எது?" என்று கேட்டேன். "தாய் தந்தையருக்கு நன்மை புரிவது" என்றார்கள். நான், "பிறகு எது?" என்று கேட்டேன். அதற்கு "அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது" என்றார்கள். (நபி அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று) அவர்கள்மீது பரிவுகாட்டியே நான் மேலும் மேலும் கேட்பதை நிறுத்தி விட்டேன்." (நூல் : ஸஹீஹ் முஸ்லிம்)

முஹம்மது பின் துக்ளக்கை குற்றவாளி எனக் கூறுகிறார். ஆனால் அதே பக்கத்தில் அடிக் குறிப்பில் தரும் செய்தியை அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

Barani does not clearly State what happened he simply says "A thunder bolt of a calamity from heaven fell upon the Sultan and he was with five or six others crused under the debris".

முன்னர் கூறியதுபோல வானத்திலிருந்து பேரிடி போல வந்தது. மண்டபம் விழுந்தது. சுல்தான் கியாசுதீன் துக்ளக்கும் அவருடன் ஐந்து அல்லது ஆறு பேர்களும் மாண்டனர்.

**எலியட் தவறான மொழிபெயர்ப்பு**

பரணீயின் கூற்றை எலியட் தனது இந்திய வரலாற்றில் தவறாக மொழி பெயர்த்துள் ளார் என்று ஈஸ்வரி பிரசாத்தே கூறியுள்ளார்.

**மின்னல்**

Elliot has in correctly translated the passage from his translation it appears that lightning fell upon the roof and the whole structure came downwith a crash. But this is not in agreement with text of Barani என்று ஈஸ்வரி பிரசாத் எலியட்டின் மொழிபெயர்ப்பில் உள்ள தவறைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

(பரனீயின் கூற்றை சரியாக மொழி பெயர்த்தவர் உல்ஸ்லிஹைக்).

**தாரீக்-இ-முபாரக் ஷாஹி**

Tarikh-i-Mubarak Shahi தாரீக்-இ-முபாரக் ஷாஹி எனும் பாரசீக நூலை (Persian Text) கல்கத்தாவில் 1931இல் யஹ்யா பின் அகமது அஸ் சிர்கிந்தி வெளியிட்டார்.

**கே.கே.பாசு**

அதன் ஆங்கில மொழியாக்கத்தை கே.கே.பாசு 1932-இல் வெளியிட்டார். Geekwadi's oriental series, Baroda, LXIII (63) 1932.

**ஆர்.சி.மஜும்தார்**

'The history and culture of the Indian people' என்ற தலைப்பில் மும்பை (பம்பாய்) பாரதீய வித்யாபவன் இந்திய வரலாற்றை பதினொன்று தொகுதிகளாகத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அதில் ஆறாவது தொகுதி தில்லி சுல்தானியம், 913 பக்கங்கள், இந்தத் தொகுதிகளுக்கான பொது ஆசிரியர் பேராசிரியர் ஆர்.சி.மஜும்தார். அவர் கியாசுதீன் துக்ளக் குறித்த கட்டுரையையும் எழுதியுள்ளார். அந்த நூலில் பக்கம் 58இல் ஆர்.சி.மஜும்தார் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

# வாழ்க நலமுடன்

**- அன்வர் ஜீ,** சேலம் – 5.

## பொன்னாங்கண்ணிக் கீரை சாப்பிடுவதால் என்ன நன்மை?

1. ஊட்டச்சத்து, நீர்ச்சத்து, கொழுப்புச்சத்து, மினரல் சத்துக்கள், கார்போ ஹைட்ரேட், கால்சியம், பாஸ்பரஸ், புரதம் ஆகிய சக்திகள் இதில் உள்ளன.
2. எலும்புகளை உறுதியாக்கும். ஆரோக்கியத்திற்கும் உதவும், வைட்டமின் 'A' அதிகமாக இருப்பதால் கண் பார்வை நன்றாக இருக்கும்.
3. இந்த கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டால் எடை குறையும்.
4. மாறாக பருப்பும் நெய்யும் கலந்து சமைத்து சாப்பிட்டு வந்தால் எடை கூடும்.
5. இரத்தம் விருத்தியாகும். நமது தோலின் மினுமினுப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்யும். முகம் பளபளப்பாக, அழகாக மாறும்.

## சக்கரவர்த்திக் கீரை சாப்பிடுவதால் என்ன நன்மை?

1. பெயரைப் போலவே திடமானது.
2. இரும்புச் சத்து அதிகமாக உள்ளது; நோய்கள் வராமல் தடுக்கும்.
3. எலும்பு, நரம்பு, தசை நார்களை பலப்படுத்தும்.
4. இரத்தத்தை சுத்தப்படுத்தும்.
5. பித்தமும், உஷ்ணமும் உடலிலிருந்து நீங்கிவிடும்.
6. கொக்கிப்புழு, நாக்குப் பூச்சி போன்ற பூச்சிகளை ஒழிக்கும்.
7. உடலுக்கு சக்தியையும், அழகையும் தரும்.
8. பொட்டாசியம், சோடியம், மெக்னீசியம் போதிய அளவு இருப்பதால் சிறுநீரக நோய்கள், வயிற்றுப்போக்கு, வாயுத் தொல்லையைப் போக்கிவிடும்.
9. நீர்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, தாது உப்புகள், நார்ச்சத்து, வைட்டமின்கள் - A, B, C நிறைந்தது.

## வல்லாரைக் கீரை சாப்பிடுவதால் என்ன நன்மை?

1. ஞாபக சக்தி, ஆரோக்கியம் தரும்.
2. இரத்தத்தை சுத்தம் செய்யும்; புண்களை ஆற்றும்.
3. இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, வைட்டமின் - A, C, தாது உப்புகள் ஏராளமாக உள்ளன.
4. தொண்டைக்கட்டு, பல் நோய், பசி, தாகம், படை ஆகியவற்றை குணப்படுத்தும்.
5. பசும்பாலுடன் சேர்த்து சாப்பிட்டால் மாலைக்கண் குணமாகும்.
6. வல்லாரைக் கீரை + மிளகு சேர்த்து பச்சையாக சாப்பிட்டால் உடல் சூடு தணியும்.
7. குழந்தைகளின் வளர்ச்சி கூடுதலாகும்.
8. இந்த கீரை சாப்பிடும் நாட்களில் அசைவ உணவு, அகத்திக் கீரை, பாகற்காய் சாப்பிடக் கூடாது.

## பாலைக் கீரை சாப்பிடுவதால் என்ன நன்மை?

1. இந்தக் கீரையில் இரும்புச் சத்தும், வைட்டமின் - A அதிக அளவில் உள்ளன.
2. புரதம், கொழுப்பு, மாவுப்பொருள், கால்சியம், பாஸ்பரஸ், நைட்ரஜன், வைட்டமின் - C, போலிக் அமிலம் ஆகிய சத்துகள் உள்ளன.
3. இந்த கீரையுடன், கொள்ளு சேர்த்து சூப் வைத்து, எலுமிச்சம் பழச்சாறு கலந்து தினம் இருமுறை சாப்பிட்டால் வயிற்றுவலி குணமாகும்.
4. ஞாபக சக்தியை வளர்க்கும்.
5. தொண்டை கமறலுக்கு இதன் கஷாயம் அருமையான மருந்தாகும்.

## வாழைப்பழம் சாப்பிடுவதால் என்ன நன்மை?
## வாழைப்பழம் எனப் பெயர் வர காரணம் என்ன?

மனிதன் வாழ்வதற்குரிய அனைத்து தாது உப்புகளும் இந்த பழத்தில் உள்ளன. மனிதனை நன்றாக வாழ வைப்பதால் "வாழைப்பழம்" எனப் பெயர் வந்தது.

1. புத்துணர்வைத் தரும், கோபத்தைக் குறைக்கும்.
2. வாத நோயை தடுக்கும். ஞாபக சக்தியை அதிகப்படுத்தும்.
3. மலச்சிக்கலைப் போக்கும்.
4. இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்தும்.
5. எலும்புகளையும், பற்களையும் உறுதியாக்கும்.
6. மூட்டுவலி வராமல் தடுக்கும்.

# வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உறுதிப் பிரமாணம்

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்**

குறைஷிகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களின் அன்பையும், அனுமதியையும், அபிமானத்தை யும் பெற்றிடவும் இந்த ஒருவராவது இருக்க மாட்டாரா! எனும் எண்ணத்திலேயே உம்ரா செய்ய இவரை அனுப்பி வைத்திருந்தார்கள். இறை யில்லம் எல்லார்க்கும் பொது வானது. இங்கு நுழைவதற்கு எவரிடத்தும் அனுமதி கோர வேண்டிய அவசியமில்லை. இதுதான் அன்றைய மரபும், நியதியும். எனினும் அரபுக் குறைஷியர் இதைப் பிரச்சனை யாக்கிவிட்டதால்... சர்ச்சை யாக்கிவிட்டதால் இறைத் தூதர் அமைதிமயமான வழி களைக் கையாண்டார்கள். ஆனால், ஒன்றுமட்டும் உண்மை யாக இருந்தது. ஆம்! அதுதான்!

மொத்தத்தில் அண்ணலு டன் ஆயிரத்து நானூறு பேர் இருந்தனர். அவர்கள் அனை வரும் ஒன்று திரண்டு கிளர்ந் தெழுந்தால் அன்றைய சூழலில் அரபுக் குறைஷிகளால் எதிர்த்து நிற்க முடியாது போயிருக்கும். அண்ணலிடம் அத்தனை பல மும் இருந்தது. ஆனால், அண் ணல் அதை விரும்பவில்லை. வன்முறை, பலாத்காரத்தின் வழி இறையில்லத்தில் நுழைந்து இறைவணக்கம் ஆற்றுதல் முறையல்ல. அது மற்ற யாத்ரிகர் களுக்கும் பெருந்தொல்லையாக அமையும் என்று இறைத்தூதர் நினைத்திருக்கலாம்.

இறைத்தூதர் எவ்வளவுக் கெவ்வளவு பணிவாக நடந்து கொண்டார்களோ அதைக் காட்டிலும் பன்மடங்கு குறைஷியர் எகிறிக்குதித்தனர். பெருமானாரின் பணிவை, பல வீனம் எனக் கருதி விட்டார்கள் அந்தப் பாமரத்தனமானவர்கள். அண்ணலின் அடக்கத்தை இயலாமை என எண்ணி விட் டார்கள் அந்த அறியாமைக் காரர்கள். இதனால் “கிறாஷ்” அவர்களின் ஒட்டகத்தின் காலை ஆத்திரத்துடன் வெட்டி னார் அபூஜஹ்லின் மகன் இக்ரிமா. அவரது ஆத்திரவெறி அந்த வாயற்ற ஜீவனோடு

நிற்கவில்லை. கிறாஷ் (ரளி) அவர்களையும் தாக்க முற்பட்டார். நல்லவேளை ஹுலைஸும், அவரது குழுவினரும் அவரை அதட்டித் தடுத்துவிட்டனர். "ஒரு தூதராக - நல்லெண்ண விஜயமாக வந்துள்ள இவரைத் தாக்குவது எந்த வகையில் நியாயம்?" என்ன ஆனது உங்களுக்கு? அப்பட்டமாக பன்னெடுங்காலத்திய மரபை மீறுகிறீரே! நீதியைக் கொலை செய்கின்றீரே!" ஹுலைஸ் நியாயமான ஆத்திரத்தோடு கத்தினார். அப்படியே அடங்கிப்போனார் இக்ரிமா.

அக்கணமே திரும்பிய "கிறாஷ்" அண்ணலிடம் நிகழ்ந்ததைக்கூறினார். அங்கு நிலவிய நிலைமையை விளக்கினார். எனினும் மேலான குறைஷியரின் மதிப்பிற்குரிய ஒருவரை அனுப்புங்கள் உத்தமரே! என்ற கருத்தையும் முன் வைத்தார். ஹள்ரத் உமர் (ரளி) அவர்களை அனுப்பஎண்ணிய அண்ணலார் அவரை அழைத்தார்கள். உமர் பெரும் வீரர். எளிதில் உணர்ச்சி வசப்படும் நியாயமான கோபக்காரர். தனது நிலையை நன்கு அறிந்திருந்த உமர் (ரளி) "குறைஷியரின் அடாதடிப் பேச்சால் அகந்தையான போக்கால் எங்கே தானும் அவ்வாறு ஆகி அதனால் அமைதியான நிலை கொந்தளிப்பாகி இறை வணக்கம் (உம்ரா) ஆற்றும் வாய்ப்பு இல்லாமல் ஆகி விடுமோ என சிந்தித்தாரோ என்னவோ, "அண்ணலே! எனது நிலை தங்களுக்குத் தெரியும். ஆங்கு ஏதேனும் விபரீத விளைவுகள் ஏற்பட்டால் என்னுடன் சேர்ந்து எனக்காகத் துணை நின்று போராடி என்னைப் பாதுகாக்குமளவுக்கு வலிமையுள்ள எனது கோத்திரத்தார் அங்கு எவரும் இல்லை. எனது கோத்திரத்தாரான "பனீ அதீக்" மிகவும் பலவீனப்பட்டவர்களாக தற்போது இருக்கின்றனர்.

தூதரே! பெரும்பாலோரின் நன்மதிப்பைப் பெற்ற நல்ல பாதுகாப்புள்ள, எல்லாரின் செல்வாக்கையும் கொண்ட கோத்திரத்தையுடைய ஹள்ரத் உத்மானுப்னு அஃப்பான் (ரளி) அவர்களை அனுப்புங்கள். இதற்கு அவரேமிகவும்பொருத்தமானவர் என்றார் உமர் (ரளி).

உமரின் கூற்று முற்றிலும் உண்மையாக இருந்தது. இதுவே மிகவும் "சரி" என உத்தமருக்குப்பட்டது. உத்மான் (ரளி) அவர்களை அழைத்து அண்ணல் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அண்ணலின் ஆணைக்கிணங்க உத்மான் (ரளி) மனநிறைவுடன் ஏற்றுக் கொண்டார். தமது செல்வாக்கைப் பயன்படுத்தி எப்படியும் இறையாலயத்திற்குள் நுழையும் அனுமதியைப் பெற்று வரும் உறுதியுடன் உத்மான் (ரளி) புறப்பட்டார்கள்.

இறைதூதரின் தூதராக உத்மான் (ரளி) மக்கா வந்தார். மாபெரும் வணிகச் செல்வரும், தமது கோத்திரத்தைச் சார்ந்த வருமான உத்மானை அவரது அப்துஷ்ஷம்ஸு குலத்தினர் அன்பொழுக வரவேற்று நன்கு உபசரித்து அளவளாவினர். ஆறாண்டுகளுக்குப்பிறகு அவரைப் பார்த்த அவரது கோத்திரத்தார் பாசத்தைப் பொழிந்து பரவசப்பட்டனர்.

உறவினர்களின் பாச உறவில் திளைத்திட்ட உத்மான் (ரளி)தான் வந்த நோக்கத்தை எடுத்துரைத்தார்கள். அதைக் கேட்டமாத்திரத்தில் அவரது கோத்திரத்தாரின் முகமே மாறி விட்டது. “என்ன உத்மான்? இதற்குப் போய் நீங்கள் தூது வந்திருக்கின்றீர்களே! முஹம்மதின் மீதும், அவரைச் சார்ந்தோர் மீதும் நாங்களும் குறைஷித் தலைவர்களும் நமது நகரத்தினரும் கடுங் கோபமாக இருக்கிறோம். அவரால்தான் இந்த அரபு சமுதாயமே பிரிந்து பிளவு பட்டுச்சிதைந்துசின்னாபின்னப் பட்டு போயிற்று. நெடுங்காலமாக இருந்து வந்த எங்களது செல்வாக்கும், மதிப்பும், மரியாதையும் எல்லாமே இல்லாமல்போயிற்று. எனவே, அவரின் சார்பில் நீர் வந்திருப்பதை எங்களால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. ஏதோ எங்கள் மீது அன்பு - பாசம் கொண்டு பாசத்தைப் புதுப்பித்து உறவைப் பரிமாறிக் கொள்ளத்தான் இங்கு நீங்கள் வந்திருப்பதாக நாங்கள் எண்ணியது தவறாகி விட்டது.

எவ்வகையிலும் முஹம்மதோ அவரைச் சார்ந்தோரோ இந்த நகருக்குள்ளும் கஅபா ஆலயத்துள்ளும் நுழைந்திட ஒரு போதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். வேண்டுமானால் உங்களுக்கு ஓர் அனுமதி தருகின்றோம். நீங்கள் எங்கள் குலத்தார் கோத்திரத்தார் என்பதற்காக நீங்கள் மட்டும் இப்போதே சென்று இறையாலயத்தில் வணக்கத்தை (உம்ரா) தாராளமாக நிறைவேற்றலாம்; அதற்கான ஏற்பாட்டை நாங்கள் இப்போதே செய்வோம்” என்றார்கள்.

“என்ன சொல்கிறீர்கள்? என்னுயிரினும்மேலான இறைத்தூதரும், இனிய தோழர்களும் இல்லாமல் என்னை மட்டும் இறையாலயத்தில் நுழைய அனுமதிக்கின்றீர்களா? இந்த அனுமதி எனக்குத் தேவையில்லை. இதை ஒரு போதும் என்னுள்ளம் ஏற்காது. எனது பாசமிக்க உறவினர்களே! இறைவனின் திருத்தூதராம் அண்ணல் நபிகளாரை எங்கள் உயிர் - உடைமை - பெற்றோர் - உறவினர் இந்த உலகம் அனைத்தைக் காட்டிலும் அதிகமாக நேசிக்கின்றோம். இதுதான் உண்மை. எல்லார்க்கும் பொதுவான இந்த இறை

ஆலயத்தில் இறை வணக்கம் செய்யும் ஆர்வத்துடன் தான் புறப்பட்டு வந்துள்ளோம். வேறெந்த நோக்கமும் எங்களுக்கில்லை. இறைவன் பெயரால் அறுத்து ஏழை எளியோர்க்கு வழங்க எண்ணற்ற ஒட்டகங்களையும் இழுத்து வந்துள்ளோம். நாங்கள் பொய் சொல்ல மாட்டோம். வஞ்சம் - கபடம் - வினயம் - எதையும் வைத்துக் கொண்டு பேச மாட்டோம். நாங்கள் முஸ்லிம்கள்; இவையெல்லாம் பாவங்கள் என இறைத்தூதர் சொல்லி இருக்கின்றார்கள். இறைமறை அறிவித்திருக்கின்றது.

நான் உங்களிடம் வந்திருப்பதின் நோக்கமே என்னை நீங்கள் அறிவீர்கள். நான் வேறு யாருமல்ல. உங்களின் இரத்த உறவுச் சொந்தக்காரன்; உங்களில் ஒருவன்; மக்காவில் செல்வாக்குமிக்க கோத்திரத்தாரில் நீங்களும் இடம் பெற்றிருக்கின்றீர்கள். உங்களின் பேச்சுக்கு ஏனைய தலைவர்கள் இசைவு தெரிவிப்பார்கள். எங்களின்நிலையைநன்குவிளக்கிக் கூறி அனுமதி பெற்றுத் தருவீர்கள் என்பதற்காகவே உங்களை நாடி நம்பிக்கையுடனும், துணிவுடனும்வந்தேன். ஆனால் நீங்களோ கோபத்துடனும், பகைமையுடனும் இருக்கின்றீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்றார் உதுமான் (ரளி) உணர்ச்சிப்பூர்வமாக.

இறைஆலயத்தில் வணக்கம் செய்யும் அரிய வாய்ப்பு தனக்கு வழங்கப்பட்டும் உதுமான் (ரளி) மறுத்து விட்டார்கள். தனது தலைவராம் இறைத்தூதருக்கு மறுக்கப்பட்ட அனுமதி தனக்குத் தேவையில்லை எனத் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டார்கள். அதுவும்தனதுஉறவுக்காரர்களின் பாச மழையில் மூழ்கி விடா மல் இறைத்தூதரின் நம்பிக்கைக்குரிய தூதராகக் கடமையாற்றினார்கள். தனது நெருங்கிய குடும்பத்தினராயிற்றே. இவர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமே என்றெண்ணி அவர்களின் பக்கம் சாய்ந்துவிடவில்லை அந்த சாதனைக்காரச் செல்வச் சீமான்.

இந்தப்பண்புதான் உத்தமத் தோழர்களிடம் இயல்பாகிவிட்ட உன்னத குணம். துளியும் சுய நலமில்லாமல் முற்றிலும் இறை நெறிக்குக்கட்டுப்பட்டு இறைக் கட்டளைக்கு அடிபணிந்து வாழும் உயர் நிலையில் இருந்தனர் அச்சான்றோர்கள். "உதுமான்" தன் கோத்திரத்தாரிடம் வந்திருக்கின்றார் என்பதைத் தெரிந்து கொண்ட குறைஷிய கெடுமதியாளர்களில் சிலர் அப்படியே அவ்வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டுக் கொண்டனர். வெறி கொண்டு கத்தி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தூது சென்ற உதுமான் (ரளி) இன்னும் திரும்பி வராததைக் கண்ட அண்ணலின் மனதில்

சோகம் பற்றிக் கொண்டது. மிகவும் கவலைப்பட்டார்கள். என்ன ஆனது? ஏன் இன்னும் காணோம்? என்றெல்லாம் எண்ண ஆரம்பித்தார்கள். இதற்கிடையில் பேரதிர்ச்சி தரும் செய்தியொன்று திடீரெனப் புறப்பட்டு வந்தது. "உதுமான் கொல்லப்பட்டு விட்டார்" என்பதுதான் அந்தச் செய்தி.

செய்தி கேட்ட இறைத் தூதர் பெரிதும் துடித்துப் போனார்கள். என்ன இது? கொடுமையிலும் பெருங் கொடுமையாக இருக்கின்றதே! தூது சென்ற ஒருவர் கொல்லப் படுவதென்பது மிகவும் கடுமை யானதாயிற்றே! நாடுகளுக் கிடையிலான பொது நியதியை இப்படி பகிரங்கமாக மீற இவர்களுக்கு எப்படி இந்தத் துணிச்சல் வந்தது? நீதியை இப்படி அப்பட்டமாகக் கொன்று புதைக்கின்றனரே... என அண்ணலார் கலங்கினார்கள்... கவலைப்பட்டார்கள்.

தமது தோழர்களனைவரையும் ஒன்று கூட்டினார்கள். "தோழர்களே! நமது தூதராக மக்காவிற்குள் சென்ற உதுமான் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தி வந்திருக்கின்றது. இது வதந்தியோ உண்மையோ! ஆனால் அப்படி ஏதேனும் நிகழ்ந்திருந்தால் இதற்கு நீதி கிடைக்கும் வரை தமது இறுதி மூச்சு உள்ளவரை போராட வேண்டும்" என்று உணர்ச்சிப் பூர்வமாகப் பேசினார்கள். இறைத் தூதரின் எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்க தாங்கள் அனைவரும் முழு மனதுடன் தயாராக இருப்பதாக அத்தனை பேரும் உறுதி கூறினர். அந்த உறுதிமொழி வெறும் வார்த்தைகளாக இருக்கவில்லை.

அருகருகே சிறுசிறு மலைக் குன்றுகள் பாலைவனத்துப் பழுப்பேறி வெளிறிக் கிடந்த மணற்பரப்பில் அமைந்திருந்த அந்த ஹுதைபிய்யாவில் சிறு நிழலைத் தந்து கொண்டு அடர்ந்து படர்ந்ததாக ஒரு கருவேல மரம் நின்று கொண்டிருந்தது காய்ந்து உதிர்ந்து கருகிப் போன இலைகளுக்குப் பின் சிறு சிறு கொழுந்து தளிர் களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த வேலமரம். கோடை காலக் கொதிக்கும் வெப்பத்துக்குத் தாக்குப் பிடித்துத் தளிர் விடும் மகிமை வேல மரத்துக்கும், வேப்ப மரத்துக்கும் உண்டு. தமிழகத்து முகவைப் பகுதிகளில் காட்டுக் கருவேலமாய் ஆங்காங்கு முளைத்து அதிக விறகுகள் கரிகளுக்குப் பயன்படும் இந்தக் காட்டுக் கருவேல மரம்தான் அரபு நாடுகளின் அகன்ற சாலைகளின் நடுவே நடப்பட்டு அழகுச் செடிகளாக அணிவகுத்து நிற்கின்றன. அங்கெல்லாம் சாலைகளின் சோலைகளாக இந்த முட்

செடிகளே பயன்படுகின்றன. கோடைக்கும், குளிருக்கும், கொட்டும் மழைக்கும், பனிக்கும் ஈடு கொடுத்து நிற்கும் இதன் மதிப்பு அங்குதான் உயர்ந்து நிற்கின்றது போலும்.

அம்மரத்தின் அடியில் அமர்ந்திருந்த அண்ணலிடம் ஒவ்வொரு தோழரும் வந்தனர். "அண்ணலே... எங்களுக்கு அறிவான உண்மை நெறியைக் காட்டிய இறைத் தூதரே... உதுமான் கொல்லப்பட்டது உண்மையானால் எங்கள் உயிர் இருக்கும் வரை அக்கிரமக்கார அரபுகளை எதிர்த்துப் போராடுவோம் இது உறுதி. இது உடன்படிக்கை" எனக் கூறி உத்தமத் திருத்தூதரின் கரத்தின் மீது கரம் வைத்து உறுதி கூறினர்.

ஜுன் துப்னு கைஸ் என்பாரைத் தவிர முஸ்லிம்கள் அனைவரும் அண்ணலின் கரங்களின் மேல் தம் கரங்களை வைத்து சத்தியப் பிரமாணம் செய்து தந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றில் இந்த வரலாற்றுப்பூர்வ உடன்படிக்கை - பைஅத் ரிள்வான் (இறைப் பொருத்தத்திற்குரிய உடன்படிக்கை) எனக் குறித்துச் சிறப்பிக்கப்படுகின்றது. இறைமறை அல்குர்ஆன் இந்த உடன்படிக்கை பற்றி இவ்வாறு தெரிவிக்கின்றது.

"(தூதரே) எவர்கள் உம்மிடம் உறுதிப் பிரமாணம் செய்து கொண்டிருந்தார்களோ அவர்கள் உண்மையில் அல்லாஹ்விடம் உறுதிப்பிரமாணம் செய்து கொண்டிருந்தவர்களாவர். அவர்களுடைய கைகளின் மீதி அல்லாஹ்வின் (பிரதிநிதியின்) கைகள் இருந்தன. ஆகவே யாரேனும் இந்த உறுதிப் பிரமாணத்தை முறித்தால் அதை முறித்ததன் கேடு அவரையே சூழும். மேலும் எவர் இறைவனிடம் தான் செய்திருந்த உறுதிப் பிரமாணத்தை நிறைவேற்றுகின்றாரோ அவருக்கு இறைவன் அதிவிரைவில் மகத்தான நற்கூலியை வழங்குவான்." (அத்தியாயம் 48 : வசனம் 10)

## அமைதியின் சின்னம் அண்ணலார்

உண்மையை உளப்பூர்வமாக ஏற்று ஓர் உன்னத இலட்சியத்திற்காக ஒன்றிணைந்திருக்கும் அந்த உத்தமர்கள் இலட்சியத்தை அடைவதற்காக உண்மையைக் காப்பதற்காக உயிரையும் அர்ப்பணிக்க முன் வந்தார்கள். அனைவரின் எண்ணமும் ஒன்றாக இருந்தது. உணர்ச்சிப் பூர்வமாக அமைந்திருந்தது அந்த உறுதிப் பிரமாணம்.

ஹுதைபிய்யாவில் இந்த அர்ப்பணிப்பு நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. உதுமான் (ரளி) கொலை செய்யப்பட்டு விட்டதாக வந்த செய்தி பொய் என்றும், இது ஒரு வதந்தி என்

றும் தெரிய வந்தது. இதற்கிடையே மக்கா சென்ற உதுமானும் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்து அண்ணலும், அவர்களின் அன்புத் தோழர்களும் அகமகிழ்ந்தனர். இறைவனுக்கு நன்றி கூறிக் கொண்டனர். ஆரத் தழுவி அளவளாவி மகிழ்ந்தனர்.

மக்காவாசிகளுக்கு பீதி பிடித்துக் கொண்டது. அச்சம் பற்றிக் கொண்டது. இந்தப் பிரச்சனையை எவ்வாறு எதிர் கொண்டுசமாளிப்பதுஎனத்தெரியாமல் குழம்பினர். "யாத்ரிகா தர்மத்தின்" அடிப்படையிலேயே இவர்கள் புறப்பட்டு வந்திருந்ததுதான் இவர்களுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. மிகுந்த நெருக்கடியிலும் இக்கட்டிலும் மாட்டிக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தனர். இவர்களது அரசியல் யுத்த வரலாற்றில் இவ்வாறானதொரு நெருக்கடியை இவர்கள் சந்தித்ததேயில்லை.

துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தனர் குறைஷியர். ஸுஹைல் பின் அம்ர் என்பவரின் தலைமையில் ஒரு தூதுக் குழுவை நபிகளாரிடம் அனுப்பி ஓர் உடன்பாடு செய்து கொள்வதுதான் அந்த முடிவு. ஸுஹைல் நல்ல அனுபவ முதிர்ச்சி நிறைந்தவர், திறமையான, சாதுரியப் பேச்சுக்காரர், விவாதத்திலும் கெட்டிக்காரர். முழுக்க முழுக்க குறைஷியரின் உணர்வு - எண்ணங்களைப் பிரதிபலிப்பவர். இவருடன் மிக்ராஸ், ஹுவைதிப் இருவரும் சென்றனர். இவர்களும் காரியக்காரர்கள்; வினயமானவர்கள்.

உடன்பாட்டின் வாசக வரிகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பன போன்றவற்றையும் அரபுத் தலைவர்கள் முன்னதாகவே ஒன்றுகூடி கலந்து பேசி திட்டம் தீட்டியே ஸுஹைலை அனுப்பினர். ஸுஹைல் அண்ணலிடம் வந்தார். தான் வந்த நோக்கத்தை இறைத்தூதரிடம் எடுத்துரைத்

## தொழுபவரின் நிலை!

"உங்களில் ஒருவர் தொழுது கொண்டிருக்கும்போது கண் அயர்ந்துவிட்டால், அவரைவிட்டு உறக்(கக் கலக்)கம் விலகும் வரை (தொழுகையிலிருந்து விலகி) அவர் உறங்கட்டும்! ஏனெனில், உங்களில் ஒருவர் உறங்கியவாறே தொழுவாரானால், அவர் பாவமன்னிப்புக் கோரப் போய், தம்மையும் அறியாமல் தம்மைத் தாமே ஏசிக் கொள்ளக்கூடும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி)

தார். புன்னகையுடன் அவரை வரவேற்ற அண்ணல் அவரிடம் அளவளாவினார்கள். தாங்கள் வந்திருப்பதன் நோக்கத்தை ஸுஹைலுக்கு விளக்கிக் கூறிய அண்ணலார் அதற்கான சான்றுகளாக குர்பானிப் பிராணிகளை காட்டினார்கள். அவை அமைதியாக அசை போட்டுக் கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் அறிந்து கொண்டாலும் எப்படியும் இவ் வாண்டு இவர்களை மக்காவிற் குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்பதில் வறட்டுப்பிடி வாதமாய் இருக்கும் குறைஷியரின் பிரதிநிதியல்லவா? எதற்கும் அசைந்து கொடுப்பவராகவோ மசிபவராகவோ இல்லை. தீர்மானமான ஒரு முடிவுடனேயே வந்திருந்தார்.

"முஹம்மதே! ஒரு நெருக்கடியான நிலை எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்த நெருக்கடியை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணத்துடன்தான் நான் இங்கு வந்திருக்கின்றேன். உங்களுக்கும் எங்களுக்குமிடையே ஓர் உறுதியான உடன்படிக்கை செய்து கொள்வதுதான் இந்த நெருக்கடியைத் தீர்க்கும் என எண்ணுகின்றோம். இது நமக்கிடையிலான ஒரு சமாதான உடன்படிக்கை, அமைதி ஒப்பந்தம் என்றும் வைத்துக் கொள்ளலாம். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? உங்கள் கருத்து என்ன?" என்று வினவினார் ஸுஹைல்.

உலகில் அமைதி நிலவ சமாதானத் தூதராக வந்த அண்ணலார், ஸுஹைலின் பேச்சைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார்கள். "ஸுஹைலே! இந்த நல்லெண்ணத்துடன் ஒப்பந்தம் செய்ய வந்துள்ள உம்மைப் பெரிதும் வரவேற்கிறேன். மக்களிடையே போர் – பூசல் - சண்டை - சச்சரவு இல்லாதிருந்தால் அவர்களது வாழ்வு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். நிம்மதியாக வாழ்வார்களே!" உளப்பூர்வமாக உத்தமர் அவரின் கருத்தை வரவேற்றார்கள்.

## அல்லாஹ் மகிழ்ச்சிப்படுத்தும் செயல்

"ஒரு முறை உணவு உண்ட பின்னர் அதற்காக அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்கின்ற, அல்லது ஒரு முறை பானம் அருந்திய பிறகு அதற்காக அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்கின்ற அடியான் குறித்து அல்லாஹ் உவகை கொள்கிறான்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள்

(நூல் : முஸ்லிம் – 5282)

அண்ணலின் பேச்சும், பண்பும் ஸுஹைலைப் பெரிதும் கவர்ந்தன. "முஹம்மத்" மாபெரும் சமாதான விரும்பியாக இருக்கின்றாரே என உள்ளூரவியந்தார். "முஹம்மதே! நாம் செய்யப் போகும் இந்த உடன்பாடு வெறும் பேச்சளவில் இருந்தால் போதாது. அது எழுத்தாகப் பதியப்பட்டு உறுதி பெற வேண்டும்" என்றார் ஸுஹைல். "ஆம்! அதுதான் சரி. இதுவே முறையானதும் கூட" என்றார்கள் அண்ணலார்.

உடன்பாட்டினை எழுதிட அறிஞர் அலீ (ரளி) அழைக்கப் பட்டார். பணிவுடன் வந்தார். ஹள்ரத் அலீ (ரளி) அவர்களின் ஏடும், எழுத்தாணியும் அங்கு எடுத்து வரப்பட்டன. இஸ்லாமிய நெறிமுறை மரபின் அடிப்படையில் ஆரம்பமாக "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் எழுதினார். இதன் பொருள் : அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல இறைவன் அல்லாஹ்வின் திருப்பெயரால் என்பதாகும். பொதுவாக எந்தவொரு நற்காரியத்தை ஆரம்பித்தாலும் தொடங்கினாலும் இந்த வாசகத்தைச் சொல்ல வேண்டும். எழுத வேண்டும் என்பது அண்ணலின் கட்டளை.

"இறைத்திருப்பெயர் கூறித் தொடங்கப்படாத எந்தக் காரியமும் வெற்றி பெறாது" என்பது நபிமொழி. உண்மை தானே! எல்லாம் வல்ல இறைவனால்தான் எல்லாம் இயங்குகின்றன. அவனே அகிலங்களின் அதிபதி; அருளும் அன்பும் நிறைந்தவன். அவனை நம்பியே எதையும் தொடங்க வேண்டும். இது இஸ்லாமியம்.

மனிதன் அறிவும், ஆற்றலும் திறனும், ஆளுமையும் உள்ளவனாக இருந்தாலும் எல்லாமும் என்னால் முடியும் என்பது இயலாத ஒன்று. இது ஒரு வகையான இறுமாப்பும், மமதையுமாகும். எல்லாம்வல்ல இறைவனால் தான் எல்லாம் முடியும். "நான் உழைப்பேன்; முயற்சிப்பேன் காரியமாற்றுவேன்... கடமை

## தூங்கி எழுந்தவுடன் என்ன செய்ய வேண்டும்?

எழுந்தவுடன் மூன்று முறை "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூற வேண்டும். அதற்குப்பின் கலிமா தய்யிபாவை (லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்று கூற வேண்டும். அதற்குப்பின் தூங்கி எழுந்தவுடன் ஓதக்கூடிய துஆவை اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ ஓத வேண்டும்.

யைச் செய்வேன். அதை முடித்துத் தருவது... நிறை வாக்குவது... வெற்றியைத் தருவது இறைவனது கரங்களில்" என எண்ணும் மன நிலையே இறை நம்பிக்கையாகும்.

உள்ளவாறே அறிவுள்ள எவரும் இதை ஆட்சேபிக்க மாட்டார். இதுதான் உண்மை. இதை ஸுஹைல் நன்றாகவே அறிந்திருந்தார் என்றாலும் ஆட்சேபித்தார். "என்ன இது புதிய வாசகம். புதிய கடவுள் பெயர். அல்லாஹ் என்ற பெரிய இறைவன்தான் எங்களுக்குத் தெரியும். உண்மையில் குறைஷியர் அல்லாஹ்வை ஏற்றே இருந்தனர். அது உருவ மில்லா ஒப்பாகும் மிக்காரு மில்லாத பெரிய கடவுள் என நம்பினர். சத்தியம் செய்வதாக இருந்தாலும் 'வல்லாஹி' (அல்லாஹ்வின் மீது சத்திய மாக) என்றுதான் சொல்லுவர்.

"இதோ பாருங்கள் இந்த ரஹ்மான், ரஹீம் என்பதெல் லாம் எங்களுக்குத் தெரி யாதவை. நாங்கள் ஏற்காதவை. வேண்டுமானால் "பிஸ்மிகல்லா ஹும்ம (அல்லாஹ்வே உனது பெயரால்) என எழுதுங்கள்" என்றார் ஸுஹைல். தோழர் கள் அனைவரும் கொதித்துப் போயினர். ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது.

(தொடரும்)


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் :
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# படித்ததில் பிடித்தது...

"ஔரங்கஜீப், பாபர் ஆகிய மன்னர்களால் கூட சனாதன தர்மத்தை ஒழிக்க முடியவில்லை" என்று பேசியிருக்கிறார் உ.பி.முதல்வர் யோகி!

யோகி அவர்களே!

ஒரு செய்தி தெரியுமா உங்களுக்கு?

அந்த மன்னர்கள் இந்து மதத்தையோ, சனாதன தர்மத்தையோ ஒழிக்க வந்தவர்கள் அல்லர்.

சொல்லப்போனால் அத்தகைய மன்னர்களின் சேவைகளால்தான் சனாதன தர்மமும், இந்து தர்மமும் இன்றும் நடைமுறையில் உள்ளன.

தன்னுடைய குடிமக்களான இந்துக்கள் மீதும், இந்து மதத்தின் மீதும் பாபர் கொண்டிருந்த மரியாதைக்கு ஒரே ஓர் எடுத்துக்காட்டு தருகிறோம்.

தம் மகனுக்கு அவர் சொன்ன அறிவுரை :

"மகனே! இந்துக்கள் பசுவைத் தெய்வமாக வழிபடுகிறார்கள். ஆகவே, உனது ஆட்சியில் பசுவைக் கொல்ல அனுமதிக்காதே"

போதுமா யோகி அவர்களே?

மன்னராட்சியாக இருந்தும், அதுவும் முஸ்லிம் மன்னராட்சியாக இருந்தும் இந்து மதம் மதிக்கப்பட்டது.

நல்லிணக்கம் பேணப்பட்டது.

ஆனால், இன்றைய ஜனநாயக ஆட்சியில், நீங்கள் ஆளும் உ.பி.யின் கதை என்ன? நாம் சொல்ல வேண்டிய தேவையே இல்லை.

அடுத்து ஔரங்கஜீப்.

"கோவிலை உடைத்தார், சிலைகளை உடைத்தார்" என்பனவெல்லாம் ஆங்கில வரலாற்றாசிரியர்கள் கட்டி விட்ட கட்டுக்கதைகள்.

ஔரங்கஜீப் பற்றிய உண்மையான வரலாறுகளைச் சொல்லும் நூற்கள் நிறைய வந்துவிட்டன. தெரியுமா யோகி அவர்களே?

ஔரங்கஜீப் கொடுமையானவர் எனில், கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் இந்தியத் துணைக் கண்டத்தைக் கட்டி ஆண்டது எப்படி?

அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் ஒரே நாடாக இணைக்கப்பட்டது.

அதாவது "ஒரே நாடு ஒரே மக்கள்" என்கிற நல்லாட்சியை நடத்தினார் ஔரங்கஜீப்.

இந்துக்களையும், இந்து ஆன்மிகவாதிகளையும் ஔரங்கஜீப் பெரிதும் மதித்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த குமர குருபரர் காசியில் ஒரு மடம் அமைக்கத் தீர்மானித்தார்.

ஔரங்கஜீபிடம் கோரிக்கை வைத்தார்.

அனைத்துவிதமான உதவிகளையும் தயக்கமின்றிச் செய்தார் மன்னர் ஔரங்கஜீப்.

காசியில் இன்னும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது அந்த மடம்.

காசி வேறு எங்கும் இல்லை. உ.பி.யில்தான் இருக்கிறது யோகி அவர்களே! நேரில் பார்த்துகூட நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

ஆகவே, பாபரும், ஔரங்கஜீபும் மட்டுமல்ல. இந்தியாவை ஆண்ட எந்த முஸ்லிம் மன்னருக்கும் இந்து மதத்தையோ, சனாதன தர்மத்தையோ ஒழிக்கும் எண்ணம் இருந்ததில்லை.

யோகி அவர்களே!

பாபரும், ஔரங்கஜீபும் மன்னர்கள். ஆயினும், அவர்களிடம் இதர மதங்கள் மீது வெறுப்பு இருந்ததில்லை.

நீங்களோ துறவி!

வெறுப்பு அரசியலைத் தவிர உங்களிடம் வேறு என்ன இருக்கிறது?

சனாதனத்திற்கோ, இந்து மதத்திற்கோ ஏதேனும் ஆபத்து எனில், அது நிச்சயமாய் முஸ்லிம்களிடமிருந்து வராது.

தொடர் : 3

# இஸ்லாம் கூறும் நாவடக்கம்

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

ஒருவர் மனதில் நம்மை பற்றிய நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு வெற்றி பெற வேண்டும்என்றால் நீங்கள் புன்னகைப் பூக்கும் முகத்துடன் காணப் பட வேண்டும். இதன் மூலம் தான் உரையாடலை நகர்த்தக் கூடிய தகவல்களை, உணர்வு களை, முக்கிய சொற்களை அல்லது சொற்றொடர்களை எதிரில் இருப்பவரின் மனதில் பதிய வைக்க முடியும். அடுத்த படியாக இஸ்லாம் யாரிடமும் அருவெறுப்பாக பேசவேண்டாம் என்றுஎடுத்துக்கூறுகிறது. இந்த விஷயத்தை நபி ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அழுத்தம் திருத்தமாக அருவெறுப்பாக பேச வேண் டாம் என்று கூறியிருக்கிறார்கள்.

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது :

“யூதர்கள் [சிலர்] நபி [ஸல்] அவர்களிடம் வந்து அஸ்ஸாமு அலைக்கும் [உங் களுக்கு மரணம் நேரட்டும்] என்று [முகமன்] கூறினர். உடனே நான் “அது] உங்களுக்கு நேரட்டும். மேலும், அல்லாஹ் தனது கருணையிலிருந்து உங்களை அப்புறப்படுத்தி உங் கள் மீது அல்லாஹ் கோபம் கொள்ளட்டும்” என்று [அவர் களுக்குப் பதில்] சொன்னேன். [அப்போது] நபி [ஸல்] அவர்கள், “ஆயிஷா! நிதானம்! [எதிலும்] நளினமாக நடந்து கொள். மேலும், வன்மையுடன் நடந்து கொள்வதிலிருந்தும் அரு வெறுப்பாக பேசுவதிலிருந்தும் உன்னை நான் எச்சரிக்கிறேன்” என்று சொன்னார்கள். அப் போது நான், “அவர்கள் சொன்னதை நீங்கள் செவி யேற்கவில்லையா?” என்று கேட் டேன். அதற்கு நபி [ஸல்] அவர் கள், நான் [அவர்களுக்கு] அளித்த பதிலை நீ கேட்க வில்லையா? [‘அஸ்ஸாமு’ எனும் சொல்லைத் தவிர்த்து ‘வ அலைக்கும்’ அவ்வாறே உங் கள் மீதும் உண்டாகட்டும் என்று] அவர்களுக்கு நான் பதிலளித்து விட்டேன். அவர் களுக்காக நான் செய்த பிரார்த்தனை ஏற்றுக்

கொள்ளப்படும். எனக்காக அவர்கள் செய்த பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படாது" என்று சொன்னார்கள்.

(ஸஹீஹ் புகாரி : 6030)

அருவெறுப்பாக பேசினால் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படுகிறது. கணவன் மனைவி இடையே சுமூகமான உரையாடல்கள் இல்லாததி னால் ஏறத்தாழ பதினொரு இலட்சத்திற்கு மேலான வழக்கு கள் குடும்ப நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கின்றன. அருவெறுப்பாக பேசுவதால் உடன் பிறந்தவர்களின் மத்தி யிலும், குடும்ப உறுப்பினர் களிடையேயும் ஒற்றுமை குலைந்து போகிறது. நண்பர் களிடம் பகை வளர்கிறது.

அண்டை வீட்டுக்காரர் களிடம் மனக்கசப்பு உண்டாகி விடுகிறது. அருவெறுப்பாக பேசுபவர்கள் வியாபார ஸ்தலங் களிலும், அலுவலகங்களிலும் ஒதுக்கப்பட்டு தனிமைப் படுத்தப்படுகின்றனர்.

அருவெறுப்பான பேச்சின் காரணமாக ஒரு நாடு போரில் தோல்வியடைந்தது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். இரண்டாம் உலகப் போர் நடந்த காலக்கட்டத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்தது. ஜெர்மனி தலைநகரமான பெர்லின் நகரில் நடுக்காட்டில் பூமிக்கடியில் ஒரு பெரிய அலுவலகத்தை அமைத்து, அங்கு ஹிட்லர் அவருடைய இராணுவ அதிகாரிகளுடன் போரைப் பற்றிய இரகசிய விஷயங்களை விவாதித்து வந்தார். பூமிக்கடியில் இருக்கும் அலுவலகத்தை ஆங்கிலத்தில் பங்கர் என்று கூறுவார்கள். 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம்தேதி ஹிட்லரின் இராணு வம் முழுவதுமாக தோற் கடிக்கப்பட்டதும் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து கூட்டணி இராணுவம் பெர்லின் நகருக்குள் புகுந்து ஹிட்லரின் மாளிகைகளையும், இராணுவ அலுவலகங்களையும் முற்றுகை யிட்டது. ஹிட்லரை உயிரோடு கைது செய்ய வலைவீசி அவரை தேடிக் கொண்டிருந்தபோது அவரும், அவர் காதலி ஈவா அன்னா ப்ரவ்ன் ஆகிய இரு வரும் பங்கர் அலுவலகத்திற் குள் நுழைந்து ஒளிந்து கொண் டார்கள். அன்றிரவு ரஷ்ய இராணுவம் பங்கர் அலுவலகம் இருக்குமிடத்தை தெரிந்து கொண்டு சரமாரியாக வெடி குண்டுகளை வீசிக் கொண்டி ருந்தது. இனியும் உயிரோடிருந் தால் தன்னை கைது செய்து விடுவார்கள் என்று அஞ்சிய ஹிட்லர் மறு நாள் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி மதிய வேளையில் தன்னுடைய கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் மனைவி

சயனைடு விஷத்தைத் தின்று இறந்துபோனாள். தான் இறந்து போனால் தன்னுடைய உடல் எதிரிகளுக்குக் கிடைக்கக் கூடாது என்று ஹிட்லர் ஏற்கனவே, அவருடைய மெய்க் காப்பாளர்களுக்கு கூறியிருந்தார். அதன்படி அவர்கள் அவருடைய உடலை இரகசிய வழியாக பங்கருக்குள் இருந்து வெளியில் கொண்டு வந்து ஒரு புதரில் வீசியெறிந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக ரஷ்ய வெடிகுண்டு அவர் உடல் மீது விழுந்து வெடிக்க அவர் உடல் உரு தெரியாமல் சின்னாப்பின்னமாகி விட்டது.

வெடிகுண்டுகளை வைத்து பங்கர் கதவுகளை தகர்த்து அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து கூட்டணி இராணுவம் பங்கருக்குள் நுழைந்தது. அப்போது அங்கிருந்த ஹிட்லரின் மெய்க்காப்பாளர்கள் துப்பாக்கியால் தங்களைத் தாங்களே சுட்டுக் கொண்டு மரணித்தனர். அங்கிருந்த சில ஊழியர்களும், சமையல் செய்யும் பெண்களும் கைது செய்யப்பட்டனர். அந்த பங்கருக்குள் நிறைய அறைகள் இருந்தன. ஒவ்வோர் அறையாக கூட்டணி இராணுவம் திறந்து பார்த்துக் கொண்டு வந்தபோது ஓர் அறையில் 25 வயதுள்ள ஓர் அழகான பெண்ணும், 27 வயதுள்ள ஓர் ஆணும் உட்கார்ந்திருப்பதைக் கண்ட கூட்டணி இராணுவம் அவர்களை கைது செய்து விசாரணைக்காக இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பி வைத்தது.

கைது செய்யப்பட்ட பெண்ணின் பெயர் ட்ராடுல் ஜங்கே. ஜெர்மனிய பத்திரிகை ஆசிரியையான இவள் ஹிட்லரின் காரியதரிசியாக மூன்றாண்டுகள் பணியாற்றினாள். கைது செய்யப்பட்ட இளைஞனின் பெயர் ஓட்டோ ஆர்ம்ஸ்டர். இவன் இராணுவத் தளபதிகளுக்கு தந்தி மூலம் இரகசிய செய்திகளை அனுப்பும் வயர்லெஸ் இன்ஜினியர்.

அந்தக் காலத்தில் தந்திகளை ஆங்கில மொழியில் மட்டுமே அனுப்ப முடியும். ஆங்கிலத்தில் அனுப்பப்படும் தந்திகளை மற்றவர்கள் படித்துவிடுவார்கள் என்று அஞ்சிய ஹிட்லர் ஆங்கிலத்தில் இரகசிய வார்த்தைகளை உருவாக்கச் சொன்னார். அதன்படி இரகசிய வார்த்தைகள் உருவாக்கப்பட்டு தந்திகள் அனுப்பப்பட்டன. உதாரணமாக போர்க்கப்பல்கள் (WARSHIPS) என்ற வார்த்தைக்கு க்சென்பின் (XENPIN) என்ற இரகசிய வார்த்தை உருவாக்கப்பட்டது. தந்திகள் ஆங்கிலத்தில் இருந்தாலும் அவற்றிலுள்ள இரகசிய வார்த்தைகளை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஒரு தொழில் நுட்பத்தின் மூலம் இந்த தந்திகளை பதிவிறக்கம் செய்து படித்த அமெரிக்க தந்தி இலாகா

அதிகாரிகளுக்கு அவற்றிலுள்ள இரகசிய வார்த்தைகளை புரிந்து கொள்ள முடியவில்லை.

விசாரணையின்போது ஓட்டோ ஆர்ம்ஸ்டர் கொடுத்த வாக்குமூலம் அன்றைய பத்திரிகைகளில் தலைப்பு செய்தியாக வெளிவந்து, அன்றைய மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒரு நாள் ஓட்டோ ஆர்ம்ஸ்டர், பங்கருக்குள் அமர்ந்து இரகசிய தந்திகளை அனுப்பிக்கொண்டிருந்தார். அப்போது ஹிட்லரின் காரியதரிசி ட்ராடுல் ஜங்கே அவனிடம் வந்து ஜெர்மனிய போர்க்கப்பல் களின் தளபதிகளுக்கு இரகசிய தந்தி ஒன்றை அவசரமாக அனுப்ப வேண்டும் என்று கூறி ஹிட்லரின் ஆணையை அவனிடம் கொடுத்தாள். அமெரிக்காவிலிருக்கும் கார்பஸ் கிறிஸ்டி என்ற மிகப் பெரிய துறைமுகத்தின் மீது வெடிகுண்டுகளை வீசி அந்தத் துறைமுகத்தை தரைமட்டமாக்கி விட வேண்டும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த ஆணையை ஓட்டோ ஆர்ம்ஸ்டர் இரகசிய வார்த்தைகளைக் கொண்டு தந்தி ஒன்றை தயாரித்து ஜெர்மனி போர்க் கப்பல்களின் தளபதிகளுக்கு உடனடியாக அனுப்பி வைத்தாக வேண்டும்.

அவர் அந்த தந்தியை தயாரித்துக் கொண்டிருந்த போது அவருடைய மேலதிகாரி அவர் அனுப்பிய தந்திகள் உணவுக் கிடங்குகளுக்கு சரியான நேரத்தில் போய் சேரவில்லை என்று அவனை அருவெறுப்பான வார்த்தைகளால் ஏசினார். “வேசியின் மகனே” என்றும் அவரைத் திட்டினார். தந்திகள் சரியான நேரத்தில் போய் சேரவில்லை என்ற தவறுக்கு அவர் பொறுப்பேற்க முடியாது. இதையறியாத அந்த மேலதிகாரி அவரை கீழ்த்தரமாக திட்டியதால் அவருக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. அவர் மிகவும் நொந்து போனார். அவர் மன உளைச்சலோடு தந்தியை அனுப்பும்போது அவரை அறியாமல் அதில் ஒரு தவறைச் செய்தார். தந்தியை இரகசிய வார்த்தைகளைக் கொண்டு அனுப்புகின்றபோது போர்க்கப்பல்கள் என்ற வார்த்தைக்கு க்சென்பின் (XENPIN) என்ற இரகசிய வார்த்தையை டைப் செய்யாமல் WAR SHIPS என்று ஆங்கிலத்தில் டைப் செய்து அனுப்பிவிட்டார்.

இந்த தந்தியை பதிவிறக்கம் செய்த அமெரிக்க தந்தி இலாகா அதிகாரிகள் அந்த தந்தியில் போர்க்கப்பல்கள் WAR SHIPS என்று ஆங்கிலத்தில் டைப் செய்திருப்பதைப் படித்தவுடனே அதை அப்போதைய கப்பல்படைத் தளபதி சி.டபிள்யூ.நிமிட்ஸ் என்பவருக்கு அனுப்பி வைத்தனர்.

தளபதி நிமிட்ஸ் அதி பயங்கர மான புத்திசாலி. WAR SHIPS என்று ஆங்கிலத்தில் டைப் செய்திருப்பதைப் படித்தவுடன் ஜெர்மனி போர்க்கப்பல்கள் அமெரிக்க துறைமுகத்தைத் தாக்க வருகின்றன என்பது அவருக்கு புரிந்துவிட்டது. அதுவும் கார்பஸ் கிறிஸ்டி துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்துவார்கள் என்றும் அவர் மிகத் துல்லியமாக யூகித்தார். கார்பஸ் கிறிஸ்டி துறைமுகத்திற்குள் ஜெர்மனி போர்க்கப்பல்கள் நுழைய முடியாதபடி அமெரிக்க போர்க்கப்பல்களை நிறுத்தினார். ஜெர்மனி போர்க்கப்பல்கள் கண்ணில் தென்பட்டதும் தாக்குதல் நடத்த வேண்டும் என்றும் கப்பல் கேப்டன்களுக்கு உத்தரவிட்டார்.

ஜெர்மனி போர்க்கப்பல்கள் கண்ணில் தென்பட்டதும் அமெரிக்க போர்க்கப்பல்கள் அதிரடி தாக்குதல்களை நடத்தின. இந்த தாக்குதல்களை சற்றும் எதிர்பாராத ஜெர்மனி போர்க் கப்பல்கள் பின்வாங்கி ஓட ஆரம்பித்தன. அமெரிக்க போர்க் கப்பல்கள் ஜெர்மனி போர்க் கப்பல்களை துரத்தித் துரத்தி வெடிகுண்டுகளை வீசின. ஜெர்மனி போர்க்கப்பல்கள் நடுக்கடலில் சிதறிப் போயின. இந்த கால கட்டத்திலிருந்து தான் ஹிட்லருக்கு தோல்வி சகாப்தம் ஆரம்பித்தது.

அருவெறுப்பான சொற்கள் ஒரு நாட்டிற்கு எவ்வளவு பெரிய சேதங்களை விளைவிக்கும் வலிமை கொண்டவை என்பதை இந்த சம்பவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.

ஆகவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருவெறுப்பான பேச்சுகளை தவிர்க்கும்படி நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் முப்பத்தி இரண்டாவது ஜனாதிபதியாக பதவி வகித்த ரூஸ்வெல்ட் இளைஞராக இருந்தபோது ஒரு பெரிய கோடீஸ்வரரின் மகளை காதலித்தார். திருமணத்தைப் பற்றி பேச தன்னுடைய தாயாரை அந்த கோடீஸ்வரரிடம் அனுப்பி வைத்தார்.

பல கப்பல்களுக்கு சொந்தக்காரரான அந்த கோடீஸ்வரர் திருமணத்திற்கு ஒப்புக் கொள்ளாமல் அந்தப் பெண்மணியை அருவெறுப்பான வார்த்தைகளால் ஏசி அவமானப்படுத்தினார். அவமானப்பட்டு திரும்பி வந்த ரூஸ்வெல்டின் தாயார் "மகனே! அவன் என்னை கீழ்த்தரமான வார்த்தைகளால் ஏசி என்னை அவமானப் படுத்தி விட்டான். அவனை நீ பழிவாங்க வேண்டும். நீ வாழ்க்கையில் அவனை விட உயர்ந்த நிலைக்கு வந்து அவனை வெட்கத்தில் தலை குனியச் செய்ய வேண்டும்.

அதுதான் பழி வாங்குவதற்கு சரியான முறை!" என்று அவருடைய தாயார் கூறினார். "தாயே! அவர் மிகப் பெரிய கோடீஸ்வரர். அவரைவிட அதிகமாக என்னால் எப்படி பணத்தை சம்பாதிக்க முடியும்? என்று ரூஸ்வெல்ட் கேட்டார். "மகனே! நீ அவனை விட அதிகமாக பணத்தை சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லை. நீ உயர்ந்த பதவிக்கு வந்தாலே போதும். அவன் வெட்கத்தில் தலைகுனிவான்" என்று அவனுடைய தாயார் கூற, அவரும் சரி என்று கூறினார்.

ரூஸ்வெல்ட் அரசியலில் ஈடுபட்டு பல்வேறு பதவிகளை வகித்து தன்னுடைய 51வது வயதில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்குள் அவருடைய தாயார் இறந்து விட்டார். தன்னுடைய தாயாருக்கு வாக்கு கொடுத்தபடி ரூஸ்வெல்ட் அந்த கோடீஸ்வரனின் வீட்டிற்கு திடீரென்று சென்றார். அப்போது முதுமை வயதிலிருந்த அந்த கோடீஸ்வரருக்கு தாங்க முடியாத மகிழ்ச்சி. அமெரிக்க ஜனாதிபதியே தன்னுடைய வீட்டைத் தேடி வந்திருக்கிறார். அவரிடம் அன்பாகப் பேசி, அரசாங்க சம்பந்தப்பட்ட வணிக உரிமைகளையும், ஒப்பந்தங்களையும் பெற்று உலகத்திலேயே பெரும் பணக்காரராகிவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினார். ரூஸ்வெல்ட்டை அவர் தடபுடலாக வரவேற்று, பெரிய விருந்துக்கும் ஏற்பாடு செய்தார்.

அப்போது ரூஸ்வெல்ட் அவரிடம் தன்னுடைய தாயாரை அவருக்கு தெரியுமா என்று கேட்டார். அவர் தெரியாதே என்று சொன்னார். "பல ஆண்டுகளுக்கு முன் உங்கள் மகளை எனக்கு திருமணம் முடிப்பதற்காக உங்களிடம் பேச வந்த அந்தப் பெண்மணிதான் என்னுடைய தாயார்" என்று ரூஸ்வெல்ட் கூறியதும், அவர் அதிர்ச்சியில் உறைந்துபோனார். "ஜனாதிபதி அவர்களே! நீங்கள் பிற்காலத்தில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவீர்கள் என்று அப்போதே எனக்கு தெரிந்திருந்தால் நிச்சயமாக என் மகளை உங்களுக்கு திருமணம் செய்து கொடுத்திருப்பேன். ஏதோ தவறு நடந்து போய் விட்டது. என்னை மன்னியுங்கள். என்னை பழிவாங்குவதற்காக என்னுடைய வியாபாரங்களை தடை செய்து விடாதீர்கள்" என்று அவருடைய கைகளை பிடித்துக் கொண்டு மன்றாடினார். ரூஸ்வெல்ட் எதுவும் பேசாமல் சிரித்துக் கொண்டே அங்கிருந்து புறப்பட்டார்.

அன்றிலிருந்து அந்த கோடீஸ்வரருக்கு திகில் பிடித்து விட்டது. ரூஸ்வெல்ட் தன்னுடைய வியாபார உரிமங்

களை ரத்து செய்து விடுவாரோ என்று பயந்து இரவில் தூக்கமில்லாமல் தவித்தார். அமெரிக்காவில் அப்போதிருந்த பெரும் அரசியல் தலைவர்களை சந்தித்து ரூஸ்வெல்ட்டினால் தன்னுடைய வியாபாரங்களுக்கு இடையூறுகள் வந்து விடாமல் காப்பாற்றச் சொல்லி அவர்களின் கை கால்களை பிடித்துக் கொண்டு கெஞ்சினார். ரூஸ்வெல்ட் மிகவும் பெருந்தன்மையானவர். அவர் யாருக்கும் எந்தவிதமான தொல்லைகளையும் கொடுத்ததில்லை. ஆனால் அந்த கோடீஸ்வரர் சாகும் வரை நிம்மதி இல்லாமலேயே அலைந்து கொண்டிருந்தார். ஒருவரை அருவெறுப்பான வார்த்தைகளால் புண்படுத்தினால், அவ்வாறு புண்படுத்தியவரின் வாழ்க்கையில் அவரை அறியாமலேயே தொல்லைகள் துரத்த ஆரம்பித்துவிடுகின்றன என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. இதனால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருவெறுப்பான வார்த்தைகளால் யாரையும் புண்படுத்த வேண்டாம் என்று நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

தருமபுரி அருகே பழைய தருமபுரி என்ற ஊர் இருக்கிறது. இந்த ஊர் சங்க காலத்தில் தகடூர் என்று அழைக்கப்பட்டது. இந்த இடத்தை அதியமான் நெடுமானஞ்சி என்ற அரசன் ஆண்டு வந்தான்.

இவன் கடையேழு வள்ளல்களில் ஒருவன். இவன் காலத்தில் வாழ்ந்து வந்த சங்கப் புலவரான ஔவையாரின் மேல் அதிகப்படியான மரியாதையை வைத்திருந்தான். அதியமான் நெடுமானஞ்சிக்குக் கீழ் செல்வமிக்க பல சிற்றரசர்கள் இருந்தனர்.

அவர்களில் ஒருவன் நல்லூர் பொறை வரம்பன். இவன் மிகவும் கர்வம் பிடித்தவன். அந்த காலத்தில் பண முடிப்பை ஒரு தங்கத் தட்டில் வைத்து கொடுப்பார்கள். இந்த தங்கத் தட்டிற்கு பணத் தட்டு என்று பெயர். தன்னைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக்கு பெரிய பணமுடிப்பு கொடுப்பதாகவும் அந்த பண முடிப்பு வைக்கப்பட்டிருக்கும் பணத் தட்டையும் (தங்கத் தட்டு ) புலவர்களுக்கே கொடுத்து விடுவதாகவும் பொறை வரம்பன் தண்டோரா போடுவான். இதை கேட்ட புலவர்கள் அங்கு சென்று அவனை புகழ்ந்து பாடுவார்கள். உடனே பொறை வரம்பன் இந்தப் பாடலில் குற்றம் இருக்கிறது என்று கூறி அவர்களை அரு வெறுப்பான வார்த்தைகளால் ஏசுவான். அவர்களுக்கு சொற்ப பண முடிப்பை கொடுப்பான். பணத்தட்டும் (தங்கத் தட்டு) தருகிறேன் என்று தண்டோரா

போட்டீர்களே; பணத்தட்டை யும் தாருங்கள் என்று புலவர்கள் கேட்டால் அதற்கான அருகதை உங்களிடம் இல்லை என்று கூறி அவர்களை அவமானப் படுத்துவான். ஏழை புலவர்கள் அவன் தரும் சொற்ப பணத்தை வாங்கிக் கொண்டு அவனால் ஏற்பட்ட அவமானத்தையும் மூட்டை கட்டிக்கொண்டு அவர் களின் ஊர் போய் சேர்வார்கள். இப்படியே பல காலம் நடை பெற்றது. ஒரு நாள் புலவர்கள் அனைவரும் ஒன்று கூடி தமிழ் மூதாட்டி ஒளவையாரிடம் பொறை வரம்பனின் அட்டூழி யங்களை கூறினார்கள். அதிய மானிடம் இதைப் பற்றி எடுத்துரைத்து பொறை வரம்பனுக்கு தக்க தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்று ஒளவையாரிடம் முறையிட்டார் கள். ஏன் அதியமானிடம் முறை யிட வேண்டும்? நானே சென்று அவன் செருக்கை அடக்கி அந்த தங்கத் தட்டையும் வாங்கி வருகிறேன் என்று ஒளவையார் கூறினார்.

"தமிழ் மூதாட்டியே! நாங்க பட்ட அவமானமே போதும். உங் களை அவன் அவமானப்படுத்தி னால் அதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது" என்று புலவர்கள் கூற, "இல்லை நானே சென்று வருகிறேன்" என்று சொல்லி ஒளவையார் பொறை வரம்பன் ஊருக்குச் சென்றார்.

சங்கப் பெரும் புலவரான ஒளவையாரே தன்னை புகழ்ந்து பாட வந்திருக்கிறார் என்று நினைத்து பொறை வரம்பன் மகிழ்ந்தான். உம்மை புகழ்ந்து பாடினால் எனக்கு என்ன பரிசு தருவீர்?" என்று ஒளவையார் கேட்க, தங்கக் காசுகள் நிறைந்த பெரும் பண முடிப்பையும் பணத் தட்டையும் (தங்கத் தட்டையும்) உமக்குக் கொடுப்பேன் என்று பொறை வரம்பன் கூறினான்.

ஒளவையார் வேண்டு மென்றே இரண்டு வரிகளை பாடிவிட்டு "மன்னா! எனக்கு கொடுக்க வேண்டிய பரிசை கொடும். நான் ஊருக்கு செல்ல வேண்டும்" என்று கூறினார்.

"தமிழ் மூதாட்டியே! நீர் இரண்டு வரிகள் தானே பாடினீர்கள். எனக்கு திருப்தி இல்லை. ஆகவே கொஞ்சம் பணம் கொண்ட பண முடிப்பு தான் நான் தருவேன்" என்று பொறை வரம்பன் சொல்ல, "பரவாயில்லை மன்னா! நீர் எவ் வளவு கொடுத்தாலும் நான் வாங்கிக் கொள்கிறேன். ஆனால் நீர் கூறியபடி பண முடிப்பை பணத் தட்டில் (தங்கத் தட்டில்) வைத்து கொடுக்க வேண்டும்" என்று ஒளவையார் கூறினார். கொஞ்சம் பணம் கொண்ட பண முடிப்பை பணத் தட்டில் (தங்கத் தட்டில்) வைத்து பொறை வரம்பன் கொடுக்க அதை வாங்கிக் கொண்ட

ஔவையார், "மன்னா! பணத் தட்டு (தங்கத் தட்டு) யாருக்கு? உமக்கா? எனக்கா?" என்று கேட்டார். "தமிழ் மூதாட்டியே! நீர் இரண்டு வரிகள் தான் பாடினீர் கள். அதற்காக பணத் தட்டை (தங்கத் தட்டை) கொடுக்க முடி யாது. பணத் தட்டு எனக்குத் தான்; உமக்கு இல்லை" என்று பொறை வரம்பன் கூறினான். மீண்டும் மன்னா! பணத்தட்டு (தங்கத் தட்டு) யாருக்கு உமக்கா? எனக்கா? என்று ஔவையார் கேட்டார். "தமிழ் மூதாட்டியே! நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். பணத் தட்டு எனக்குதான்; உமக்கு இல்லை" என்று பொறை வரம்பன் கூறினான். மீண்டும் "மன்னா! பணத் தட்டு (தங்கத் தட்டு) யாருக்கு? உமக்கா? எனக்கா?" என்று ஔவையார் கேட்டார்.

எதற்காக இந்த தமிழ் மூதாட்டி பணத் தட்டு யாருக்கு? உமக்கா? எனக்கா? என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டே இருக்கிறார். இதில் சூட்சமம் எதுவும் இருக்குமோ என்று நினைத்த பொறை வரம்பன், "தமிழ் மூதாட்டியே! நீர் சற்று அமரும். நான் யோசித்து சொல்கிறேன் என்று கூறிவிட்டு, உள்ளே சென்று உட்கார்ந்து யோசித்துப்பார்த்தான். அப்போது தான் ஔவையார் கேட்ட கேள்வியில் இருந்த சூட்சுமம் அவனுக்குப் புரிந்தது. பணத் தட்டு என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் இருக் கின்றன என்பது அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது. பணத் தட்டு என்றால் பணம் வைக்கப்பட்டிருக் கும் தங்கத் தட்டு. பணத் தட்டு என்றால் பணத் தட்டுப் பாடு (பணப் பற்றாக்குறை) என்ற இன்னொரு அர்த்தமும் இருப் பதை உணர்ந்த அவன் என்ன செய்வது என்று யோசித்தான்.

பணத் தட்டு எனக்கு என்று சொன்னால் எனக்கு பணத் தட்டுப்பாடு வந்துவிட்டது என்று எனக்கு கீழ் இருக்கும் ஜமீன்தார்களும் பண்ணைக் காரர்களும் இன்னும் ஊழியர் களும் கைகொட்டி சிரிப்பார்கள். ஏளனம் செய்வார்கள். வெளி யில் தலை காட்ட முடியாது. அத னால் பணத் தட்டு உமக்கே என்று ஔவையாரிடம் சொல்லி விடுவதே நல்லது என்று முடிவு செய்து கொண்டு அவன் வெளியே வந்ததும் ஔவையார் "மன்னா! பணத் தட்டு யாருக்கு? உமக்கா? எனக்கா?" என்று கேட்டார். "தமிழ் மூதாட்டியே! மன்னனாக இருக்கும் எனக்கு எப்படி பணத் தட்டு (பணத் தட்டுப்பாடு) வரும்? ஏழை புலவர்களான உங்களுக்குத் தான் பணத் தட்டு வரும். ஆகவே பணத் தட்டு எனக்கு இல்லை. உமக்கே" என்று பொறை வரம்பன் கூறியதும், தங்கத் தட்டை வாங்கிக் கொண்டு ஔவையார் ஊர் வந்து சேர்ந்தார். (தொடரும்)

# வரலாற்றில் ஓர் ஏடு

"அல்லாஹ்வை நினைவுகூர்தல், மிகப்பெரிய [நன்மை] ஆகும்" - அல்குர்ஆன் [29 : 45]

"என்னை நீங்கள் நினைவு கூருங்கள்; நான் உங்களை நினைவு கூர்வேன்" - அல்குர்ஆன் [2 : 152]

வரலாற்றில் ஒரு நாள் :

மக்காவாசிகளான ஏழைகள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தனர். "வசதியானவர்கள் அருட்கொடைகளைப் பெற்றுள்ளனர்; நாங்கள் தொழுவது போலவே, நாங்கள் நோன்பு வைப்பது போலவே அவர்களும் தொழுகிறார்கள், நோன்பு வைக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் செல்வம் அதிகம். அதனால் ஹஜ், உம்ரா செய்கின்றனர். தர்மம் தருகின்றனர். (எங்களுக்கு இயலவில்லையே?)" என்று சொன்னார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஒரு செயல்மூலம் அவர்களை நீங்கள் முந்துவீர்கள் அப்படிப்பட்ட செயலை உங்களுக்குக் கூறட்டுமா?" என்றார்கள். "இறைத்தூதர் அவர்களே! கூறுங்கள்" என்றனர்.

"ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் நீங்கள் 33 தடவை 'சுப்ஹானல்லலாஹ்' (தஸ்பீஹ்) கூறுங்கள். 33 தடவை 'அல்ஹம்துலில்லாஹ்' (தஹ்மீது) கூறுங்கள். 33 தடவை 'அல்லாஹு அக்பர்' (தக்பீர்) கூறுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு மீண்டும் நபி (ஸல்) அவர்களிடம் மக்காவாசிகளான ஏழைகள் வந்தார்கள். "எங்களின் சகோதரர்களான பணக்காரர்கள் நாங்கள் செய்வது பற்றி கேள்விப்பட்டு, அதுபோலவே செய்கின்றார்கள்" என்று சொன்னார்கள்.

"இது அல்லாஹ்வின் அருட்கொடை; அல்லாஹ் தான் விரும்பியோருக்கு அதைக் கொடுப்பான்" என்று நபி (ஸல்) அவர்கள் பதில் சொன்னார்கள்.

ஆதாரம் : ரியாளுஸ்ஸாலிஹீன் ஹதீஸ் 1418, புகாரி 843

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## பரிபூரண சுகம் பெற

குர்ஆனின் குரலுக்காக சென்னை மாநகரின் பல பகுதிகளின் பள்ளிவாசல்களுக்கும் சென்று உழைத்து உழைத்து, இந்த சமுதாயத்திற்கு நிறைய நன்மைகளை செய்ய வேண்டும் என்ற நன்நோக்கில் தம் வாழ்நாளை செலவு செய்த எங்கள் குடும்பத் தலைவர் ஜனாப் **அப்துல் ஜப்பார்** அவர்கள் உடல் நோயுற்று மிகுந்த சிரமத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். அன்னாரின் நோய்கள் முழுமையாக நீங்கவும், அவர்களின் நன்மைகள் கபூலாகவும், ஈருலகின் ஆரோக்கிய மான வாழ்வுக்காகவும் அனைவரும் துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

**- அப்துல் ஜப்பார் குடும்பத்தினர்,**

விருகம்பாக்கம், சென்னை.

அப்ஸரா பானு - சென்னை; ஹலீமா - திருச்சி; ஹபீபுன்னிஸா - ஈரோடு; எம்.ஷானவாஸ் - திருச்சி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; காஜா மைதீன், ஜாகீர் உசேன் - மங்கலம்; சந்தா எண் L1262 - பெங்களூரு; எஸ்.எம்.சுல்தான் - திருச்சி; அ.சம்சாத், தஸ்லீமா, அ.சப்ரின் - பெங்களூரு; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; அ.ராபியத் பஸரியா - மூணார்; அ.ஹாஜரா - கர்நாடகா; சேகர் - ஈரோடு; எம்.உமர் - ஈரோடு; அ.அப்துல்லாஹ், உஷனாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; பாத்திமா - பழனி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; அ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; மும்தாஜ் - தஞ்சாவூர்; பீ.செல்வம் - ஈரோடு; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; ரேஷ்மா - திருச்சி; சந்தா எண் F595 - திருச்சி;

கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; சார்மிளா - பெரியகுளம்; நிஷா - கோவை; சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; பி.சுபைதா - சோழமாதேவி; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; அஜீமா பீபீ - ஈரோடு; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; முஹம்மது அஷ்ரஃப் அலீ, ஜஸீமா பானு, பாத்திமா ரஸ்வின், ஹாஜி எம்.காதர் இப்ராஹீம், மர்ஹூம் எஸ்.கே.ஏ.முஹம்மது இஸ்மாயீல், எம்.ஜெய்த்தூன் பீவி - திருச்சி; சந்தா எண் B979 - சின்னதாராபுரம்; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; காமிலாபானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபீனா, அன்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - மதுரை; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது - சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக் கடை; அ.அப்துல் ஹமீது - காரைக்கால்;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் கோர்ட்டில் நடந்து வந்த வழக்கின் தீர்ப்பில் எங்கள் பக்கம் வெற்றி கிடைத்துள்ளது. துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஜஸாகுமுல்லாஹு கைரா! **ஹபீபுன்னிஸா - ஈரோடு.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

மதுரை காஜிமார் தெருவைச் சேர்ந்த மர்ஹூம் ஜனாப் Dr. Y. சமஸ்கான் (ரஹ்) அவர்களின் அன்பு பேரரும், ஜனாப் Dr. S. முஹம்மது கான் அவர்களின் அன்பு மகனாருமான ஜனாப் Dr. M.முஹம்மது சுஹைல் கான் அவர்கள் விபத்தில் 26.11.23 அன்றும்,

மதுரை பெத்தானியாபுரம் ஹள்ரத் உமர் (ரளி) ஜாமிஆ மஸ்ஜிதின் செயலாளரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால வாசகருமான ஜனாப் மஹபூப் பஷீர் அவர்கள் 17.12.23 அன்றும்,

கரூர் மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை தலைவரும், தாருல் உலூம் சவூதிய்யா அரபிக் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும், தோகைமலை ஜவாஹிருல் உலூம் அரபிக் கல்லூரியின் முதல்வருமான மவ்லானா மவ்லவீ அல்ஹாஃபிழ் E. M. சுல்தான் சையது இப்ராஹிம் ரஷாதி ஹள்ரத் அவர்கள் 28.12.23 அன்றும்,

திருப்பூர் மாவட்டம் மங்கலம் பெரிய பள்ளிவாசலின் முன்னாள் தலைவரும், மங்கலம் சன் மெடிக்கல் உரிமையாளர் ஜனாப் M.ஹபீபுர் ரஹ்மான் அவர்களின் அருமைத் தகப்பனாருமான கால்நடை மருத்துவர் அல்ஹாஜ் A. முஹம்மது இல்யாஸ் அவர்கள் 29.12.23 அன்றும்,

கரூர் பள்ளபட்டி மர்ஹூம் சவ்வாஸ் அப்துர் ரஹீம் (ரஹ்) அவர்களின் அன்பு மகளாரும், மர்ஹூம் குருணகுளத்துபட்டி முஹம்மது அலீ (ரஹ்) அவர்களின் அருமைத் துணைவியாரும், "ரஹ்மானியா மளிகை" ஜனாப் அப்துல் ரஹ்மான், ஜனாப் பாபு முஜீப் ஆகியோரின் அருமைத் தாயாருமான ஜனாபா அபிநீஸா அவர்கள் 28.12.23 அன்றும்,

கரூர் பள்ளபட்டி அல்ஹாஜ் மர்ஹூம் கரத்தவான அப்துல் ஹை அவர்களின் மூத்த மகனார் அல்ஹாஜ் அன்வர் அலீ அவர்கள் 31.12.23 அன்றும்,

கரூர் பள்ளபட்டி மர்ஹூம் கோரையுத்து (மூப்பர்) K .T. ஷேக் அலீ இராவுத்தர் (ரஹ்) அவர்களின் இரண்டாவது மகனார் அல்ஹாஜ் மூப்பர் K.S.சௌக்கத் அலீ அவர்கள் 09.01.24 அன்றும்,

வேலூர் ஜாமிஆ அல் பாகியாதுஸ் ஸாலிஹாத் அரபு கல்லூரியில் கால் நூற்றாண்டுக்கும் அதிகமாக பணியாற்றிய வரும், அல்லாமா "முஃப்தீ அஃழம்" அப்துல் வஹ்ஹாப் ஹள்ரத்

(ரஹ்) அவர்களின் மூத்த மகனாருமான மவ்லானா மவ்லவி அல்ஹாஜ் ஹாஃபிழ் "ஷம்ஸுல் உலமா" குலாம் முஹ்யித்தீன் பாஜில் பாகவி ஹள்ரத் அவர்கள் 11.01.24 அன்றும்,

ஈரோடு மூங்கில் கடை மர்ஹூம் அலாவுதீன் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், பெரிய அக்ரஹாரம் மர்ஹூம் K.M. அப்துல்ஸமது (ரஹ்) அவர்களின் அன்பு மருமகனாரும், ஜனாப் S.A. அஹமது நௌபல் அவர்களின் அருமை மாமனாருமான ஜனாப் K.A. அப்துல் பாரி (Retd Agri) அவர்கள் 12.01.24 அன்றும்,

மதுரை கோரிப்பாளையம் ஜனாப் M. அஹமது கபீர் அவர்களின் அருமைத் துணைவியார் ஜனாபா A. அஸரிபா பானு அவர்கள் 13.01.24 அன்றும்,

கர்நாடக மாநிலம் குண்டல்பேட்டையில் வசித்து வந்தவரும், திருப்பூர் மங்கலம் அல்ஹாஜ் M. நசீர் அஹமது அவர்களின் மாமாவுமான அல்ஹாஜ் ம.மே.க. அப்துல் பாரி சாஹிப் அவர்கள் 14.01.24 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நாகர் ஹோட்டல் உரிமையாளர் அல்ஹாஜ் M. முஹம்மது காஸிம் அவர்கள் 18.01.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

## உஹுத் மலை அளவு நன்மை எப்போது கிடைக்கும்?

ஹள்ரத் அபூஹாஸிம் சல்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"ஜனாஸா (பிரேத)த் தொழுகையில் பங்கேற்றவருக்கு ஒரு "கீராத்" (நன்மை) உண்டு. மண்ணறையில் (கப்ரு) வைக்கப்படும் வரை அதைப் பின்தொடர்ந்தவருக்கு "இரண்டு கீராத்"கள் (நன்மை) உண்டு" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறினார்கள். நான் "அபூஹுரைரா (ரளி) அவர்களே! "கீராத் என்றால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் உஹுத் மலை அளவு" என்று விடையளித்தார்கள்.

# வாசகர் வட்டம்



குர்ஆனின் குரலின் வயது 66ஐ நிறைவு செய்து 67ல் அடியெடுத்து வைப்பதை பார்த்துப் படித்து மனம் மட்டற்ற சந்தோஷமடைந்தது. ஓராண்டா... இரண்டாண்டா.... அப்பப்பா! 66 ஆண்டுகள் இரு தலைமுறையாகும். கடந்து வந்த பாதை கடினம்தான். இனி (நடந்து) பயணம் செய்யக் கூடிய பயணமும் அதைவிட கடினமாக இருக்குமோ என அஞ்ச வேண்டியுள்ளது. பல காரணங்கள் : காகித விலையுயர்வு. இருப்பினும் குரல் தனது குரலை என்றும் குறைக்காமல் மென்மேலும் ஒலிக்க துஆ செய்கிறோம்.

சொர்க்கத்துக்கு சொந்தக்காரர்கள் என்ற தலைப்பில் ஜும்பை மவ்லானா எழுதியிருந்தவை அன்றாடம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியவையாகும். மவுத்துக்குப் பின் கூட வருவது வாரிசுகள் செய்யும் நல்ல துஆகள், ஸதகத்துல் ஜாரியா. எனவே, பொருளைத் தேடி அதை உரிய வழியில் செலவழித்து நாளை இறையருளைப் பெற வேண்டும் என்பதே கட்டுரை ஆசிரியரின் நாட்டமாக உள்ளது. அல்லாஹ் போதுமானவன்.

பா.ஜாகிர்முஹம்மது.
சேந்தமங்கலம்.

குர்ஆனின் குரலில் வரும் "பதில்கள்" பகுதியில் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஏற்படக்கூடிய சந்தேகமான கேள்விகளுக்கு தக்க பதில்களை அளித்து வருகிறார் முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல் ஹள்ரத் அவர்கள்! அவர்களுக்கு என் துஆ கலந்த பாராட்டுகள்! குர்ஆனின் குரல் மென்மேலும் வளர்ச்சியடைய நாம் துஆ செய்வோம்.

**A.K.பாட்சா,**
கோயம்புத்தூர்.

"அவ்வல் கலிமாவின் அந்தரங்கம்" பற்றி மவ்லவீ கலீலுர் ரஹ்மான் மன்பயீ அவர்கள் எழுதிவரும் தொடர்கள் நம்மனைவரையும் சூஃபிகளாக மாற்ற நினைக்கும் முயற்சி என்றே எண்ணத் தோன்றுகிறது. "இஸ்லாம் கூறும் நாவடக்கம்" என்ற கட்டுரையில் பல சுவையான வரலாற்றுச் செய்திகளைச் சொல்வதால் மேலும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை தூண்டுகிறது.

**முஹம்மது அக்ரம்,**
மதுரை.

ஜனவரி மாத இதழில் மிகவும் அற்புதமான கட்டுரைகள் நிறைந்திருந்தன. ஆசிரியர் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள். அல்ஹம்துலில்லாஹ்! இக்கட்டுரைகள் எழுதியவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். திரும்பத் திரும்பப் படிக்க வேண்டிய கட்டுரைகள்!

உ.S. Md [illegible]
[illegible]

நமது குர்ஆனின் குரல் ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2023 முடிய இரண்டு வருட இதழ்களை அல்லாஹ்வின் கிருபையால் உளுந்தூர்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்குக் கொண்டு சென்று நிர்வாகிகள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகியோரிடம் கொடுத்து பள்ளி லைப்ரேரியில் மாணவர்கள் படிக்கக் கொடுத்துள்ளேன். மிகவும் பயனுள்ள நமது குர்ஆனின் குரல் இதழ்களை மாணவர்கள் படித்து பயன் பெற்று வர அல்லாஹ்விடம் துஆ செய்வோமாக.

M. ஷியகத்அலி.
(Retd Postmaster)
எலவனாசூர் கோட்டை
607202

வி.டி.ராஜசேகர் ஷெட்டி எழுதிய "முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டம்" கட்டுரை ஆதாரப்பூர்வமாக அலசி ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் மட்டுமின்றி சமயச் சார்பற்ற சகோதர சகோதரிகளும் ஒன்றிணைந்து சங்கிகளின் திட்டங்களை தவிடு பொடியாக்கிட வேண்டும்.

**ஜே.பிரேம லதா எம்.ஏ.,**
**நாகர் கோவில்.**

## முஸ்லிம்களிடம் இருக்க வேண்டிய பண்புகள்!


"(ஆதாரமில்லாமல் பிறரைச்) சந்தேகப்படுவது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது மிகப்பெரிய பொய்யாகும். (பிறரின் குறையைத்) துருவித்துருவி ஆராயாதீர்கள். ஒட்டுக்கேட்காதீர்கள். ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள். பிணங்கிக் கொள்ளாதீர்கள். கோபம் கொள்ளாதீர்கள். (மாறாக,) அல்லாஹ்வின் அடியார்களே! (அன்பு பாராட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள்
(நூல் : ஸஹீஹுல் புகாரி)

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

# Ulama®

## LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in e: www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India